• Employment Law • Severance Packages • Landlord and Tenant Law • Wrongful Dismissal • Human Rights • Employment Standards
Aravinth Jegatheesan
Barrister and Solicitor
437.229.9643
ARAVINTH LAW 174 Davenport Rd, Toronto, ON

30 ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221

நதி: 30 | பாலம்: 08 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | APRIL 15, 2020

## கனேடிய நிறுவனங்களுக்கு $73 பில்லியன் அரச மானியம்!

கொரோனா வைரஸினால் பாதிப்புக்கு உள்ளான கனேடிய நிறுவனங்களுக்கு மத்திய அரசு வழங்கும் $73 பில்லியன் மானியம் தொடர்பான அவசரகாலச் சட்டமூலம் எதிர்க்கட்சிகளின் ஏகமனதான ஆதரவுடன் 2020 ஏப்பிரல் 11இல் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. C-14 எனப்படும் இந்த அவசரகாலச் சட்டமூலம் நாடாளுமன்ற இருசபைகளிலும் விவாதிக்கப்பட்டு கனடாவின் ஆளுனர் Julie Payetteஇன் அங்கீகாரத்துடன் அன்று மாலை 9:30 மணிக்கே அமலுக்கு வந்தது.

இந்தச் சட்டமூலம் ‘கனடா அவசரகால ஊதிய மானியம்’ (Canada Emergency Wage Subsidy) அதாவது CEWS என அழைக்கப்படும் இந்தச் சட்டமூலத்தின்படி தகுதிவாய்ந்த நிறுவனங்களுக்கு 75% ஊதிய மானியம் 12 வாரங்களுக்கு வழங்கப்படும். இந்த 12 வாரங்களின் ஆரம்ப நாளை 2020 மார்ச் 15ஆம் திகதி வரைக்கும் பின்னோக்கி நகர்த்த முடியும்.

இந்த CEWS சட்டம் மேலும் வேலை இழப்புக்களைத் தடுக்கும். அத்துடன் COVID-19இன் விளைவாகப் பணிநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களை மீண்டும் பணிக்கு அமர்த்தத் தொழிலதிபர்களை ஊக்குவிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த CEWS மானியம் பெறத் தகுதிவாய்ந்த நிறுவனங்களாகத் தனியார் நிறுவனங்கள், தனி ஒருவரால் நிர்வகிக்கப்படும் நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் (corporations), கூட்டுச்சேர்ந்த (partnership) நிறுவனங்கள், இலாப நோக்கற்ற நிறுவனங்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட தொண்டு நிறுவனங்கள் அடங்கும். மத்திய, மாகாண, உள்ளூராட்சிக்குட்பட்ட அரச நிறுவனங்கள், பொதுப்பல்கலைக் கழகங்கள், தொழிற்கல்லூரிகள், பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகள் போன்றவை இந்த CEWS மானியம் பெறத் தகுதியற்ற நிறுவனங்களாகும்.

கனேடிய அரசு 2020 மார்ச் 25இல் அமல்படுத்திய கனடா அவசரகால உதவிச் சட்டத்தின் மூலம் (CERB) உதவி



பெறுவோர் இந்தப் புதிய CEWS சட்டத்தின் மூலம் உதவி பெற முடியாது. ஒரு நிறுவனமோ, தனிநபர் ஒருவரோ இந்த இரண்டு முறைகள் மூலமும் பணம் பெறாமல் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளை அரசு அமல்படுத்த உள்ளது. ஒரு நிறுவனம் ஏற்கனவே பணிநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர் ஒருவரை மீண்டும் பணிக்கு அமர்த்தி CEWS மானியத்தின் மூலம் அவருக்கு ஊதியம் வழங்க முன்வந்தால், CERB மூலம் தற்போது பண உதவி பெறும் அந்தப் பணிநீக்கம் செய்யப்பட்ட ஊழியர் தனது CERB உதவி கோரலை இரத்துச்செய்து அதன்மூலம் பெற்ற பணத்தை அரசுக்குத் திரும்பச் செலுத்துவதன் மூலம் அவர் தன்னை மீண்டும் பணிக்கு அமர்த்திய தனது நிறுவனத்தின் மூலம் தனது ஊதியத்தைப் பெறலாம்.

CEWS மானியம் பெறுவதற்கு ஒரு நிறுவனம் கனடாவில் தொழில் பரிவர்த்தனை மூலம் பெற்ற வருமானம் வழமையான கணக்கியல் முறையில் பதிவு செய்யப்பட்டதாக இருக்க வேண்டும். இதற்கு உறவுகளிடம் இருந்து பெற்ற பணத்தையோ அல்லது தனது அசையாச் சொத்துக்களினால் கிடைக்கப்பெற்ற வருமானத்தையோ எடுத்துக்கொள்ள முடியாது. CEWS மானியத்தின் மூலம் ஒரு நிறுவனத்துக்கு வழங்கப்படும் தொகை அந்நிறுவனத்தில் பணிபுரிவோர் மார்ச் 15ஆம் திகதியில் இருந்து ஜூன் 6ஆம் திகதிவரை பெறும் ஊதியத்தை வைத்துக் கணக்கிடப்படுகிறது. அவர்கள் இந்தக் காலப்பகுதியில் பெறும் ஊதியத்தின் 75%, கிழமைக்கு அதிகூடியது $847வரை வழங்கப்படும்.

CEWS மானியத்துக்குத் தகுதிபெற ஒரு தகுதி பெற்ற நிறுவனம் 2020 மார்ச் மாதத்தில் தனது வருமானத்தில் 15%ஐ COVID-19 பாதிப்பால் இழந்திருக்க வேண்டும். அந்நிறுவனம் தொடர்ந்தும் தகுதிபெற 2020 ஏப்ரல் மாதத்தில் இருந்து தனது வருமானத்தில் 30% ஐ COVID-19 பாதிப்பால் இழந்திருக்க வேண்டும். இத்திட்டத்திலிருந்து மானியம் பெறத்

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)

Your Real Estate Investment Consultant
Dedicated for your success
CALL ME FOR A FREE CONSULTATION
BUY SELL INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
416.888.7877

Lexus of Richmond Hill
குமார் ஜெகசோதி
Tel. 905.883.8812
Cell: 416.451.0565
11552 Yonge Sreet
Richmond Hill, ON L4E 3N7
www.lexusrh.com
Kumar Jegasothy
Sales Consultant

BUY & SELL REAL ESTATE..
Pat Pushpakanthan
Full Time Broker
416 894-1187
Listing Deal!!
HALL OF FAME
416-290 1200

TD Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com

DENTAL OFFICE
3351 Markham Road, Unit #129, Markham & Steeles, Tel: 416.609.2022
3150 Eglinton Ave East, Unit #5, Markham & Eglinton, Tel: 416.264.3232
Dr.Iru Vijayanathan
BDS, FAGD, MFDS RCPS(Glasg.)
Dental Surgeon
Dentistry for children, adults and seniors

உவகை
மணமக்கள் இணைப்பு
Uvakai
Marriage Broker
Valvai Zagara
647.885.6104

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Sukumar Selvaratnam
Realtor
416.624.4803
suku07@hotmail.com
HOMELIFE

MORTGAGE
For all your Mortgage
We Deal with all banks
Any situations
NESAN 416-908-5656
Toll Free: 1-844-878-2721 Fax: 647-351-3099
mortgage@nesan.ca www.nesan.ca
1585 Markham Rd, Unit #407A, Toronto, M1B 2W1
SUBRA MORTGAGES INC.

வீடு வாடகைக்கு... வாங்க/ விற்க...
Rathiga Thillaivannan
Dir: 647.839.0079
rathiga24@hotmail.com


EXPERIENCE THE DIFFERENCE
RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
1286 Kennedy Rd Scarborough Ont M1P 2L5
Thas Thirunavukkarasu Dip-in-Eng(Hons)
Broker, ABR, SRS
416.388.4333
thasremax@gmail.com www.soldbythas.com
Kennedy / Hwy 401
$499,000
Condo Apt. - 2BR + 2WR
Simcoe St N / Winchester Rd E
$469,000
Townhouse - 2BR + 3WR
9th Line / Hwy 7 - Markham
$524,999
Townhouse - 2BR + 2WR
Hwy 7/ Pine Valley Dr -Vaughan
$528,800
Condo Apt. - 2BR + 1WR
Eglinton & Danforth - Toronto
$539,000
Condo Apt. - 2BR + 1WR
Major Mackenzie/Via Companile
$1,299,000
Detached 4-BR/3WR
108 Corporate Dr.- Toronto
$230,000
Commercial
582 Danforth Rd -Toronto
$34,000
Retail/ Office/ Food


New condo VIP PRIORITY ACCESS
BUY & SELL HOMES,BUSINESS,CONDO, LANDS..
Commitment Reliability Professionalism
PAT WILL BEAT any DEAL
VAUGHAN METROPOLITAN CENTRE
MASTER PLANNED TOWERS
NEXT TO SUBWAY
CALL FOR FIRST ACCESS TO GET THE DEAL!!
NEW CONDO OPENING
VVIP PlatinumACCESS
DON'T MISS
AJAX
$789K
4 BEDROOM. 3 WASHROOM
MARKHAM N 16 TH AVE
$479K
LUXURY
1+1 BEDROOM NEAR GO STATION
Hall of fame
CENTURION AWARDS
Pat Pushpakanthan
BROKER
416 894 1187
Century 21
BROKERAGE
Off 416-290 1200
VISIT...WWW.PATPUSH.COM
Scarborough Elsemere
$878,999
3 bm 3 warm bsmnt sep. entrance
Warden/ellesmere
$699K
3 bedroom
Hwy12 and hwy 169
$120k
Vacant land
7 acre
Near Orilia
BIRCHMOUNT/ELLESMERE
$568K
2 BM 2 WSRM SWIM POOL
RENTAL CORNER
1, 2, BEDROOM CONDO RENTAL FROM $1700.00
HOUSES RENTAL FROM $1900/-
NEW CONDO ASSIGNEMENT SALE AND RESALE CONDO FOR SALE
NEEDED PL CALL ME
416-894-1187
Kings Cres./Harwood Ave.
$819k AJAX
3 BEDROOM. 3 WASHROOM 2 garage
scarborough
$329,999
2 BEDROOM 2 washroom
Kennedy/401
$398,999
1parking
1 locker
BRAND NEW
LUXURY
1 BEDROOM 1 Wm, 1 parking
Oshawa
$699,999
4 bed, 4 washroom


அம்மா
Amma Pawn Broker
தங்க நகை அடைவு மாடம்
1.5% முதல்
2.0%
வட்டி மட்டுமே
(per month)
கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்று முழுக் காப்புறுதி
செய்யப்பட்ட முதன்மையான அடைவுச்சேவை
உங்கள் பழைய நகைகளை
அதியுயர் பெறுமானத்திற்கு
எம்மிடம் விற்றுக்கொள்ளலாம்
416-757-0034
416-994-3861
உங்கள் நகைகளுக்கு அதிகூடிய பெறுமதியையும்
மிகக்க குறைந்த வட்டி வீதத்தையும் பெற்றுக்கொள்ள
நகரின் மத்தியில் ஒரே நிறுவனம்
எவ்வளவு தொகையானாலும்
மிகக் குறைந்த வட்டியுடன்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்
105A - 2425 Eglinton Ave. E, Scarborough
ammapawnbroker@gmail.com
கடைக்குப் பின்புறத்தில் போதிய வாகனத் தரிப்பிடங்கள்
Shankar& Co. வுக்கு அருகாமையில் உண்டு
நம்பிக்கை
நாணயம்
உத்தரவாதம்


அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்!
முற்றிலும் இலவசமான சேவை!
12வருடத்திற்கு மேற்பட்ட
உங்கள் Gas Furnace இற்கான CO அளவீடு
வீட்டிற்கு வந்து பரிசோதிக்கப்படும்.
AATEK
HEATING & COOLING
$2100 Rebate Available Now
call us 416-414-2280
FREE Inspection in GTA
Over 10 yrs in Business Experience
Flat Rate Pricing
Parts and Labour guarantee
Guaranteed Repairs
Professional Service
Fully Insured
Gas Furnaces, Air Conditioners,
Thankless Water Heater, Gas line install
10 வருடங்களுக்கு மேலாக ரொரண்டோவின்
முன்னணி நிறுவனங்களில் பணியாற்றிய
அனுபவத்துடன்
Licensed Technician | ELENGO THIYAGARAJAH
ALL MAJOR APPLIANCES E : aatekcanada@gmail.com
We Are Specialists in
customs homes Ductwork System
We Are Professional trouble shooters for all major gas appliances
416.414.2280

# தமிழர் கலாசாரமும், கொரோனா வைரசும்!

தொன்று தொட்டே தமிழர் கலாசாரத்தில் இயற்கை வழியிலான சுகாதாரத்தைப் பேணும் வழியில் வடிவமைக்கப்பட்டுள்ளமை, இதனை ஆராயும் பொழுது மிகவும் தெளிவாகப் புலப்படுகின்றது. இவை செவிவழியாகவே கேட்கப்பட்டு அடுத்தடுத்த பரம்பரையினருக்குக் கொடுக்கப்பட்டு வந்த தேயல்லாமல் இது ஏன் கடைப்பிடிக்கப்படுகின்றது? இளம் தலைமுறையினருக்கு சொல்லப்படாததாலும் விஞ்ஞான ரீதியில் அனுபகப்படவில்லை எனவும் பற்பல காரணங்களைக்கூறி இவை மூடநம்பிக்கை என்று கூறி தாழ்த்தப்பட்டு ஒதுக்கப்பட வேண்டிய நிலைக்கு வந்துள்ளமை கவலைக்குரியதாக இருக்கின்றது.

இவை மூடநம்பிக்கையல்ல என்பதும் தற்காலத்தில் விஞ்ஞானரீதியில் படிப்படியாக நிரூபிக்கப்பட்டுக் கொண்டு வந்து கொண்டிருப்பதையும் ஒப்பிட்டு நோக்கும் பொழுது இவற்றிலும் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளமையும், அசட்டை செய்யப்படக் கூடாதென்பதையும் தெளிவாக உணரலாம்.

மேலும் தமிழர் கலாசாரப்பழக்க வழக்கங்களை ஆராய்ந்து பார்க்கும்போது அதில் உள்ள உண்மைத் தன்மையும், அது கொரோனா போன்ற வைரசுப் பரவலை எவ்வாறு தடுக்கின்றது என்ற உண்மையை நீங்கள் புரிந்துகொள்ள முடியும் என்பதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

இனித் தமிழரினால் கடைப்பிடித்து மறைந்து வருகின்ற, இன்னும் கடைப்பிடிக்கப்படுகின்ற பழக்க வழக்கங்களை ஒவ்வொன்றாக அதன் காரண காரியங்களை ஆராய்வோம்.

கொரோனா போன்ற வைரசுக்கள் இன்று மட்டுமல்ல, காலத்திற்குக் காலம் வந்து செல்வதை வரலாறுகள் மூலம் அறியக் கிடக்கின்றது.

## ஏன் கைகூப்பி வணக்கம்?




கைகூப்பி வணக்கம் செலுத்தி வரவேற்கும் கலாசாரம், தமிழர் மத்தியில் இன்றும் இருந்து கொண்டிருக்கின்றது. மேலை நாட்டுக் கலாசாரத்தின் மோகத்தால், தமிழர் மத்தியிலும் கை கூப்பி வரவேற்கும் கலாசாரம் குறைந்து செல்வதை அவதானிக்க முடிகிறது.

அதாவது ஒவ்வொரு உயிர்வாழ் இனங்களிலும், அவர்களோ, அவைகளோ வாழ்ந்த சூழ்நிலைக்கேற்பக் கிருமிகள் அவர்கள் உடலில் இருக்கின்றது. அவர்கள் அந்தச் சூழ்நிலைகளில் பழக்கப்பட்டவர்கள் ஆதலால் அக்கிருமிகளை எதிர்க்கும் சக்தியை அவர்களுடைய உடம்பு தானாகக் கொண்டிருக்கும். அது அவர்களுக்குப் பாதிப்பை எதிர்க்கக்கூடிய எதிர்ப்புச் சக்தியைக் கொண்டிருக்கும்.

நாங்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும் பொழுது வெவ்வேறு சூழ்நிலைகளில் இருந்து வருகின்றோம். இப்போது நாங்கள் கைகொடுத்தோ (Hand Shake), அல்லது கட்டிப்பிடித்தோ (Hug) அன்பைப் பரிமாறும் போது, எங்களிடம் உள்ள கிருமிகள் அவர்களுக்கும், அவர்களிடம் உள்ள கிருமிகள் எங்களுக்கும் தொற்றிக் கொள்ளும். இக்கிருமிகள் எமக்குப் பழக்கம் இல்லாததால், அதை எதிர்க்கும் சக்திகள் எங்கள் உடம்பில் இல்லாததால், இவர்களில் ஒருவருக்கோ அல்லது இருவருக்குமோ நோய் ஏற்படச்சாத்தியம் ஆகின்றது.

இதனைத் தடுக்கும் வகையில்தான் மூதாதையர், ஒருவரை ஒருவர் தொடாமல் கைகூப்பி வணக்கம் செலுத்தும் முறையை மையைக் கடைப்பிடித்தனர். ஒருவருடைய கிருமி இன்னொருவரைத் தொந்தரவு செய்யாமலும், அதைப் பரவாமலும் தடுக்கும் அரிய எளிமையான முறையுமாகும். கொரோனாவினால் மீண்டும் இம்முறை உலகிற்கு அறிமுகமாகின்றது.

இனி வருங்காலங்களிலாவது, கைகொடுத்தல், கட்டிப்பிடித்தல் என்ற பழக்க வழக்கங்களை தவிர்த்து கைகூப்பி வரவேற்போமாக. கொரோனா, உலகை மீண்டும் தமிழனைத் திரும்பி பார்க்க வைத்துள்ளது. எனவே கை கூப்பி வரவேற்றல் உலக சுகாதாரத்திற்கு வலுச் சேர்க்கின்றது.

## தம் கைகளால் உண்ணுதல்:



தொன்றுதொட்டு தமிழர் வழக்கில் உண்ணும் உணவை கைகழுவியபின் தம் கைகளால் தான் அள்ளிச் சாப்பிட்டனர். அநேகமான குடும்பங்களில் உண்ணுகின்ற பாத்திரமும், அவர்களுக்கென்றே இருந்து வந்தது.

இன்று கரண்டி, முள்ளுக் கரண்டிகளாலும், செரமிக் பிளேட்டுக்களும் நவ நாகரிகம் என்ற பெயரில் கைக்கொள்ளப்படுகின்றது. இவை சுகாதாரத்தை எப்படிப் பாதிக்கின்றது என்று பார்த்தோமானால். ஒருவர் சாப்பிட்ட தட்டில் இன்னொருவர் சாப்பிடுதலும், ஒருவர் வாயுள் சென்ற முள்ளுக் கரண்டிகள் கழுவிச் சுத்தம் செய்யப்பட்டாலும், இன்னொருவர் மீண்டும் சாப்பிடுவதும் சுகாதாரத்தன்மை 100 வீதமாக இல்லை. 100ல் ஒருவராவது நோய்வாய்ப்பட வாய்ப்பு இருக்கின்றது. (பொதுவாக இவை சரியாக சுகாதார முறைப்படி சுத்தம் செய்யப் படுவதில்லை)

தன் கைகளைச் சாப்பிடமுன் சுத்தம் செய்து தன் கைகளினால் சாப்பிடும்போது, தன் உடம்பிற்குப் பழக்கமில்லாத எந்த வேற்றுக் கிருமிகளும் எமது உடலில் செல்ல வாய்ப்பில்லாததால், நாம் நோய் வாய்ப்படும் தன்மையைத் தடுக்கின்றோம்.

எனவே சாப்பிடும்முன் கை கால் சுத்தம் செய்து, ஒரு முறை உபயோகிக்கும் வாழையிலையில் தான், தனது கைகளால் சாப்பிடும் முறைமையைத் தமிழர் சுகாதார நோக்கம் கருதியே கடைப்பிடித்து வந்தனர் என்பதும் இங்கு உறுதியாக்கப்படுகின்றது. தமிழர் முறைப்படி விருந்தினர்களுக்கு வாழையிலை தான் விருந்து செய்யும் முறைமை அன்று தொட்டு இன்றுவரை நடைமுறையிலுள்ளது. அத்துடன் வாழை இலையில் உள்ள பச்சைத் தன்மை (குளோரோபில்- Chlorophyll) நச்சுத் தன்மையைப் போக்குகின்றது.

இன்னொருவர் சாப்பிட்ட பிளேட், கரண்டி, முள்ளுக்கரண்டியைவிட உங்கள் கைகளே சாப்பிடுவதற்குரிய சுத்தமான உறுப்பு ஆகும். எனவே இக்கலாசாரத்தையும் மீண்டும் கடைப்பிடிப்பது எங்கள் சுகாதாரத்திற்கு வலுவானதாகும்.

## வெளியிடங்களுக்குச் சென்று வீடு திரும்பும் போது கை கால் சுத்தம் செய்வது ஏன்?

முன்னைய காலத்தில் தமிழர் வீடுகளின் முன் வாசலில் ஒரு பாத்திரத்தில் தண்ணீர் வைத்திருப்பர். சிலர் மஞ்சள் கலந்து வைத்திருப்பர். யாராவது வீட்டிற்குள் செல்வதென்றால் கால் கைகளைக் கழுவி விட்டே உள்ளே செல்லும் பழக்கத்தைக் கடைப்பிடித்து வந்தனர். அத்துடன் காலணிகளுடன் வீட்டிற்குள் செல்வதில்லை. அசுத்தம், எமக்குத் தெரியாத நுண்ணுயிர்கள் எம்மில் ஒட்டி எம்முடன் வந்திருக்கலாம். இதனால் அத்தொற்றும் தன்மையை தடுக்கும்முகமாகவே இதையெல்லாம் கடைப்பிடித்தனர். நவ நாகரிகம் என்ற போர்வையில் இவற்றையெல்லாம் கடைப்பிடிப்பதை நிறுத்திவிட்டோம்.



**மரணவீட்டிற்கோ அல்லது வைத்திய சாலைக்கோ போய் வந்தால் நீராடாமல் ஏன் வீட்டிற்குள் நுழைவதில்லை?**

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்...)



# MORTGAGE

MORTGAGE IN ANY SITUATION

- ⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் ( OAC*)
- ⇒ லைன் ஒப் கிரெடிட் (HELOC)
- ⇒ **Private 1st Mortgage** (No Income Verification)
- ⇒ ரீபைனான்ஸ்,Title Transfer, ரினிவல்
- ⇒ 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)
- ⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கான மோர்ட்கேஜ்
- ⇒ எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க
- ⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல்
வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

MORTGAGE CLINIC



www.mortgageclinicccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது



**Cell : 416-624- 4843**

416-613-2788 / 416-816-9011

ஜெ(Jey)இராசதுரை

MBA. BBA (Hon) AMP

Team Leader / Mortgage & Real Estate Broker

RIGHT AT HOME REALTY INC.

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage: 112-895 Don Mills Rd, Toronto ON M3C 1W3 Corp office : 200-2005 Sheppard Ave E, Toronto ON M2J 5B4




# ஊரடங்கும் வறுமையும்!

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் உள்ள நிலையில் வறிய மக்கள் மிகுந்த துயர நிலைக்குள்ளாகியுள்ளனர். இன்று இந்த உயிர்க்கொல்லி நோயை கட்டுப்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள விதிமுறைகளில் ஊரடங்கு உத்தரவும் முக்கியமானதெனினும், அதன் பக்க விளைவுகள் மோசமானதாகியுள்ளது.

அரசாங்க ஊழியர்களைத் தவிர ஏனைய அனைவரும் பொருளாதாரத் தாக்கங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். அரசாங்க ஊழியர்களுக்கான சம்பளம் சரியான முறையில்- சில சமயங்களில் முன் கூட்டியே வழங்கப்பட்டு வருகின்றன. உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு இருந்தாலும் அல்லது அவற்றின் விலைகள் அதிகரித்துக் காணப்பட்டாலும் அதனை சமாளித்துக் கொள்ளும் வழிமுறை அவர்களுக்கு உள்ளது.

அரசசார்பற்ற நிறுவனங்களில் தொழில் புரிவோருக்கு மாதாந்த சம்பளம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. குறிப்பாக வட மாகாணத்திலுள்ள தனியார் நிறுவனங்கள் பல தற்போது ஊழியர்களின் சம்பளத்தை இடைநிறுத்தியுள்ளதாக அந்நிறுவனங்களில் பணிபுரிவோர் தெரிவிக்கின்றனர். இதனால் இவர்களின் வாழ்வாதாரம் சிக்கலுக்குள்ளாகியுள்ளது.

இதனைவிட, அன்றாடம் தொழில் புரிந்து தங்கள் வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்தும் கூலித் தொழிலாளர்களின் வாழ்க்கை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. நடுத்தரப் பொருளாதார நிலையிலுள்ள மக்கள் தற்போது தங்களின் தங்க நகைகளை அடைவு வைத்து அத்தியாவசிய உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்வதை அவதானிக்க முடிகின்றது.

வடக்கில் ஊரடங்கு தளர்த்தப்படுகின்ற மாவட்டங்களில் சதோச, கார்கில்ஸ் புட்சிற்றி, கூட்டுறவுக் கடைகள் போன்றவற்றில் மக்களின் நீண்ட வரிசைகளைக் காண முடிவதைப் போன்று நகை அடைவுபிடிக்கும் நிறுவனங்களிலும் நீண்ட வரிசைகளை அண்மைய நாட்களில் காணமுடிகின்றது.

ஊரடங்கு சட்டம் தளர்த்தப்படுகின்ற காலை ஆறு மணிக்கே மக்கள் வரிசைகளில் நிற்கின்றனர். சில மணி நேரத்தில் முக்கியமான பொருட்கள் குறித்த வர்த்தக நிலையங்களில் முடிவடைந்து விடுகின்றன. வரிசையின் பின்னாலிருந்து வருவோர் ஏமாற்றத்துடனேயே திரும்புகின்றனர். அரசாங்கம் விலைக் குறைப்பு அறிவித்த 100 ரூபாய் மீன் ரின்னுக்கும், 65 ரூபாய் பருப்புக்கும் மட்டுமே நீண்ட வரிசையில், நீண்ட நேரம் காத்திருக்கின்ற வறிய மக்களைக் காண முடிகின்றது. மேலதிகமான அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு அவர்களிடம் பணம் இல்லை. இந்த வறிய மக்களின் பட்டினி நிலையைப் போக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.



உண்மையில் அதிரடி விலைக் குறைப்புக்கள் இன்று அவசியமில்லை என்றே தோன்றுகின்றது. பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படாமலிருப்பதும், அவை வரிசைகளில் காத்திருக்காமல் மக்களுக்குக் கிடைக்கக் கூடியதான வழிமுறைகளை மேற்கொள்வதுமே அவசியமானது. விலைக் குறைப்புக்களால் அன்றாடம் காய்ச்சிகளான வறிய மக்களுக்கு எவ்வித நன்மையும் கிடைக்கப் போவதில்லை. ஏனெனில், விலை குறைந்த பொருளானாலும் அதனை வாங்குவதற்கு அவர்களிடம் பணமில்லை. அவர்களுக்கு இலவச நிவாரணப் பொருட்களை வழங்குவதே தற்போது பொருத்தமான நடவடிக்கையாக அமையும்.

வறிய மக்களுக்கான இலவச நிவாரணப் பொருட்கள் வழங்க நடவடிக்கை எடுப்பதாக அரசாங்கத் தரப்பிலிருந்து தகவல்கள் வெளியிடப்பட்ட போதும் அது இதுவரையில் நடைமுறைப்படுத்தப்பட்டதாக தெரியவில்லை. குறிப்பாக, வடக்கின் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மக்கள் அரசாங்கத்தின் இலவச நிவாரணப் பொருட்கள் எவையும் இதுவரை கிடைக்கவில்லை என்றே தெரிவிக்கின்றனர்.

எனினும், தமிழ் தேசியம் சார்ந்த அரசியல் கட்சிகளும், சில உதவி வழங்கும் அமைப்புக்களும், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள வறிய மக்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கி வருகின்றன. அரசியல் கட்சியை சார்ந்தோர் தங்களின் தேர்தல் பிரச்சாரமாக இந்த உதவி வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது என்ற கட்டப்பாடு விதிக்கப்பட்டாலும் அவை தேர்தலுக்கான பிரச்சார நடவடிக்கையாகவே மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த நிலைமை நாடுமுழுவதும் உள்ளது.

கொரோனாவை அரசியலுக்குப் பயன்படுத்துவதாக தேர்தல் ஆணையாளர் அடிக்கடி தெரிவித்து வருகின்றார். உதவிகளை வழங்கும்போது, அது ஒரு தேர்தல் பிரச்சாரமாக மேற்கொள்ளப்படுவது தவிர்க்கப்படல் வேண்டும் என்று அவர் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றார். ஆளும் தரப்பினரையும் அவர் இது தொடர்பில் குற்றம் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தேர்தலை முன்னிட்டு தமிழ் அரசியல் கட்சிகளுக்கு புலம்பெயர் அமைப்புக்களாலேயே பணம் அனுப்பப்படுகின்றது. வழமையாக தேர்தல் காலங்களில் நடைபெறும் விடயம் இது. இதில் மறைப்பதற்கு எதுவுமில்லை. தமிழ் தேசியத்தை முன்னிறுத்தி அரசியல் மேற்கொள்ளும் ஒவ்வொரு கட்சிக்கும் தனித்தனியாக ஆதரவு வழங்கும் அமைப்புக்கள் புலம்பெயர் தளத்தில் இயங்குகின்றன. அவை இம்முறை நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலுக்காகக் கட்சிகளுக்கு ஏற்கனவே பண உதவி வழங்கியிருப்பதாக அறிய முடிகின்றது. தற்போது ஏற்பட்டுள்ள இடர்மிகு சூழலில் அப்பணத்தைப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதற்காகப் பயன்படுத்துமாறு புலம்பெயர் அமைப்புக்கள் குறித்த அரசியல் கட்சிகளுக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் அதனடிப்படையிலேயே இன்று இந்த நிவாரண உதவிகள் வழங்கப்படுவதாகவும் அறிய முடிகின்றது.


இந்தக் கட்சிகளின் தொண்டர்கள் கிராமங்களுக்குள் சென்று அங்குள்ள வறிய மக்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கி வருகின்றனர். அது ஒரு தேர்தல் பிரச்சாரமாக அமைந்தாலும் கூட வறிய மக்களின் பட்டினி நிலையைப் போக்குகின்ற நடவடிக்கையாக அமைவதால் அதனை விமர்சனத்திற்கு அப்பால் நின்று வரவேற்கலாம். அரசியல் சார்பற்ற சில அமைப்புக்களும் இவ்வாறு மக்களுக்கு உதவி வருகின்றன. அதற்கான நிதியும் புலம் பெயர் தளத்திலிருந்தே வருகின்றது. இன்று தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் கூட கொரோனா தாக்கம் ஏற்பட்டுள்ளது. அந்த நிலையிலும் தமிழ் உறவுகளின் உதவிகள் ஏதோவொரு வகையில் தாயக மக்களுக்கு வருகின்றமையினை மனதாரப் பாராட்ட வேண்டும்.

தமிழ் பிரதேசங்களில் இன்று சில வர்த்தகர்கள் மனிதாபினமாற்ற முறையில், பொருட்களை விலை அதிகரித்து விற்பனை செய்வதையும், பதுக்கலில் ஈடுபடுவதையும் காண முடிகின்றது. அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றன. செயற்கையான தட்டுப்பாடுகளும் ஏற்படுத்தப்படுகின்றன.

கொழும்பிலும், தெற்கின் ஏனைய பகுதிகளிலும் இவ்வாறு விலை அதிகரித்தோ அல்லது பதுக்கல் நடவடிக்கைகளில் ஈடுபட்டோ கண்டுபிடிக்கப்படும் வர்த்தக நிலையங்கள் மீது கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. சில வர்த்தக நிலையங்கள் சீல் வைக்கப்பட்டும் உள்ளன. வடக்கில் இவ்வாறான நடவடிக்கைகள் இல்லை. இதனால், வர்த்தகர்கள் தாங்கள் நினைப்பது போல்

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7



# கனடாவின் பழங்குடியினரும் ஈழத்தமிழரும் - 71



குரு அரவிந்தன்

யாழ்ப்பாணத்தில் நின்றபோது ஒரு விடயத்தை நான் அவதானித்தேன். யாழ். நூலகம் மே மாதம் 31ஆம் திகதி 1981 ஆம் ஆண்டு விசமிகளால் எரியூட்டப்பட்ட போது, தமிழரின் மிகப் பழைய வரலாற்றைச் சொல்லும் பல அரிய நூல்களும், ஏடுகளும் வேண்டும் என்றே அழிக்கப்பட்டு விட்டன. எரியுண்ட போது, காலாகாலமாய் சேகரிக்கப்பட்ட அரிய பல நூல்கள், முக்கியமான மூலப் பிரதிகளைக் கொண்ட பல ஆவணங்கள் அந்த நூலகத்தில் இருந்தன. பிரதிகள் எடுத்து வைப்பதற்கும் அப்போது போதிய வசதிகள் இருக்கவில்லை. ஒன்றுமே நடக்காது என்ற நம்பிக்கையும், அலட்சியமும் தான் எம்மினத்தின் பெரிய சாபக்கேடாக இருந்தது. நீண்ட நாட்களாகத் திட்டமிட்டு, சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தாங்கள் நினைத்ததை அவர்கள் மிகச் சாதுரியமாக சாதித்திருந்தனர். இதனால் மிகப்பெரியதொரு இழப்பு தமிழ் சமூகத்திற்கு ஏற்பட்டதை மறக்க முடியாது. ஆனால் இவையெல்லாம் காலம் கடந்து போய்விட்டது.

ஆனால் அன்று நூலகத்தில் எரிந்து சாம்பலான நூல்களைவிட தமிழர் வாழ்ந்த பகுதிகளில் உள்ள ஒவ்வொரு வீடுகளிலும் இருந்த, கவனமாகப் பாதுகாக்கப்பட்ட விலைமதிப்பற்ற ஏராளமான நூல்கள் யுத்தம் என்ற போர்வையில் மீண்டும் அழிக்கப்பட்டு விட்டன என்பதைத்தான் நான் அவதானித்தேன். தமிழரின் முக்கிய ஆவணங்களாக ஒவ்வொரு வீடுகளிலும் பாடசாலைகளிலும் மதவழிபாட்டுத் தலங்களிலும் படிப்பகங்களிலும் இருந்த பழமைவாய்ந்த ஏட்டுச் சுவடிகளும், நூல்களும், பழைய பாரம்பரியப் பொருட்களும் எல்லாமே யுத்தம் என்ற போர்வையில் அழிக்கப்பட்டு விட்டன. யோசித்துப் பாருங்கள் உங்கள் வீட்டில் மட்டும் எத்தனை புத்தகங்கள் இருந்திருக்கும்? குறைந்தது ஒவ்வொரு வீடுகளிலும் சுமார் 300 புத்தகங்களாவது இருந்திருக்கும். பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகள் என்றால் அவர்களின் பாட நூல்களும் ஓர் ஆவணமாகத்தானே இருந்திருக்கும். கட்டாயக் கல்வி என்பதால் ஒவ்வொரு பிள்ளையும் பாடசாலைக்குச் சென்றுதான் இருக்கும். வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இருந்த வீடுகளின் எண்ணிக்கையை எடுத்துப் பார்த்தால் பல லட்சக்கணக்கான வீடுகளில் இருந்த எமது ஆவணங்களான கோடிக்கணக்கான புத்தகங்கள் அழிக்கப்பட்டிருப்பதை புரிந்து கொள்வீர்கள். இதுபோன்ற மறைமுகமான அழிப்புக்கள் யாருடைய கண்ணுக்கும் தெரிவதில்லை, யாரும் இதைக் கணக்கில் எடுப்பதில்லை. ஆனால் இதுவும் ஒரு திட்டமிடப்பட்ட தமிழ் ஆவண அழிப்புத்தான். இவையெல்லாம் நூறு வருடங்களின்பின் எங்கள் கடந்த கால வரலாற்றைச் சொல்லவிருந்த ஆவணங்கள். இவற்றை எக்காலத்திலும் திரும்பவும் பெறமுடியாது.



யாழ்பாண நூல்நிலையத்தில் ஒரே இடத்தில் எல்லா நூல்களும் இருந்ததால், அந்த நேரம் அது எங்களுக்குப் பெரிதாகத் தெரிந்தது. அதனால் எண்ணிக்கையைப் பொறுத்து அழிக்கப்பட்டதைப் பெரிதாக எடுத்தோமே தவிர வீடுகளில் அழிக்கப்பட்ட விலைமதிப்பற்ற சொத்துக்களைக் கணக்கில் எடுக்கவில்லை. கோடிக்கணக்கான சொத்துக்களைவிட இவை பெறுமதி வாய்ந்தவை என்பதை யாரும் புரிந்து கொள்வதில்லை. காலாகாலமாய் எங்கள் உடமைகளும் சொத்துக்களும் அழிக்கப்பட்டே வருகின்றன. நாடு சுதந்திரம் அடைந்தபின் அதிகாரத்தைக் கையில் எடுத்துக் கொண்டு, அழிக்கப்படும் வேகமும் அதிகரித்துக் கொண்டே செல்வதை சாதாரண ஒருவரால் கூடப் புரிந்து கொள்ள முடியும். வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு வெளியேதான் இத்தகைய அழிப்புக்கள் முதலில் தொடர்ந்து கொண்டிருந்தன. அதில் அவர்கள் பெரிதாக எதுவும் சாதிக்கவில்லை. எனவேதான் 1983ஆம் ஆண்டு அவர்களுக்கு அதிக வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. அதைச் சாட்டாக வைத்து வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்குள் புகுந்து கொள்ள முடிந்தது. தொடக்கத்தில் சராசரியாகப் பத்து வருடத்திற்கு ஒரு முறை இந்த அழிப்பு நடவடிக்கைகள் நடைபெற்று வந்தன. அதுகூட சேகரித்து வைப்பதற்கும் தமிழனுக்கு கொஞ்ச காலஅவகாசம் கொடுக்க வேண்டும் என்று நினைத்திருக்கலாம். இதில் வேடிக்கை என்னவென்றால் எம்மவர்களில் சிலரும் தங்கள் தனிப்பட்ட சுயநலம் கருதி இதற்குத் துணைபோவதேயாகும்!

தமிழர் அதிகமாக வாழும் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இருந்த வீடுகளின் எண்ணிக்கையை எடுத்துப் பார்த்தால், அந்த வீடுகளில் இருந்த பல லட்சக் கணக்கான புத்தகங்கள் யுத்தம் என்ற போர்வையில் இராணுவத்தால் அழிக்கப்பட்டிருப்பதை புரிந்து கொள்வார்கள். இதைவிட நீண்டகாலம் தமிழ் மக்கள் அங்குமிங்கும் இடம்பெயர்ந்து வாழ்ந்ததால், அந்த வீடுகளில் பாதுகாப்பாய் இருந்த பழைய ஆவணங்களும் செல்லரித்து அழிந்து விட்டன. இதில் எங்கள் பழைய சரித்திரத்தைச் சொல்லும் பாடப்புத்தகங்கள், ஏடுகள், பஞ்சாங்கங்கள், தமிழ் இலக்கிய, இலக்கண நூல்கள், அறிவியல் நூல்கள் என்று பலவிதமான நூல்கள் அடங்கும். இதைவிட எமது பாரம்பரிய பண்பாட்டை எடுத்துச் சொல்லும் எங்கள் முன்னோரின் பாவனைப் பொருட்களான பொட்டகம், வெற்றிலைத்தட்டு, குடம், பன்னீச்செம்பு, சந்தனக் கும்பா, பாக்குவெட்டி, உரல், உலக்கை, அம்மி, ஆட்டுக்கல், திருகை, செக்கு, சூத்திரம், கொக்கிச்சத்தகம், கத்தி, அரிவாள், துருவலை என்று இப்படிப் பல வேலைப்படுகளுடன் கூடிய பொருட்கள் அழிக்கப்பட்டோ அல்லது கொள்ளை அடிக்கப்பட்டோ விட்டன.



பலவிதமான அழகிய மரவேலைப்பாடுகளுடன் இருந்த வீடுகளின் கதவுகளைக் கூட எடுத்துச் சென்று விட்டனர். கோயில்களில் இருந்த லட்சக்கணக்கான பெறுமதி வாய்ந்த சுவாமி வலம் வரும் சித்திரத் தேர்களை எல்லாம் தீமூட்டியும், குண்டுகள் போட்டும் அழித்து விட்டனர். பொதுவாகத் தேர்களைக் கவனித்துப் பார்த்தீர்கள் என்றால், அதிலே எங்கள் வரலாற்றைச் சொல்லும் மரத்தினால் ஆன புடைப்புச் சிற்பங்களை அவதானித்திருப்பீர்கள். அப்படியான சிற்பங்களை வடிப்பவர்கள் தற்போது மிகக் குறைவான தொகையினரே இருக்கின்றனர். இதைவிட அப்படிச் சிற்பங்களைச் செதுக்குவதற்கும் நீண்ட காலமெடுக்கும் என்பது மட்டுமல்ல, மரத்தில் செய்யப்பட்டது என்பதால், வெய்யில் மழையில் இருந்தும் காப்பாற்றப்பட வேண்டும்.

இதைவிட யுத்தம் காரணமாக அந்த மண்ணில் மக்கள் இடம் பெயர்ந்ததால், பல நூல்களும், பொருட்களும் கவனிப்பாரற்று செல்லரித்துப் போய்விட்டன. தொடர்ந்தும் இப்படியான சம்பவங்கள் நடக்கத்தான் போகின்றன, அதனால்தான் எங்களுக்கு என்றொரு விருப்பு வெறுப்பற்ற ஆவணப் பாதுகாப்பகம் எவ்வளவு முக்கியமானது என்பதை இங்கே இச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகின்றேன். நவீன வசதிகள் காலத்திற்குக் காலம் வேறுபடுவதால், நாங்களும் அதற்கேற்ப எம்மினத்திற்கான ஆவணங்களை ஆவணப்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும். விருப்பு வெறுப்புக் காட்டாமல் எல்லாவற்றையுமே ஆவணப்படுத்துவது தமிழ் இனத்தின் வரலாற்றை எடுத்துக் காட்ட மிகவும் முக்கியமானது.

கொரோனா வைரஸின் பாதிப்பால் எமது இனத்தவர்களும் பலர் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். தமிழர் உலகெல்லாம் பரந்து வாழ்வதால் அந்தந்த நாடுகளில் ஏற்படும் மோசமான பாதிப்புகளில் இவர்களும் தெரிந்தோ தெரியாமலோ உள்வாங்கப்படுகின்றனர். இப்படியான இக்கட்டான சூழ்நிலையில் சுயதனிமைப்படுதல் மிகவும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும். கொரோனா வைரஸ்சுக்கு இன்னும் தடுப்பூசியோ அல்லது மருந்தோ கண்டு பிடிக்கப்படவில்லை. எனவே நாம் கவனமாக இருப்பது நல்லது. அடிக்கடி சோப்போட்டுக் கைகளைக் கழுவிக் கொள்வதும், தொண்டை காயாது தண்ணீர் குடிப்பதும் நல்லதென்று சொல்கின்றனர். தினமும் தொழில் நிமிர்த்தம் வெளியே சென்று வந்த உங்களுக்கு வீட்டுக்குள் அடைந்து கிடப்பது கடினமான காரியமாகத்தான் இருக்கும். ஆனாலும் வெளியே வெளிக்கிட்டுத் திரியாமல் வீட்டுக்குள் பாதுகாப்பாக இருப்பது உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் நல்லது மட்டுமல்ல, நாட்டுக்கும் உதவி செய்தோராக இருப்பீர்கள். பாதிக்கப்பட்டோர் கூடிய விரைவில் நலம்பெற நாங்களும் வீட்டில் இருந்தே பிரார்த்திப்போம்.



# நடைமுறைகளைக் கடைப்பிடித்தால் இலங்கை விரைவில் இயல்பு நிலைக்குத் திரும்பும்!

**– விகிர்தன் –**

உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றினால் ஏற்பட்ட பாதிப்பு என்பது குறைவானதே. அதேவேளை, ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் தடுப்பு நடவடிக்கைகள் மேம்பட்டதாகவே கருதப்படுகின்றது.

பிரிட்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் மற்றும் பிரிட்டன் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியன இணைந்து மேற்கொண்ட ஆய்வொன்றில், இலங்கை மற்றும் சீனா ஆகிய இரண்டு நாடுகள் மட்டுமே கொரோனா வைரஸ் தொற்று நோயை கட்டுப்படுத்துவதில் மிகச் சிறந்த வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வரும் நாடுகள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

சீனாவில் இதுவரையில் 81 ஆயிரத்துக்கும் அதிகமானோர் நோயாளிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். மூவாயிரத்துக்கும் அதிகமானோர் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளனர். எனினும், சீனாவின் தற்காப்பு நடவடிக்கைகள் உயர்ந்த மட்டத்தில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சீனாவில் தோன்றிய கொரோனா வைரஸ் இன்று சீனாவில் கட்டுப்பாட்டு நிலைக்கு வந்துள்ளதாகவும், அங்கு மூடப்பட்டிருந்த தொழிற்சாலைகள் பல மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சீனாவுக்கு அடுத்ததாக என்று சொல்வதிலும் பார்க்க, சீனாவை விடவும் முன்னாயத்த நடவடிக்கைகளை இலங்கை மேற்கொண்டது என்று கூறலாம். கொரோனா வைரஸ் தொற்று பரவ ஆரம்பித்த பின்னரே பல நாடுகள் பாதுகாப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த ஆரம்பித்தன. ஆனால், இலங்கை கொரோனா பரவுவதற்கு முன்னரே முன்னாயத்த நடவடிக்கைகளை தீவிரப்படுத்தத் தொடங்கியது. கொரோனா வைரஸ் பரவத் தொடங்கிய நாட்களில் இலங்கையிலிருந்து திரும்பிச் சென்ற பிரிட்டன் நாட்டவர் ஒருவர் இலங்கையின் கொரோனா தடுப்பு முகாமைத்துவத்தை வெகுவாகப் பாராட்டியிருந்தார். பிரிட்டனை விடவும் இலங்கையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் மேம்பட்டது என அவர் பிரிட்டனில் வைத்துக் கருத்து வெளியிட்டிருந்தார்.

இலங்கையின் மருத்துவ மற்றும் சுகாதார கட்டமைப்புக்கள் உயர்ந்த மட்டத்தில் அதன் பணிகளை மேற்கொண்டு வருகின்றன. மருத்துவர்கள் தொடக்கம் மருத்துவ மனைகளின் பணியாளர்கள் அனைவருமே அர்ப்பணிப்புடன் தங்கள் கடமைகளை மேற்கொண்டு வருகின்றனர். இத்தருணத்தில் பொறுப்பை உணராது நடந்து கொள்வோர் பொதுமக்களில் சில பிரிவினர் என்றே கூறவேண்டும். மருத்துவ அறிவியலுக் மதிப்பளிக்காமல் மதத்தை தலையில் சுமந்து கொண்டிருப்போரா லேயே இங்கு பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்குச் சென்று வந்த இலங்கையர் பலர் தங்களை வெளிப்படுத்திக் கொள்ளாமல் மறைவாக இருந்ததோடு, பல இடங்களுக்கும் சென்று கொண்டாட்டங்களையும் மேற்கொண்டிருந்தனர். இவர்கள் மூலமாகவே கொரோனா வைரஸ் தொற்று இலங்கையில் பரவ ஆரம்பித்தது. வெளிநாடுகளில் மத நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக சென்று வந்தோரும் இதில் அடங்குகின்றனர். தங்களை வெளிப்படுத்தி, சுய தனிமைப்படுத்தலை மேற்கொண்டிருந்தால் இந்த வைரஸ் பரவலைத் தடுத்திருக்க முடியும். இவர்கள் தங்கள் வீடுகளில் உள்ளோருக்கு மட்டுமல்லாது, அயலவர்களுக்கும் இந்நோயை பரப்பியிருக்கின்றனர்.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானோரில் 80 பேர் வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பியோரென இலங்கையின் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார். இவர்கள் மூலமாகவே நாடு முழுவதும் இந்த நோய் பரவியிருக்கின்றது. இவர்களோடு நெருக்கமாகப் பழகியோர் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். மேலும் சிலர் தலைமறைவாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நாடுகளின் தலைவர்களைக் கூட இக்கொரோனா வைரஸ் விட்டுவைக்கவில்லை. அவர்கள் தங்களை வெளிப்படுத்திக் கொண்டனர். சுய தனிமையில் இருந்தனர். மருத்துவ சிகிச்சைகளைப் பெற்றுக் கொண்டனர். பிரபலமான கலைஞர்கள் கூட வெளிநாடுகளுக்கு சென்று வந்த காரணத்தால் தங்களைத் தாங்களே தனிமைப்படுத்திக் கொண்டனர். தங்கள் குடும்பத்தினது மட்டுமல்ல, சமூகத்தினதும், நாட்டிலுள்ள அனைத்து மக்களினதும் நலன் சார்ந்தே அவர்கள் அவ்வாறு செயற்பட்டனர்.

இந்த உணர்வு அனைத்து தரப்பினருக்கும் ஏற்பட வேண்டும். மதங்களை விடவும் மனிதரை நேசிக்க அவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும். மருத்துவத்தில் நம்பிக்கை வைத்து செயற்பட வேண்டும். பொதுமக்கள் கட்டுப்பாடாக நடந்து கொண்டால் இன்னும் ஓரிரு மாதங்களில் இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றை முழுமையாக கட்டப்படுத்த முடியும். இதனால் நாடு வழமைக்குத் திரும்ப முடியும்.



நாட்டில் இன்று பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு சட்டம் அவசியமானது. மாவட்டங்களுக்கு இடையிலான போக்குவரத்து தடையும் மிக அவசியமானது. நாட்டில் உள்ள சில மாவட்டங்களில் ஒருவர் கூட கொரோனா நோயாளிகளாக இல்லாத நிலை இன்றுள்ளது. மாவட்டங்களுக்கு இடையிலான போக்குவரத்தை அனுமதித்தால் வேறு மாவட்டங்களில் இருந்துவரும் நபர்களால் குறித்த மாவட்டங்களுக்கும் நோய் பரவும் அபாயம் ஏற்படும். இதில் பாதுகாப்புத் தரப்பினர் கடுமையாக நடைமுறையை செயற்படுத்த வேண்டும்.

உணவுப்பொருட்கள், மருந்துப் பொருட்கள் மற்றும் எரிபொருள் முதலான அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்து இன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. எனினும், இதில் சம்பந்தப்படாத சிலர் வெளிமாவட்டங்களிலிருந்து வந்து செல்கின்றமையினை அண்மைய நாட்களாக அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக வடக்கில், கிளிநொச்சி உள்ளிட்ட பகுதிகளில் இவர்களை காண முடிகின்றது. பாதுகாப்பில் காணப்படும் ஓட்டைகளைப் பயன்படுத்தி அல்லது தங்களின் செல்வாக்கைப் பயன்படுத்தி இவர்கள் ஊடுருவுகின்றனர் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

உணவுப் பொருட்களைக் கொண்டு செல்வதில் அந்தந்த மாவட்டங்களிலுள்ள கூட்டுறவுத் துறையினருக்கு மட்டும் அனுமதி வழங்கலாம். போர்க் காலத்தில் போர் நடைபெற்ற பிரதேசங்களுக்கான நடைமுறை இவ்வாறே இருந்தது. ஆனால், இப்போது தனியார் சிலரும் இதனை மேற்கொள்வதாகத் தெரிகின்றது. அவ்வாறான தனிப்பட்ட வர்த்தகர்களே வெளிமாவட்டங்களிலிருந்து தங்கள் சொந்த வாகனங்களில் வந்துசெல்கின்றனர்.

இதேவேளை, வைத்திய அதிகாரிகள் சங்க வட மாகாண இணைப்பாளர் வைத்தியர் த.காண்டீபன் அண்மையில் தெரிவித்துள்ள கருத்தையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். இறுக்கமான விதிமுறைகளை அமல்படுத்தாவிட்டால் நடைமுறையிலுள்ள ஊரடங்கு பயனற்றதாகிவிடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு ஆளுநர், இது தொடர்பில் விதிமுறைகளை தீவிரமாக நடைமுறைப்படுத்த சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உத்தரவு வழங்க வேண்டும் என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

"வடக்கில் ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரியும் ஊரடங்கு நேரத்தில் மாவட்ட எல்லைகளைத் தாண்டிப் பயணிக்க 300இற்கும் மேற்பட்டோருக்கு ஒரு நாளில் அனுமதிக் கடிதங்களை வழங்குகின்றனர். அவர்கள் அத்தியாவசிய சேவைகளுக்கு உரித்தான அரசாங்க உத்தியோகத்தர்கள் அல்ல. பெரும்பாலானோர் மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதாகக் கூறுவோர்.

யாழ்ப்பாணத்தில், மொத்தம் 14 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகள் (MOH) உள்ள நிலையில் மொத்தம் மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் இவ்வாறு மாவட்ட எல்லையைக் கடக்க அனுமதிக்கப்படுகின்றனர். இதனை, சரியான முறையில் ஒழுங்குபடுத்த வேண்டும். அரச அதிபர் மற்றும் மாகாண சுகாதாரப் பணிப்பாளர் இருவரும் இணைந்து இதனைக் கட்டுப்படுத்தத் தேவையான ஒழுங்குமுறையை ஏற்படுத்த வேண்டும். இதுகுறித்து வடக்கு ஆளுநர், சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் இறுக்கமான விதிமுறைகளை அமல்படுத்துவதனை உறுதிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு கட்டுப்படுத்தாவிட்டால் ஊரடங்கு உத்தரவு பயனற்றதாகிவிடும். கட்டுப்பாடின்றி அனைத்து தரப்பினரையும் (அத்தியாவசிய சேவைகள் நீங்கலாக) மாவட்ட எல்லைகளைத் தாண்ட அனுமதிப்பது கொரோனா பரவுவதனைக் கட்டுப்படுத்த முடியாத நிலைக்கு இட்டுச் செல்லும்" என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் உடனடியாகக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும். இலங்கையில் மறு அறிவித்தல் வரை தொடர்ச்சியாக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள ஆறு மாவட்டங்களில் யாழ்ப்பாணமும் அடங்குகின்றது. யாழ்ப்பாணத்தில் கொரோனா நோயாளிகளாக ஆறு பேர் உறுதி செய்யப்பட்டுள்ளனர். சந்தேகத்தின் பேரில் சிலர் சிகிச்சை பெற்று வருகின்றனர் சிலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். வடக்கின் ஏனைய மாவட்டங்களில் இவ்வாறான நிலை இல்லை. எனவே யாழ்ப்பாணத்திலிருந்து வடக்கின் ஏனைய மாவட்டங்களுக்குச் செல்லக் கட்டுப்பாடின்றி அனுமதி வழங்கப்படுவது தவிர்க்கப்படல் வேண்டும்.

பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் தற்போதைய நடைமுறைகளை கடைப்பிடித்து பொறுப்புடன் நடந்து கொண்டால் முழு இலங்கையும் ஓரிரு மாதங்களில் இயல்பு நிலைக்குத் திரும்புவதற்கான சாத்தியம் உள்ளது.

விளம்பரம்
VLAMBARAM
30 ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

www.tamilvanakkam.com
Tamil VANAKKAM
தமிழ் வணக்கம் உலகத் தமிழர்களின் இணைப்புப் பாலம்

# ஒன்ராறியோ மாகாண அரசின் குடும்பங்களுக்கான நிதியுதவி

கொரோனா வைரஸ் (COVID-19) காரண மாக ஒன்ராறியோவிலுள்ள குழந்தை பராமரிப்பு நிலையங்கள் மற்றும் பாடசாலைகள் மூடப்பட்டிருப்பதால் பெற்றோர் வீட்டிலேயே இருந்து சமூக தனிப்படுத்தலை பேணுவதால் வீட்டில் இருக்கும் குழந்தைகளின் கல்வி சம்மந்த மான இணையத்தள சேவைகள் மற்றும் பொருட்களின் செலவுக்காக ஒன்ராறியோ மாகாண அரசினால் இந்த நிதியுதவி வழங்கப்படுகிறது.

**யார் இந்த நிதியுதவிக்குத் தகுதியுடையோர்?**

இந்த நிதியுதவியைப் பெறுவதற்கு பெற்றோருக்கு வருமான உச்சவரம்பு இல்லை.

- வயது 0 முதல் 12 வரை அல்லது
- சிறப்பு தேவைகளுடன் (special needs) 0 முதல் 21 வயதுவரை குழந்தைகள் இருக்கும் அனைத்துப் பெற்றோர் இந்த நிதியுதவிக்குத் தகுதியுடையோர்.

உங்களிடம் ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தை கள் இருந்தால், நீங்கள் ஒவ்வொரு குழந்தைக்கும் தனித்தனியே விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும்.
-(one application per child).

தகுதியான பெற்றோர், ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு முறை (one-time )

* 0 முதல் 12 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு 200 டொலரும்
* சிறப்பு தேவைகளுடைய 0 முதல் 21 வயது வரையிலான குழந்தைகள் அல்லது இளைஞர்களுக்கு 250 டொலரும் இந்த நிதியுதவி மூலம் வழங்கப்படுகிறது.


நீங்கள் விண்ணப்பிக்கும் முன், தயவுசெய்து கவனிக்கவும்:

- ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு பெற்றோர் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்
- குழந்தையை பாதுகாப்பில் வைத்திருக் கும் பெற்றோர் மாத்திரம் விண்ணப்பிக்கலாம். நீங்கள் ஒரு சுகாதாரப் பாதுகாப்பு அல்லது அவசரகால, 24 மணிநேர குழந்தை பராமரிப்பு மையங் களைப் பயன்படுத்தும் பணிபுரிபவராக இருந்தால் நீங்களும் இந்த நிதியுதவிக்கு தகுதியுடையவர்கள்.

**பெற்றோருக்கான ஆதரவும் (Support for parents) குடும்பங்களுக்கான ஆதரவும் (Support for families):**

குறிப்பு: நீங்கள் ஏற்கனவே நேரடி வைப்பு மூலம் பெற்றோர் கொடுப்பனவுகளுக்கான ஆதரவைப்பெற்ற பெற்றோராக இருந்தால், இந்தக் குடும்பங்களுக்கான நிதி ஆதரவுக்குத் தானாகவே தகுதி பெறுவீர் கள், மேலும் புதிய விண்ணப்பத்தை சமர்ப்பிக்கத் தேவையில்லை.

பெற்றோருக்கான ஆதரவு என்பது ஆசிரியர்களின் வேலை நிறுத்தங்களின் போது பெற்றோருக்குக் கிடைத்த நிதி உதவி. பெற்றோருக்கான ஆதரவின் மூலம் நீங்கள் விண்ணப்பிக்கவில்லை அல்லது நிதி பெறவில்லையென்றால், குடும்பங்களுக்கான நிதியுதவியைப்பெற நீங்கள் ஒரு புதிய விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும்.




**குடும்பங்களுக்கான நிதியுதவியைப்பெற விண்ணப்பிக்கத் தேவையான தகவல்கள்:**

- குழந்தையின் பெயர்.
- குழந்தையின் பிறந்த திகதி.
- பாடசாலை செல்லும் குழந்தையா?
- பொது/தனியார் பாடசாலை செல்லும் குழந்தையின் பாடசாலை மற்றும் கல்வி வாரியத்தின் பெயர்.
- குழந்தை சிறப்பு தேவைகளுடையதா?
- பெற்றோர்/பாதுகாவலர் பற்றிய தகவல்.
- உங்கள் வங்கி கணக்கின் தகவல்கள் (நேரடி வைப்பு செய்வதற்காக)
- உங்கள் மின்னஞ்சல் முகவரி

நீங்கள் விண்ணப்பங்களை **https://www.ontario.ca/page/get-support-families** என்ற வலையத்தளம் மூலமாக **Apply online** என்பதை அழுத்தி மட்டுமே சமர்ப்பிக்க முடியும்.

**Note: Applications can only be submitted online.**

விண்ணப்பத்தை சமர்ப்பித்த (Submit) பின்னர், உங்களுக்கு

- email confirmation - மின்னஞ்சல் மூலம் உறுதிப்படுத்தல்
- reference number - பயன்பாட்டு குறிப்பு எண் என்பன உடனடியாகக் கிடைக்கும். தேவைப்பட்டால் இந்த விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட தகவல்களை சரிபார்க்க உங்களைத் தொடர்பு கொள்ளலாம்.

உங்களுக்குரிய நிதியுதவி நேரடி வைப்பு மூலம் உங்கள் வங்கிக் கணக்கில் சேர்க்கப்படும். நீங்கள் விண்ணப்பிக்கும் போது வங்கித் தகவல்களை வழங்க முடியாவிட்டால் காசோலை மூலம் நிதி யுதவியைப் பெறமுடியும். காசோலைகள் மூலம் பெறப்படும் நிதியுதவி உங்கள் வங்கிக் கணக்கில் சேர நீங்கள் விண்ணப்பித்த திகதியிலிருந்து பல வாரங்கள் ஆகலாம் என்பதை நினைவில் கொள்ளவும்.

மேலதிக உதவிக்கும் தகவல்களுக்கும்:
Phone: 1-888-444-3770 or
TTY: 1-800-268-7095
email: Supportforfamilies@ontario.ca



# கனேடிய...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

தகுதி பெற்ற நிறுவனம் கனேடிய வருமான வரி நிறுவனத்தின் (CRA) தனது நிறுவனக்கணக்குப் பகுதி ( My Business Account Portal) மூலம் விண்ணப்பிக்கலாம்.



கனேடியர் COVID-19 பாதிப்பால் வேலையை இழக்காமல் இருப்பதற்கே இத் திட்டம் அமல்படுத்தப்படுகிறது. இதனால் இத்திட்டத்தின் மூலம் மானியம் பெறும் நிறுவனங்கள் அவர்களது தொழிலாளர்களுக்கு இதன்மூலம் பெறும் மானியத்தில் இருந்து ஊதியம் வழங்குவர் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்குத் தகுதி பெறாத நிறுவனங்கள் CEWS திட்டத்தின் மூலம் மானியம் பெற்றிருந் தால் அவர்கள் அதைத் திருப்பிச் செலுத்துமாறு கேட்கப்படுவர். இந்த அரச மானியத்தைப் பெறத்திட்டமிட்டுத் தவறான தகவல்களை வழங்கி மானியம் பெற்றிருந்தால் அந்த நிறுவனங்களுக்கு அவர்கள் பெற்ற மானியத்தைத் திரும்பக் கட்டுவதுடன் மேலதிகமாக அவர்கள் பெற்ற மானியத்தின் 25 வீதத்தை அபராதமாகவும் கட்ட வேண்டி வரும். சில திட்டமிட்ட தவறான தகவலை வழங்கியோருக்குச் சிறைத்தண்டனையும் விதிக்கப்படலாம்.

கனேடிய அரசு C-14 அவசரகாலச் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் விரைவில் நிறைவேற்றுவதற்காக நாடாளுமன்றதைக் கூட்டமுன்னரே எதிர்க்கட்சிகளுடன் உரை யாடல்களை நடத்தியிருந்தது. இதனாலேயே நாடாளுமன்றம் ஏப்ரல் 11இல் ஆரம்பித்த வுடன் விரைவில் விவாதங்களை நடத்திச் சட்டமூலத்தை அமல்படுத்த சிறுபான்மை லிபரல் அரசுக்கு முடிந்தது. நாடாளு மன்றம் 2020 ஏப்ரல் 11 மாலை 12:15 இற்கு ஆரம்பிக்கப்பட்டவுடன் கடந்த 26 நாட்களாகத் தனது வதிவிட வாயிலில் நின்று நாட்டு மக்களுக்கு உரையாற்றிய பிரதமர் ஜஸ்ரின் ரூடோ நாடாளுமன்ற அவையில் இருந்து நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

தனது உரையின்போது பிரதமர் COVID-19 ஒரு தலைமுறையின் மிகப்பெரிய சவால் என்று கூறினார். அவர் தனது தாத்தா உட்பட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செய்த கடந்தகாலப் போர்க்கால முயற்சிகளுக்கு இணையாகத் தற்போதைய நடவடிக்கைகளைத் தெரிவித் தார். பிரதமர் மேலும் தெரிவிக்கையில், "மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே! இது ஒரு போர் அல்ல. ஆனால் இங்கு நடைபெறும் சண்டை போரைவிடக் குறைவான அழிவுகரமானதோ அல்லது குறைவான ஆபத்தை உடையதோ அல்ல. இங்கே முட்கம்பியால் குறிக்கப்பட்ட எந்த முன்வரிசையுமில்லை. கடலுக்குக் குறுக்கே எந்தப் படையினரும் நிறுத்தப்பட வில்லை. தோற்கடிக்கப்பட எந்த எதிரிப் போராளிகளும் இல்லை. ஆனால் இங்கு முன் வரிசை எல்லா இடங்களிலும் உள்ளது. எங்கள் வீடுகளில், எங்கள் மருத்துவமனைகள் மற்றும் பராமரிப்பு மையங்களில், எங்கள் மளிகைக் கடைகள் மற்றும் மருந்தகங்களில், பாரவண்டி (Truck) நிறுத்துமிடங்கள் மற்றும் எரிபொருள் நிரப்பும் நிலையங் களில் எல்லாம் முன்வரிசை உள்ளது. இந்த இடங்களில் பணிபுரியும் மக்கள் எங்கள் நவீனகால கதாநாயகர்கள் (Modern-day heros).

கனடா இந்த நெருக்கடியை எதிர் கொள்வதால் நாம் எல்லோரும் சேவை செய்ய அழைக்கப்படுகின்றோம். நம்முடைய சககுடிமக்கள் ஒவ்வொருவருக்காகவும் அவர்களுடன் சேர்ந்து போராட அழைக் கப்படுகின்றோம். நாம் எல்லோரும் இடை நிறுத்தம் இல்லாமலும், தயங்காமலும் எமது ஒவ்வொரு அங்குல நிலத்தையும் இந்நோயின் பிடியிலிருந்து மீட்கப் போராட வேண்டும். எமது எந்த முயற்சியையும் வீணாக்காமல் எங்களுடைய எல்லோருக்கு மான எதிர்காலத்தைப் பாதுகாக்க எல்லோரும் சேர்ந்து போராடுவோம்" என்றார்.




இந்தப் புதிய சட்டம் அமலாக்கப்படுவதன் மூலம் கனேடிய மத்திய அரசின் 2020 - 2021ஆம் நிதியாண்டிற்கான வரவுசெலவுத் திட்டத்தில் $184 பில்லியன் துண்டு விழுமென (Deficit) எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் Andrew Scheer இந்தச் சட்டமூலத்தை ஆதரித்துப் பேசுகையில், "அரசு, பிரயாணம் செய் வோருக்கான கட்டுப்பாடுகளை விரைவில் ஏன் விதிக்கவில்லை? வெளிநாடுகளில் இருந்து கனடாவுக்கு வந்தோரை ஆரம்பத்தில் பரிசோதனைக்கு ஏன் உட்படுத்தப்படவில்லை? அரசு அத்தியாவ சியமான மருத்துவ உபகரணங்களைப் போதியளவு கையிருப்பில் ஏன் வைத்திருக்கவில்லை? மற்றைய நாடுகள் போல் எங்களால் நோய்க்குரிய பரி சோதனைகளை விரைவாகவும் அதிக அளவிலும் ஆரம்பத்தில் ஏன் செய்ய முடியாமல் போனது? இவ்வாறான கனேடிய மக்களின் கேள்விகளுக்கு அரசு பதிலளிக்க வேண்டும்" என்றார்.

Andrew Scheer மேலும் தெரிவிக்கையில், "பிரதமர், மீண்டும் இரண்டாவது அலை யாக அல்லது சிலவேளை மூன்றாவது அலையாக நோய் பரவுமானால் அதை எதிர்கொள்ள நாம் தயாராக இருக்க வேண்டும்" என்றார். கனேடிய மக்கள் தங்கள் அரசு இவ்வாறு அடுத்தடுத்து வரவிருக்கும் அலைகளை எவ்வாறு எதிர் கொள்ளத் தயாராகி வருகிறது என அறிய விரும்புகின்றனர்" என்றார்.

பழமைவாதக் கட்சியின் மேற்சபைத் தலைவர் Donald Neil Plett "கனேடிய மத்திய அரசின் COVID-19இற்கான தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை களை அமல்படுத்திய முறைகளை ஆராய வேண்டும் என்றார். இந்நோயின் ஆரம்பப் பரம்பல் காலத்தில் அரசு மெத்தனப் போக்கைக் கடைபிடித்ததாக ஆவணங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மார்ச் 10ஆம் திகதி கனடாவில் COVID-19 நோய் பரம்பலுக்கான ஆபத்து மிகவும் குறைவாக உள்ளதாக கனேடியப் பொதுச் சுகாதார அதிகாரிகள், சுகாதார அமைச்சர் Patty Hajduஇற்கு அறிவித் திருக்கின்றனர். ஆனால் ஒரு வாரம் கழித்துக் கனேடியப் பிரதமர் நாட்டு மக்களின் சமூக மற்றும் பொருளாதார வாழ்க்கையை நிறுத்துமாறு உத்தர விடுமளவுக்கு நிலைமை மோசமாகி உள்ளது. மற்றைய நாடுகளெல்லாம் COVID-19 நோயின் பாதிப்பைப் பரவ விடாமல் மக்களைக் கட்டாயப்படுத்தித் தனிமைப்படுத்தல் (quarantine) மற்றும் நகரங்களை முற்றாகவே மூடிவிடுதல் (lockdown) போன்ற செய்கையில் ஈடுபடும் போது இந்த வைரஸினால் கனேடியர் களுக்கு ஆபத்து வராது என நினைத்துக் கனேடிய அரசு அசிரத்தையாக இருந்து விட்டது" என அவர் CEWS சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் மேற்சபையில் உரையாற்றும்போது குறிப்பிட்டிருந்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், "இந்த வைரஸ் நடந்தும், பறந்தும் எமது எல்லைகளைத் தாண்டி எமது நாட்டுக்குள் வந்து கொண்டிருந்தபோது இந்த அரசாங்கம் (வண்டியைச் செலுத்தும்) சக்கரத்தில் தூங்கிக் கொண்டிருந்தது" என்றார்.

## *Covid 19* இன் பதிவுகள்
### ஏப்ரில் 14, 2020 கணக்கின்படி

| நாடு | கனடா | இலங்கை | இந்தியா | அமெரிக்கா | உலகம் |
|---|---|---|---|---|---|
| இறந்தோர் | 898 | 07 | 393 | 25,162 | 124,544 |
| பாதிக்கப்பட்டோர் | 26,897 | 233 | 11,487 | 602,846 | 1,970,225 |
| சுகமடைந்தோர் | 8,173 | 61 | 1,359 | 44,263 | 469,926 |

# ஊரடங்கும்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

நடந்துகொள்கின்றனர்.

ஊரடங்கு சட்டம் அமலில் உள்ள நேரங்களில் பிரதேசங்களின் உட்பகுதி களில் உள்ள சிறு வர்த்தக நிலையங் களிலேயே அவசியமான பொருட்களை மக்கள் கொள்வனவு செய்கின்றனர். ஆனால், அதிக விலைக்கே அப்பொருட் களை கொள்வனவு செய்ய வேண்டியுள் ளது. அதற்கு காரணம் மொத்த விற்பனை நிலையங்கள் அவர்களுக்கு அதிக விலைகளுக்கே பொருட்களை வழங்குகின் றன. குறித்த மொத்த விற்பனை நிலையங்கள் பொருட்களை அதிக விலைகளுக்கு விற்பனை செய்ய வேண்டிய காரணங்கள் எவையுமில்லை. அத்தியாவசியப் பொருட்கள் கொழும்பி லிருந்து ஊரடங்கு வேளையிலும் வந்து கொண்டிருக்கின்றன. போக்குவரத்துக்கான செலவுகள் அதிகரிக்கப்படவில்லை. இந் நிலையில் ஏன் இவ்வாறு பொருட்களின் விலைகளை அதிகரிக்க வேண்டும்?

வடக்கிலுள்ள அதிகாரிகளின் செயற்பாடு கள் துரிதமானதாக இல்லை. உள் கிராமங்களிலுள்ள வணிக நிலையங் களுக்குப் பொருட்களை விற்பனை செய்யும் மொத்த விற்பனையாளர்கள் விற்பனைச் சிட்டை வழங்குவதில்லை. வெறும் துண்டுப் பேப்பரிலேயே எழுதிக் கொடுக்கின்றனர். இதிலிருந்தே அவர்களின் கள்ளத்தனத்தைப் புரிந்து



கொள்ள முடிகின்றது. இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய அதிகாரிகள் விற்பனைச் சிட்டை வழங்குவதை உறுதிப்படுத்தும் நடவடிக்கையை மேற்கொண்டாலேயே இந்த விலை அதிகரிப்பை பெருமளவில் கட்டுப்படுத்த முடியும்.

இன்று நாடு முழுவதுமே பெரும் இடர் நிலைக்கு முகம் கொடுத்து வருகின்றது. மக்களை பாதிக்கின்ற நடவடிக்கைகளை தடுக்க வேண்டிய பொறுப்பு அந்தந்தப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகளிடமே உள்ளது. அவர்களின் பொறுப்பற்ற தன்மையே மக்களின் பாதிப்பை அதி கரிக்கின்றது. இன்று நாடெங்கிலும் உள்ள மருத்துவத் துறைசார்ந்தோரின் கடமை யுணர்வும், அர்ப்பணிப்பும் அனைத்துத் தரப்பினருக்கும் இருந்தால் பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும்.



# நிலாவிலும் உலாவி வருவோம்

## இதுவோர் அறிவியற் தொடர்



- கனி -
ptons@hotmail.ca
416.261.1348


சென்ற தடவையில் ஓர் இடைச் செருகலாக, நிலவுடன் தொடர்பான இரண்டு புதிதாக வந்த அறிவியல் விடயங்களையும் அவற்றுடன் தொடர்பான சின்னச் சின்ன அலசல்களையும் பார்த்தோம். இனி எங்களின பாதைக்குள் மீண்டும் வருவோம்.

மார்ச் மாதத்தில் நிலாவினை வித்தியாசமான கோணத்தில் பார்த்ததை நினைவுக்குக் கொண்டு வாருங்கள். அதாவது, நமது நிலாவே ஒரு செயற்கைக்கோள் எனக் கூறி, சந்திரனில் தளமைத்துக் கொண்ட விஞ்சையர் சிலர். அதாவது வேற்றுக்கிரக மனிதர் சிலர் இன்றும் எம்மை அவதானித்துக்கொண்டு இருக்கின்றனர் எனக் கூறும் சில ஆய்வாளர்களினது கருத்துக்களை மேலோட்டமாகப் பார்த்தோம். அதன் தொடர்ச்சியாகவே இன்றைய கட்டுரையும் அமைகின்றது. வேற்றுக்கிரக மனிதரின் கைவண்ணத்தில் உருவானதுதான் நாங்கள் உலாப் பயிலும் நிலா என்பது கேட்பதற்கு என்னவோ இரசனையாகத் தான் இருக்கின்றது. ஆனால் சற்று ஆழமாகச் சிந்தித்தால்... இக்கூற்றில் சில வில்லங்கங்கள் இருப்பது புலனாகும். அவற்றையும் பார்த்துக் கொண்டே மீதியைத் தொடருவோம்.

### புவியில் மனிதர் ஆக்கப்பட்டார்களா?

இதென்ன புதுக்கேள்வி என்கிறீர்களா? தொடரும் உலாவில் சிறிது விளக்கம் கிடைக்கும், தொடருங்கள். எங்களது புவி, இந்தப் பிரமாண்டமான, புடைத்துக் கொண்டு போகும் புடவியின் (அதாவது பிரபஞ்சத்தின்) 3ஆம் தலைமுறை விண்மீன்களில் ஒன்றாக, 4.6 பில்லியன் அதாவது 4,600 மெய்யிரம் ஆண்டு முன்னராகத் தோன்றுகையில் அதனுடன் சேர்ந்தே தோன்றியது என்பது அறிவியல் கூறும் உண்மை. கிட்டத்தட்டப் புவி தோன்றிய காலத்திலேயே நிலவும் அவ்விடத்தில் வந்திருந்தால்தான் 3.75 பில்லியன் ஆண்டு முன்னர் புவியில் உயிரினங்கள் தோன்றி, நீங்களும் நானும் கூட இன்று இதுபற்றி எண்ணிக் கொண்டிருக்க முடியும். அவ்விதம் சிந்திக்கையில்தான் இக் கொள்கை மீது இடி விழுகின்றது.

கதிரவன் தோன்றி, அதன் பக்க விளைவாகப் புவி தோன்றுகையிலேயே புவியின் அருகில் தளமமைக்கும் எண்ணம் ஏன் யாரோ வேற்றுக்கிரக மனிதருக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். அப்படி ஒரு நிகழ்ச்சி நடந்திருந்தால். அவர்களுக்குப் புவியில் உயிரினங்கள் தோன்றும் என்ற அறிவு கூடக் கட்டாயம் இருந்திருக்கும். அதுகூட அவர்களினது ஆய்வுகளில் ஒன்றாக இருந்திருக்குமோ? சில காலங்களுக்கு முன்னர் பிரபல 'ஸ்ரார் ட்ரெக்' (star trek) ஆங்கிலத் தொலைக்காட்சித் தொடரில் இப்படியான பரிசோதனைச் செயற்பாட்டினை புவியின் மைந்தர்கள் வேற்றுக் கிரகங்களிற் செய்வது போன்ற கற்பனைக் கதைகள் இருந்தன. அவை கூட இப்படியான சிந்தனைகளின் வெளிப்பாடோ என்ற எண்ணமும் எழுகின்றது.




நிலாவில் உலாவிடும் இவ்வேளையில் ஸ்ரார் ட்ரெக் பற்றியும் சில விபரங்களையும் கூறிட விரும்புகிறேன். பாதை தவறுகிறேன் என எண்ணிடாதீர்கள். சாதாரண மனிதரும் விண்வெளியை, அறிவியல் வியப்புகளை அறியச் செய்த தொலைக்காட்சித் தொடர் பற்றியும் சில வரிகள் கூற விரும்புகிறேன். 1966இல் Gene Roddenberry என்பவரின் ஆக்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட இத்தொடர் மூன்று தொடர்களாக தொலைக்காட்சியில் வந்தது. பின்னர் திரைப்படமாக இதன் சில பகுதிகள் வெளிவந்த போது, கதையின் முழுமையைச் சிற்சில இடங்களிற் சுருக்க வேண்டி வந்தது என்று நம்பவேண்டியுள்ளது. அதனால் கதையின் பளபளப்புக் குன்றியதன் விளைவாக ஸ்ரார் ட்ரெக் திரைப்படங்கள் அவ்வளவாக மிளிரவில்லை. அல்லாமலும் தொலைக்காட்சித் தொடருக்கும் வரவேற்புக் குறைந்துக் கொள்ள,அத்தொடர் இன்று வருவதில்லை.

பொதுவாகவே நிலவில் தளமமைத்த வேற்றுக்கிரகிகளின் நோக்கமே புவியின் கனிம வளங்களை அள்ளிக் கொண்டு செல்வதற்கு என்பதுதான் ஓரளவுக்கு ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய கூற்று. இப்படியான கருத்தின் அடிப்படையில் வந்து பெரும் வரவேற்பினைப் பெற்ற அவதார் (Avatar) ஆங்கிலத் திரைப் படத்தையும் அறிவீர்கள். இன்னமும் உலக அரங்கிற் பெரும் பரபரப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் சுமேரியரின், '500,000 ஆண்டுக்கு முன்னர், நிலவில் தளமமைத்துப் புவியில் தங்கம் எடுத்தர்' என்ற நிபிறுக் கிரவாசிகளின் கதையும் ஓரளவுக்கு ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய ஒன்றாக அமைகின்றது. ஆனால் நிபிறு கிரகத்தினர் நிலவினை செயற்கைக் கோளாக அமைக்கவில்லை. ஏற்கனவே இருந்த நிலவினில்தான் தளமமைத்துக் கொண்டர் என்று சுமேரியர்களின் களிமண் தகட்டுச் செய்திகள் கூறுகின்றன. ஆனால், எனது பார்வையில் வானில் இருந்து வந்த அனுனாக்கிகள் என்ற கடவுளர் கதையும் உண்மையாக இல்லாமல், சுமேரியரின் கில்கமேஸ் அரசனின் கதை போன்ற, சுவையான புராணம் என்றுதான் படுகின்றது. எடுத்துக் காட்டாக, சுமேரியர்கள் தங்களின் வெவ்வேறு பட்டினங்களில், 'அனு', 'என்கி', 'என்லில்' போன்ற நிபிறுவினரைத் தங்களின் தெய்வங்களாக வணங்கி வந்த கோவில்கள் இருந்தன என்பதை அகழ்வாய்வுகளும், சுமேரியர்களின் குறிப்புகளும் கூறுகின்றன.

அருகில் சில சுமேரியக் கடவுளர்களின் படத்தைக் காணலாம். இந்தக் கடவுளர்கள் தான், புவியில் மனிதரை 200,000 ஆண்டு முன்பு ஆக்கினர் எனச் சிலர் கூறுகின்றனர். நன்கு கவனியுங்கள், இவர்கள் புவியில் மனிதரைப் படைக்கவில்லை, மாறாக ஆக்கினர் எனக் கூறுகின்றேன். நிபிறு கிரகத்தவர், புவியில் உள்ள தங்களது தங்கச் சுரங்கங்களில் வேலை செய்வதற்காக, கோமோ சேப்பியன்கள் எகன் கூறப்படும் புத்திசாலி மனிதர்களை, கோமோ இரெக்சஸ் என்கிற ஆதி மனிதரில் இருந்து, மரபியல் மாற்றங்களின் ஊடாக ஆக்கினர் எனச் சுமேரியரின் களிமண் தகட்டுக் குறிப்புகள் கூறுகின்றன எனச் சில ஆய்வாளர்கள் (அடித்துக்) கூறுகின்றனர்.

அருகில் இருப்பது, மனிதரைத் தங்களது சாயலில் படைப்பதற்கு, அதாவது ஆக்குவதற்கு யோசனையைக் கொடுத்த சுமேரியரின் பெண் தெய்வமான 'நம்மு'வைக் காட்டும் படமாகும்.

சுமேரியர் என்பவர்கள், உண்மையிலே குமரிக் கண்டத்தில் ஏற்பட்ட கடல்கோள்களுக்குப் பயந்து ஓடி, மெசப்பத்தேமியாப் பகுதிகளில் தங்கிய தமிழர் எனக் கூறும் ஆய்வாளர்களும் சிலர் உள்ளனர். அவற்றிக்கான சான்றுகள் பலவுள்ளன.



எமது நிலவுதான் 'நம்மு' என ஆகியதோ என எண்ணுவோரும் உண்டு.

இப்படியான சந்திரனின் கதைகள் உலவுகின்ற பின்னணிகளைத் தொகுத்துப் பார்க்கையில் 4.6 பில்லியன் ஆண்டுக்கு முன்னர், அறிவு கூடிய யாரோ வேற்றுக் கிரகிகள் புவி உருவாகுவதைத் தெரிந்து கொண்டு, தங்களது நலனுக்காகப் புவியின் அருகே சந்திரனை நிர்மாணித் திருப்பர் என்ற கூற்றினை ஏற்றுக் கொள்வது பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது, இல்லையா? இதனடிப்படையில் சந்திரன் ஒரு செயற்கைக் கோள் என்ற கருத்தினைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனத்தான் முடிவு செய்ய வேண்டும். ஆனால், வேற்றுக் கிரக மனிதரின் தளம் சந்திரனில் உள்ளது என்ற எண்ணத்தை முற்றாகவே தவிர்த்துக் கொள்ள முடியாதிருக்கிறது. அதற்கான காரணங்கள்...

இதுபற்றி விடயங்களைத் தொடர்ச்சித் தன்மை குன்றாது, அடுத்த தடவை நிலாவில் உலாவி வருகையிற் சற்று விபரமாகக் கதைத்துக் கொள்வோம். சரிதானே!



# இன்னல் நீக்கும் இயற்கை - 71



- அகணி -
authorakani@gmail.com

மிகவும் கனத்த இதயத்துடன் இந்த இதழிற்கான எனது பதிவை ஆரம்பிக் கின்றேன். கொரோனா என்ற வைரசு காரணமாக ஏற்பட்டுள்ள கோவிட்-19 என்ற நோயால் முழு உலகமும் வருந்திக் கொண்டிருக்கின்றது. இதற்கான தீர்வு கிடையாதா என்று நாங்கள் எல்லோருமே தவித்துக் கொண்டிருக்கின்றோம். இந்த இக்கட்டான காலகட்டத்தில் பல இயற்கை வைத்தியத் தகவல்களும் சமூக வலைத் தளங்களில் வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் கொரோனா என்பதே புதிதாக இருக்கும் பொழுது இந்தத் தகவல்கள் ஆதாரபூர்வமாகச் சரியானவை என்றோ அல்லது இவை பலனளிக்காதவை என்றோ அறுதியிட்டுச் சொல்லமுடியாத நிலையில் இருக்கின்றோம். இவ்வாறான தகவல்களில் சில ஒருமைப்பாடுகள் உள்ளதையும் நாங்கள் காணலாம். நாங்கள் ஏற்கனவே பேசிக் கொண்ட தகவல்களும் உள்ளன. நமது நோய் எதிர்ப்புச் சக்தியைப் பலப்படுத்துவதனால் முழுமையாகவோ அல்லது அதிக பாதிப் பின்றி சுகம் பெறுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கலாம் என்பதை மட்டுமே உணரக் கூடியதாகவுள்ளது.

பல மருத்துவர்கள் பல்வேறு ஊடகங்கள் வாயிலாகப் பயனுள்ள கருத்துக்களைப் பகிர்ந்து வருகின்றனர். இவர்கள் கூறும் கருத்துக்களையும், கனடாவில் விடுக்கப் படுகின்ற சுகாதார அறிவுறுத்தல்களையும் கவனத்துடன் செவிமடுத்து பின்பற்ற வேண்டியதும் முக்கியமானதாகும். கொரோனாவுக்கு நாளாந்தம் பலியாகிக் கொண்டிருக்கும் மக்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்துக் கொண்டு பயனுள்ள உடல் நலம் சார்ந்த சில தகவல்களைப் பகிர்ந்து கொள்ள விழைகின்றேன்.

டாக்டர் எம்.கே. முருகானந்தன் அவர்கள் எழுதிய 'வைத்திய கலசம்' என்ற நூலில் இருந்து நான் வாசித்தறிந்த விடயங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்று நினைக்கின்றேன்.

எள்ளில் 44 சதவீதம் முதல் 57 சதவீதம் கொழுப்புச்சத்து உள்ளது. ஆனால் இது நல்ல கொழுப்பு என்பர். எள்ளில் உள்ள லினோலெய்க் அமிலம் (Linoleic Acid) என்பதே இதற்கு காரணமாகும். இந்த அமிலம் இருதய நோய்களைத் தடுக்கக் கூடியது. எண்ணெய்களில் எள்ளிலிருந்து கிடைக்கும் நல்லெண்ணெய் மிகவும் சிறந்தது.

எள்ளில் கரட்டீன், அயடீன், விட்டமின் ஏ ஆகியவை உள்ளன. எள்ளில் 25 சத வீதம் புரதச்சத்து உள்ளது. தைரோயிட் பிரச்சினை உள்ளோருக்கு எள்ளு, நல்லெண்ணெய் ஆகியவை நல்லது. இரத்த அழுத்தம் உள்ளவர்கள் உடல் எடையில் அதிக கவனம் எடுக்க வேண்டும் என்று டாக்டர் முருகானந்தன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். இனிப்புப் பொருட்களைத் தவிர்த்தல், கொழுப்பு உணவுகளைத் தவிர்த்தல், உடற்பயிற்சி செய்தல் போன்றவை மூலம் உடல் எடையைக் குறைக்கலாம் என்று கூறுகின்றார். இரத்த அழுத்தம் உள்ளோர் புகைத்தல், மதுபானம் அருந்துதல் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும்.



உப்பு அதிகமாகவுள்ள உணவுகளைக் குறைக்க வேண்டும். போதியளவு ஓய்வும், நித்திரையும் தேவை. மனதில் கவலை, பயம், கோபம் போன்ற எதிர்மறையான விடயங்களுக்கு இடம் கொடுக்காது இருக்க வேண்டும். தியானம் செய்து கொள்வது இரத்த அழுத்தம் உள்ளோருக்கு உகந்தது. இரத்த அழுத்தம் உள்ளோர் மருத்துவ ஆலோசனைப்படி மிகவும் கவனமாக நடந்து கொள்ள வேண்டும்.

சோயாவில் 30 சதவீதம் முதல் 50 சத வீதம் அளவான புரதம் உள்ளது. சோயா வில் உள்ள கொழுப்பும் உயர்தரமானது.

இப்பொழுது டாக்டர் முருகானந்தன் அவர்கள் வைத்தியக் கலசம் என்ற நூலில் மார்படைப்பு அல்லது மார்புவலி பற்றிக் குறிப்பிட்டுள்ள சில தகவல்களைக் காணலாம்.

நாம் வழமையாகச் செய்யும் வேலை களுக்கு சற்று அதிகமாக வேலை செய்யும் பொழுது அல்லது அதிக உடற் பயிற்சி செய்யும்பொழுது நெஞ்சின் நடுப் பகுதியில் ஏற்படும் வலி மாரடைப்பிற்கான ஆரம்ப அறிகுறி.

நெஞ்சடைப்பு, நெஞ்சில் எரிவது, மூச்சடைப்பது போன்றவை ஏற்படும் பொழுது உடனே வைத்திய உதவியை நாடவேண்டும். மார்பின் நடுவில் ஏற்படும் வலி இடது தோள் மூட்டு, இடது கை, கழுத்து, தொண்டை, முதுகு போன்ற இடங்களுக்கும் பரவ வாய்ப்பு உண்டு.

சீரான உணவுமுறையைக் கடைப்பிடிப்பது மார்படைப்பு வராமல் தடுப்பதில் முக்கிய மான விடயம். புகைபிடித்தலை தவிர்த்துக் கொள்வது அவசியம். கொலஸ்ரோல் அதிகமாகவுள்ள முட்டை மஞ்சள் கரு, இறைச்சி, நெய், பட்டர் போன்ற உணவுகளை அதிகளவில் சாப்பிடுவது நல்ல தல்ல. தேங்காய் எண்ணெய்யைப் பயன் படுத்தாது நல்லெண்ணெய், சூரிய காந்தி எண்ணெய் போன்றவற்றைப் பயன்படுத்து வது நல்லது. தீட்டாத அரிசி, குரக்கன், மீன் போன்ற உணவுகள் ஆரோக்கியமானது.

அடுத்து நீரிழிவு நோய் பற்றி சில பயனுள்ள தகவல்களைக் கவனிப்போம். நீரிழிவு நோயாளர்கள் கடுமையான பசி, தள்ளாட்டம், கோபப்படுதல் போன்ற அறி குறிகள் ஏற்படும் பொழுது அலட்சியப் படுத்தாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இவை இரத்தத்தில் குளுக்கோசு குறை வதற்கான அறிகுறி. கவனிக்கவிட்டால் மயக்கம் ஏற்படும். அறிகுறிகள் வந்ததும் இனிப்பு உட்கொள்ள வேண்டும். 15 நிமிடத்துக்குள் சரிவராவிட்டால் உடனே வைத்திய உதவியை நாடவேண்டும்.

இரத்தத்தில் குளுக்கோசின் அளவு அதிகமாக ஏற்படும் பொழுது அதிக தூக்கம், அடிக்கடி சிறுநீர் கழித்தல், வாந்தி வருதல் போன்ற அறிகுறிகள் ஏற்படும். நீரிழிவு நோயுள்ளவர்கள் மாச்சத்து அதிகமாகவுள்ள உணவுகளைத் தவிர்த்து புரதச்சத்து, நார்ச்சத்து அதிக மாகவுள்ள உணவுகளை உட்கொள்ள வேண்டும். குரக்கன், தினை போன்ற உணவுகளை உட்கொள்ளுதல் நல்லது. புரதச்சத்து அதிகமாகவுள்ள கடலை, பயறு, சோயா, மீன், இறைச்சி போன்ற வற்றை உண்ணலாம். நார்ச்சத்து அதிக மாகவுள்ள கீரை, காய்கறி வகைகள் ஆகியவற்றை உண்ணுவது நல்லது. பயிற்றங்காய், பாகற்காய், கத்தரிக்காய், வெண்டிக்காய், வெங்காயம், வாழைப்பூ, நீற்றுப் பூசணி, முள்ளங்கி, தக்காளி, புடலங்காய், லீக்ஸ், கரட், இஞ்சி, உள்ளி, கறிவேற்பிலை போன்றவையும் நீரிழிவு நோயுள்ளோருக்கு உகந்த காய்கறி வகைகள்.

நீரிழிவு நோயுள்ளோர் உருளைக்கிழங்கு, பீற்றூட், மரவள்ளி, வத்தாளை போன்ற உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.

மோர், எலுமிச்சம்பழச்சாறு ஆகியவை நல்லது. பலாப்பழம், பேரீச்சம்பழம், மாம்பழம், திராட்சை ஆகியவற்றைத் தவிர்ப்பது நல்லது.

**அன்பான விளம்பரம் வாசகர்களே!**

**இயற்கை வளங்களால் எவ்வாறு இன்னல் நீங்கி வாழலாம் என்று அறியும் பொருட்டு எழுந்த தேடலில் கிடைத்த தகவல் பதிவாக அசைந்து கொண்டிருக்கும் இந்தத் தொடர் கட்டுரை எமது பொது அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் எழுதப்படுகின்றது. இந்தக் கட்டுரையில் கூறப்படும் கருத்துக் கள் இயற்கை சார்ந்து இருந்தாலும் உங்கள் உடல் நிலைக்கேற்ப பொருத்தமான மருத்துவ கருத்துக்களாக அமைந்துவிடாது என்பதை கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் பொருத்தமான வைத்திய ஆலோசனையை மேற் கொள்ளுங்கள் என்று வலியுறுத்திக் கூறிக்கொள் கின்றேன். ஆனாலும் நாம் இயற்கையோடு இணைந்து வாழ்வதற்கான தகவலையும், விழிப்புணர்வை யும், ஆரோக்கியமாக வாழ்வதற்கு வேண்டிய பொதுவறிவையும் இந்தக் கட்டுரை வழங்கும் என்று நம்புகின்றேன்.**

அதிக எடை கொண்ட நீரிழிவு நோயாளர்கள் எடையைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

நாமும் நன்றாக வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும்.

## கறுப்பு உளுந்தின் பயன்



இன்று உளுந்து என்றாலே வெள்ளை உளுந்து தான் அதிகம் பாவனையில் உள்ளது. ஆனால் கறுப்பு உளுந்து இட்லி, தோசைமா அரைக்கும்போது பயன்படுத்துவது மிக நல்லது. இக்கறுப்பு உளுந்தின் தோலில் கல்சியமும், பொஸ்பரசும் சமஅளவில் உள்ளன. இதனால் இட்லிமா நன்கு புளிப்பதற்கு இதுவே காரணம். நம் முன்னோரின் பாரம்பரிய உணவுகள் சுவைக்காக மட்டுமல்ல அறிவியல் காரணத்தோடுதான் இருந்தன.

ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL



• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat
Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca

# உயில் எழுதுவது அவசியமா?

**உயில் என்றால் என்ன?**

ஒருவர் தனது சொத்தினை தனது இறப்புக்கு பின்னர் யார் உரிமை கொண்டு அனுபவிக்கலாம் என்று தனது விருப்பத்தை எழுத்து வடிவில் எழுதுவது உயில் சாசனம் ஆகும்.

சொத்து இருப்பவர்தான் உயில் எழுத முடியும். சொத்து இல்லாதோருக்கு அதை பற்றி கவலைப்படத் தேவையில்லை.

சொத்து இருப்பவர், அவரின் வாழ்நாளின் கடைசி காலங்களில் உயில் எழுதி வைப்பது, அவரின் வாரிசுகளுக்குள் சண்டையில்லாமல் இருக்க வழிவகுக்கும் என சட்டமும், அதைப்படித்த சட்டத் தரணிகளும், அனுபவமிக்க பெரியவர் களும் சொல்லி வருகின்றனர். ஆனால் கட்டாயமாக உயில் எழுதிவைக்க வேண்டும் என்று எந்த அவசியமும் இல்லை. ஒவ்வொருவருக்கும் அவரவரின் குடும்ப சூழ்நிலை, தேவை, இவற்றைப் பொறுத்து உயில் அவசியமா இல்லையா என்பதை அவரவரே முடிவு செய்ய வேண்டும்.

- சொத்து இருக்கிறது என்பதற்காகவே மட்டுமே உயில் எழுதி வைக்க வேண்டாம்.
- தனக்கு வயதாகிவிட்டது என்பதற்கா கவே மட்டுமே உயில் எழுதி வைக்க வேண்டாம்.
- நாம் உயிருடன் இருக்கும்போதே, நம் சொத்துக்களை பிள்ளைகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்தால், நம் பிள்ளைகள் மகிழ்வர் அல்லது சண்டையிருக்காது என்பதற்காக மட்டுமே உயில் எழுதிவைக்க வேண்டாம்.
- பிள்ளைகள், நம்மைக் கட்டாயப்படுத்து கின்றனர் என்பதற்காக மட்டும் உயில் எழுத வேண்டாம்.
- நமது ஒத்த வயதுடைய நண்பர்கள் அதுபோல உயில் எழுதி வைத்துள்ளனர் என்பதற்காகவோ, அவரைப்போலவே நாமும் எழுதி வைத்து விடுவோம் என்பதற்காகவோ மட்டும் உயில் எழுத வேண்டாம்.
- நாம் இந்த உலகைவிட்டு சென்றபின், நமது பிள்ளைகள், "உயிருடன் இருக்கும் போதே, இந்தப்பாவி சொத்தை பங்கிட்டுக் கொடுத்திருக்கலாம்" என்று நம்மை திட்டி விடுவர் என்பதற்காகப் பயந்துகொண்டு உயில் எழுத எழுத வேண்டாம்.
- ஒரு மகனோ அல்லது மகளோ நம்மை நன்றாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர் என்ற வாஞ்சையால் உயில் எழுதி வைக்க வேண்டாம்.
- ஒரு மகனோ அல்லது மகளோ நமது கொள்கைக்கு எதிராக நடந்து கொண்டனர் என்பதற்காக அவனுக்கு அல்லது அவளுக்கு மட்டும் சொத்து போய் சேரவே கூடாது என்பதற்காக மட்டும் ஓர் உயிலை எழுதி வைக்க வேண்டாம்.

இதில் சொல்லியுள்ள எந்தக் காரணமும் உயில் எழுதுவதற்குப் போதுமான காரணமாகக் கொள்ள முடியாது.

முடிந்தவரை நம் வாழ்நாள்வரை நாமே நமது சொத்தையும் பணத்தையும் 100 சத வீதம் அனுபவித்து இறப்பதே சாலச் சிறந்த முடிவு. நமது வாழ்நாளுக்குப் பின்னர் மனைவிக்கோ அல்லது பிள்ளை களுக்குத்தான் அந்த சொத்து போய்ச் சேரப் போகிறது. இதில் எந்த சட்டப் பிரச்சினையும் வராது. வேறு மூன்றாம் மனிதர்களுக்கு எந்தக்காலத்திலும் அவை போய் சேராது.



நாம் இறந்தபின்னும், இந்த உலகம் எந்த சிக்கலும் இன்றி இயங்கத்தான் போகிறது. எல்லாச் சட்டங்களும் இருக்கத்தான் போகிறது. நாமே எல்லாவற்றையும் சரிசெய்து வைத்துவிட்டுப் போய்விடுவோம் என்றும், இல்லையென்றால் மற்றவர்களுக்கு அது சிக்கலை உண்டாக்கி விடும் என்றும் எண்ணிக் கொண்டு எதையும் செய்ய வேண்டாம்.

ஆனால், கீழ்கண்ட சூழ்நிலை இருந்தால் மட்டும் உயில் எழுதி வைக்க நீங்கள் முயற்சி எடுங்கள்.

- உங்களிடம் ஒரேயொரு சொத்து மட்டும் இருந்து, உங்கள் மனைவிக்கு வேறு எந்த ஆதரவும் இல்லாமல் இருந்தால், அந்த சொத்தை, உங்களின் காலத்துக் குப்பின், அந்த சொத்து முழுவதையும் உங்களின் மனைவிக்கே கொடுத்து விடுவதாய் உயில் எழுதி வைத்து விடுங்கள். (அவரை உங்களின் பிள்ளைகளிடமோ, மருமக்களிடமோ கையேந்த வைக்காதீர்கள்.)

- உங்களிடம் பல சொத்துக்கள் இருந்து, உங்களுக்கும் நல்ல வசதி இருந்தால், ஆதரவற்ற உங்களின் உறவினர்கள் உங்களை எதிர்பார்த்து இருந்தால், (மகன், மகள் தவிர, அதாவது, உங்களின் இறந்த மகனின் மனைவி, உங்களின் இறந்த சகோதரன் அல்லது சகோதரியின் வாரிசுகள், உங்களின் மனைவியின் இறந்த சகோதரன் அல்லது சகோதரியின் வாரிசுகள் போன்றோர் இருந்தால்) உங்களிடம் அதிகப்படியாக உள்ள சொத்துக்களை அவர்களுக்கு பிரித்து உயில் எழுதி வைத்து விடுங்கள்.

உயிலில் முக்கியமாக குறிப்பிடப்பட வேண்டியவை சில முக்கியமான விடயங்கள்.

1. நீங்கள் இறந்தபின் உங்களுடைய 18 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு ஒரு பாதுகாவலரை நியமித்தல்,
2. நீங்கள் இறந்தபின் உங்கள் சொத்துக்கள் எவ்வாறு பிரிக்கப்பட வேண்டும் என்பதற்கான வழிமுறைகள்.
3. வீடு, நிலம், வங்கிக் கணக்குகள், முதலீடுகள் மற்றும் தனிப்பட்ட உடைமை கள் ஆகியவற்றின் விபரங்கள்.
4. உங்கள் விருப்பப்படி நீங்கள் குறிப்பிட்ட வழிமுறைகளை நிறைவேற்றுபவரை குறிப் பிடுதல். தனிப்பட்ட பிரதிநிதி (Personal representative), நிறைவேற்றுபவர் (Executor) அல்லது அறங்காவலர் (Trustee) ஆகியோர் இதில் குறிப்பிடப்படலாம்.

**உயிலின் வகைகள் - Types of Wills:**

உயிலில் இரண்டு முக்கிய வகைகள் உள்ளன.

1. சான்றளிக்கப்பட்ட உயில் Attested (formal) Will
2. கையால் எழுதப்பட்ட உயில் (Holographic Will).

நீங்கள் இறக்கும்போது உங்கள் சொத்தைப்பெறும் நபர்களின் பெயர்களை குறிப்பிடுவதும் மற்றும் தனிப்பட்ட பிரதிநிதி யொருவரை குறிப்பிடுவதும் இரண்டு வகையான உயில்களும் ஒரே மாதிரியான சட்ட அங்கீகாரம் பெற்றவை.

இரண்டு வகையான உயில்களுக்கும் இடையிலான முக்கிய வேறுபாடு அவை எவ்வாறு எழுதப்படுகின்றன. அவற்றை சட்டப்பூர்வமாக்குவதற்கு என்னென்ன விடயங்கள் செய்யப்பட வேண்டும் என்பதே.

**ஒரு கையால் எழுதப்பட்ட உயிலிலிருந்து மற்றைய உயில் எவ்வாறு வேறுபடுகிறது?**

ஓர் உயில் வழக்கமாக தட்டச்சு செய்யப் படுகிறது. பின்னர் சம்மந்தப்பட்டவர்களால் கையொப்பமிடப்படுகிறது. அதேசமயம் ஒரு கையால் எழுதப்படும் உயில் என்றால் முற்றிலும் கையால் எழுதப்பட வேண்டும். தட்டச்சு செய்யப்படக்கூடாது. இந்த வகையான உயில்கள் பலமுறை நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

வழமையான உயிலை உருவாக்க சட்ட வல்லுனரின் உதவி தேவைப்படும் அல்லது வலையத்தள (Oneline will kits) கருவிகளைப் பயன்படுத்தி உருவாக்க லாம். ஒலி அல்லது ஒளி பதிவு (Audio or Video recording) உயில்கள் நீதி மன்றங்களால் ஏற்றுக்கொள்ளப்படமாட் டாது. கையால் எழுதப்பட்ட உயிலாக இருந்தாலும் அல்லது சட்ட ஆலோசகரின் உதவியுடன் எழுதப்பட்ட உயிலாக இருந்தாலும், உயிலெழுதுபவர் சுய விருப்பத்துடனும், நல்ல மனநிலையிலும், வேறொருவரின் வற்புறுத்தல் இல்லாமலும் குடிபோதையில் இல்லாமலும் எழுதப் பட்டிருக்க வேண்டும்.

சட்ட ஆலோசகரின் உதவியுடன் எழுதப் பட்ட உயிலை உறுதிப்படுத்துவதற்கு இரண்டு சாட்சிகள் தேவை. சாட்சிகள் 18 வயதிற்கு மேற்பட்டவர்களாகவும், இவர்கள் உயில் எழுதுபவரின் மனைவியாகவோ அல்லது உயிலில் கூறப்பட்ட பயனாளி களாகவோ இருக்க முடியாது.

**கனடாவில் கையால் எழுதப்பட்ட உயில் சட்டபூர்வமானதா?**

கனடாவில் பல மாகாணங்களில் கையால் எழுதப்பட்ட உயில் சட்டப்பூர்வமாகக் கருதப்படுகிறது. நீதிமன்றம் கையால் எழுதப்பட்ட உயிலை ஏற்றுக்கொள்வதற் கான சில நிபந்தனைகள் உள்ளன.

1. உயில் எழுதுபவர் தனது சொந்த கையெழுத்தில் முழுப் பெயர் மற்றும் முகவரியை எழுதி உயிலை எழுதி கையெழுத்திட வேண்டும்.



2. அவர் நல்ல மனநிலையில் உள்ளார் என்பதையும், ஆவணம் அவரது கடைசி விருப்பம் என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்.
3. தனது சொந்த உயிலை எழுதியுள்ளார் என்பதை நிரூபிக்க போதுமான அவரது கையால் எழுதப்பட்ட பிற துணை ஆவணங்களின் ஆதாரங்கள் இருக்க வேண்டும்.
4. கையால் உயிலை எழுதுவதில் ஒரு தனித்துவமான நன்மை என்னவென்றால், எந்த சாட்சிகளும் தேவையில்லை. இது ஒரு வசனத்தில் சுருக்கமாகக் கூட எழுதலாம்.

**கையால் எழுதப்பட்ட உயிலை எந்த மாகாணங்கள் சட்டபூர்வமானதா கருதுகின்றன?** Which Provinces Consider a

(தொடர்ச்சி 21ஆம் பக்கம்...)

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416.754.7338 / 416.724.7480
3011 Markham Road, Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# நாமும் நமது இல்லமும் 556



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

உலகளாவிய COVID-19 வைரசின் பாதிப்பினால் நிலைமைகள் நாளுக்கு நாள் மாறிவருவதனை காட்சிகளாகக் காணக்கூடியதாக உள்ளது. டிசெம்பர் 2019இல் வெளிப்பட்டதாகக் கூறப்படும் COVID-19 வைரசின் தாக்கம், கனடாவில் மார்ச் 2020இன் இரண்டாவது பகுதியில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தத் தொடங்கியது. இதுவரை இதன் பாதிப்பு எவ்வாறு இருக்கலாம் என்பதனை மார்ச் ஆரம்பத்தில் மிகவும் பாரதூரமாக கவனத்தில் எடுக்காத அரசு, மார்ச் மாதத்தின் இடைக்காலத்தில் தனது பலத்தை பாவிக்கத் தொடங்கியது. ஆனால் COVID-19 தனது வீரியத்தை ஏற்கனவே பரப்பி விட்டது.

ஒரு சில நாடுகள் குறிப்பாக சிங்கப்பூர், கொங்கொங் முன்னைய SARS (2003) இனால் ஏற்பட்ட அனுபவத்தை மிகவும் திறம்பட இங்கே கையாண்டனர். எதிர் பார்க்காத ஒன்றாக 2001 செப்ரெம்பர் 11 (911)இற்குப்பின் உலகில் எவ்வளவு மாற்றங்களை காணக்கூடியதாக இருந்தது. COVID-19இன் தொடர்ச்சி நிச்சயமாக பல மாற்றங்களை உருவாக்கும் என்பது எனது திடமான நம்பிக்கை. ஆய்வாளர்களின் அறிக்கைகளும் இதனை உறுதி செய்வ தாகவே இருக்கின்றது.

2020 மார்ச் மாதத்தின் கடைசி இரு கிழமைகளில் ஆதன வியாபாரம் எதிர் பாராத இறக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே தமது ஆதனத்தை விற்றோர், புதியதொரு இருப்பிடத்திற்காக ஆதனம் வாங்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ள னர். இதனால் அவர்கள் ஆதனத்தை வாங்க வேண்டும் என்ற கட்டாயத்தில் இருப்பதால் ஓரளவு ஆதனங்கள் விற்கப் படுகின்றன. ஏப்ரல் ஆரம்ப கட்டத்தில் இந்த நிலைமையே தொடருகின்றது.




ஆதன வியாபாரம் மந்தமாகவே காணப் படுகிறது. மாகாண அரசினால் கொண்டு வரப்பட்ட அத்தியாவசியமான சேவைகள் (Essential Services) என்ற கட்டமைப்பிற்குள் ஆதன வியாபாரமும் அடங்குகின்றது. திறந்த வீடு (Open House) வைப்பதை தடுத்த போதிலும் ஆதனம் வாங்குதல் விற்றலிற்குத் தடை கிடையாது. இதனால் இவ்வியாபாரம் சிறிதளவு நடைபெறுவ தனைக் காணலாம். இதன் தொடர்ச்சி எவ்வாறு இருக்கும்? 2008/2009 மற்றும் 2017/2018 போலல்லாது இந்த முறை பொருளாதாரம் முற்றாக ஸ்தம்பித்து விட்டது. உடனடியான வேலையற்றோர் தொகை கனடாவில் 12%வரை செல்ல லாம். அல்பேட்டாவில் 25%வரை செல்ல லாமென எதிர்வு கூறப்படுகிறது.

முகவர்களும் வீடுகளுக்குச் சென்று பார்ப்பதையும் தமது வாடிக்கையாளர் களை கூட்டிச் செல்வதையும் முக்கியம் இல்லாத சந்தர்ப்பங்களில் தவிர்க்கவே பார்க்கின்றனர். (Safety is most important). இதனால் சந்தைக்கு விற்பனைக்காக கொண்டு வரப்படும் ஆதானங்களும் குறைவடைகின்றது. வியாபாரமும் குறை வடைகின்றது. ஒவ்வொரு வாரங்களும் மெதுவாக நகர்கின்றது. பல மாற்றங்கள் நிகழ்கின்றன. இதுவும் கடந்து போகும்.

## HELOC (Home Equity Line Of Credit) நன்மை?




ஆதனத்தின் பெறுமதிக்கேற்ப நிதி நிறுவனங்களில் பெறப்படும் ஒருவகைக் கடன். இது அடமானக்கடன் (Mortgage) போன்றதல்ல. இதன் வட்டி வீதம் பொதுவாக முதன்மை வட்டி வீதத்திற்கு ஏற்ப மாறுபடும். ஓர் ஆதனத்திற்கு எதிராகக் கடன் இல்லாத சந்தர்ப்பத்தில் ஆதன விலையின் 80% வரை HELOC பெறமுடியும். அல்லது அடமானக் கடனை யும் இக்கடனுடன் சேர்த்து ஆதனத்தின் விலையின் 80%வரை இக்கடனைப் பெறலாம். இதன் வட்டி வீதம் 2ஆவது, 3ஆவது அடமானக்கடன் மற்றும் கடன் அட்டை (credit card)களின் வட்டி வீதங்களைவிட மிகக் குறைவானது.

இன்றைய காலத்தில் ஆதனத்தின் விலை யில் ஏற்பட்ட இறக்கத்தினால் HELOCஇன் பெறுமதியும் குறையக்கூடிய சந்தர்ப்பங் களும் உண்டு. எமக்கு அவசர நிலைகள் ஏற்படும்போது HELOC சிறந்த ஒரு பாதுகாப்பு அரண்.

பொதுவாக HELOCஇன் வட்டி வீதம், முதன்மை வட்டி வீதத்திலும் 0.5% இலிருந்து 1.0%வரை அதிகமாகும். இன்றைய முதன்மை வட்டி வீதம் 2.45% ஆகும். எனவே HELOCஇன் வட்டி வீதம் 2.95%இலிருந்து 3.45%வரை வேறுபடலாம்.

இன்றைய நெருக்கடியான பொருளாதார நிலையில் மாதாந்தக் கொடுப்பனவில் ஏற்படும் தவறுகள் முழுமையான HELOCஐயும் நிதி நிறுவனங்களால் நிறுத்தக்கூடிய சந்தர்ப்பங்களும் உண்டு. HELOCஇன் கொடுப்பனவு பொதுவாக மாதாந்த வட்டி மட்டுமே. இதனால் ஒத்தி வைக்கப்படும் கடன் கொடுப்பனவு (deferred payments) இதற்குப் பொருந்தாது. ஏற்கனவே HELOC வைத்திருப்போர், மாதாந்தக் கொடுப்பனவைக் குறிப்பிட்ட நேரத்தில் தவறாது செலுத்துவது நல்லது. சிறிய தவறு பெரிய நஷ்டத்தைக் கொடுக்க லாம் என்பதனைக் கருத்தில் கொள்க.

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, • முதுகு நோவு
• வாகன விபத்து • மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி,

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL • TUMOR
• FOOT PROBLEM



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

Cough, Flu, Depression, Anxiety, Asthma, Tonsillitis
Gout, Arthritis, P.M.S, Leucorrhea, Migraines, Hair Loss
Diabetes, Cystitis, Cancer, Prostatitis, Obesity, Hemorrhoids
Stumatitis, Colitis

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

## கொரோனா!



நீ எமனுக்குப் பேரனா? இந்த ஆட்டம் ஆடுகிறாய்?
ஆடாத ஆட்டமெல்லாம் ஆடியவர்கள் அடிமாண்டு போன
கதைகள் உனக்குத் தெரியாதா?
தடம் மாறிப் போனோர் தடுக்கி விழுந்து தாடையைப்
பெயர்த்துக்கொண்டு - தரையில் உருண்டு தரிப்பணமாய்ப்
போன கதையையும் உனக்குச் சொல்லத்தான் வேண்டுமா?

உனக்கு மூலமும் இல்லை - முடிவும் இல்லை அதனால் நீ
இறைவன் என்று இறுமாப்பு கொள்கிறாயா? நீ புழு - பூச்சி
கூட அல்ல. உயிரும் உருவமும் அற்ற அற்பப் பதர் நீ!
நீ இறைவனா?

இல்லை. ஆதியும் அந்தமும் இல்லாத எங்கள் இறைவன்
எங்கள் இதய சிம்மாசனங்களில் என்றென்றும் நீக்கமற
நிறைந்திருக்கிறான். அவனுடைய இடத்தில் நீயா? -வேடிக்கை!

எங்கள் அறிவியல் மேதைகளின் ஆற்றலின் வடிவமாய்
எங்கள் மகத்துவமிக்க சக்தி வெளிப்படும். இப்போதே
ஆய்வு செய்யத் தொடங்கி விட்டனர். இனி தோண்டுவர் -
துருவுவர் - துழாவுவர். கையில் சிக்கினால் செத்தாய்!
வேரோடும் - வேரடி மண்ணோடும் உன்னை பிடுங்கி
தரையில் தூக்கி அடிப்பர்.

நீ வெயிலில் கிடந்து கருகிச் சருகாவாயோ அல்லது நெருப்பில்
கிடந்து வெந்து சாம்பலாவாயோ? அது அந்த இறைவனுக்கே
வெளிச்சம். அந்த இறைவனையே நாங்கள் நம்புகிறோம்.
நம்பினோர் கெடுவதில்லை. இது 'நமது' மறை தீர்ப்பு.

Sathankulam Abdul Jabbar

# ஒரு யாழ்ப்பாணத்து வீடு - திரைவிமர்சனம்



ஞா. ஆரணி

நோர்வே நாட்டில் எடுக்கப்பட்ட ஒரு இலங்கைத் தமிழ் படம். இப்படம் ஒரு மணித்தியாலம் நீளம் கொண்டது. பாதி நோர்வேயிலும் பாதி இலங்கையிலும் நடைபெறும் இக்கதை, முழுவதும் நோர்வேயில் எடுக்கப்பட்டிருக்கிறது. இதற்காக நோர்வேயில், இலங்கையில் 1980களில் காணப்படக்கூடிய வீடு, கடைகள் போன்ற அமைப்புகள் செய்யப் பட்டு படம் எடுத்திருக்கின்றனர். 2013இல் எடுக்கப்பட்ட இப்படம் அண்மையில் You Tubeஇல் எல்லோரும் பார்ப்பதற்காகப் போடப்பட்டுள்ளது.

இப்படம் இரண்டு காலங்களில் நடைபெறு கிறது. முதலாவது இலங்கையில் நடைபெறும் 1980இன் பழைய கதை. மற்றையது 2013இல் நோர்வேயில் நடைபெறும் கதை. இவ்விரு கதைகளும் மாறி மாறி திரையில் வருகின்றன.

நோர்வேயில் வாழும் சிறுமி அப்பாவால் வீட்டிற்கு வரவழைக்கப்படும்போது அவருக்குத் தனது அம்மா, தனது அப்பாவைப் பிரிந்து வேறு வீட்டிற்குச் சென்றிருக்கிறார் எனத் தெரியவருகிறது. இது ஏன் எனப் புரிய முயலுகிறார். இதேவேளை நாம் இலங்கையில் வாழும் கமலினி என்ற பெண்ணின் வாழ்க்கை யையும் காதல் கதையையும் பற்றித் திரை யில் காணுகிறோம்.

இப்படத்தில் பல கதாபாத்திரங்கள் உள்ளன. கமலினி, அவரது தாய், தம்பி, காதலன் மற்றும் தம்பியின் நண்பன் இருக்கின்றனர். நோர்வேயில் சிறுமி, அவளது அக்காவும் இருக்கின்றனர்.



அத்தோடு இந்தக் கதாபாத்திரங்கள் ஒரே குடும்பத்தினர் என சற்று நேரத்தில் பார்வையாளருக்கு தெரியவருகிறது.
கமலினி தகப்பன் இல்லாத ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் ஒருவரைக் காதலித்தாலும் அவரது தாயும் தம்பியும், தம்பியின் நண்பனையே கமலினி கல்யாணம் செய்ய வேண்டும் என வற்புறுத்தியுள்ளனர். கமலினிக்கு விருப்பம் இல்லாவிட்டாலும் தம்பியின் நண்பன் வசதியுடன் இருப்பதாலும் அவர் கமலினியையும் தம்பியையும் வெளிநாட்டிற்கு அழைத்துக் கொண்டு செல்வார் எனக்கூறி தாய் வற்புறுத்துகிறார்.

கமலினி எடுப்பதற்கு முடிவுகள் பல இத்தருணத்தில் உள்ளன. அவர் தைரியமானவர் என்றால் காதலனைக் கல்யாணம் செய்திருப்பார். இல்லாவிட்டால் குடும்பத்தை முன்னேற்ற, அக்காலத்திற்கு ஏற்ப வெளிநாட்டவரை கல்யாணம் செய்து நோர்வே போயிருப்பார். இரண்டுக்கும் கதையில் விளக்கம் கொடுக்கப்படுகிறது.

நோர்வேயில் நடைபெறும் கதையைப் பார்க்கும்போது, சிறுமி தனது தாய் ஒருவரைக் கல்யாணத்திற்கு முன்னர் விரும்பியதாகவும், அதனால் கடந்த பல வருடங்களாக சோகமாக இருந்ததால் தனது அக்கா, தங்களது அம்மாவை தகப்பனை விட்டு வேறு வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வந்தார் எனத் தெரிய வருகிறது. சோகமாக இருப்பதை விட தனிய ஒரு வீட்டில் இருப்பதுமேல் என அக்கா நம்புகிறார்.

இது சரியாக இருந்தாலும் ஒரு படமாகப் பார்க்கும் பொழுது கதை திருப்தி இல்லாமல் முடிகிறது எனத் தோன்றுகிறது. விரும்பியவரை கல்யாணம் செய்யாமல், கல்யாணம் செய்தவரை வெறுத்துக் கொண்டு, பிள்ளைகளையும் பெற்று, வளர்த்தும் சோகமாகவே தாயார் இருக்கிறார்.

முக்கியமாக அவர் கல்யாணம் செய்தவர் படத்தில் ஒரு முறையும் கூடாதவராக உறுதியாகக் காட்டப்படவில்லை. எனவே தனியாகப் பழைய கதையை சோகத்துடன் நினைப்பதைவிட, இருக்கின்ற வசதிக் கேற்ப சந்தோசமாக வாழ முயற்சிக்கலாம் என்ற கருத்துத்தான் பார்வையாளருக்கு தெரிகிறது. எனவே உண்மையில் இப்படிப் பல கதைகள் இருந்தாலும் படம் பார்த்து



முடிக்கையில் தாயிக்கு இரண்டு வாழ்க்கை யும் இல்லாமல், பல வருடங்களை வீணாக்கிவிட்டு, பொருத்தமில்லாத நிம்மதி யில்லாத முடிவை அவர் எடுத்துவிட்டது போலவே தோன்றுகிறது.

இது எம்மவர் முயற்சியென்பதால் நாம் இப்படத்தைப் பார்த்து மேலும் படங்கள் வெளிவர அவர்களை ஊக்குவிப்போம்.



# நமது முன்னோரின் நலமான வாழ்வுக்கான நடைமுறைகள்



- துறையூரான் -

## பகுதி -2

5. அந்நாட்களில் நமது மக்கள் வாகனங்கள் கண்டுபிடிக்காத காலத்தில் கால்நடையாகவே பல இடங்களுக்குச் சென்றனர். காலில் செருப்புக்கூட இல்லாமல் இவர்கள் நடந்தே சென்றனர். உள்ளங்காலில் உடலில் இருக்கும் முக்கியமான நரம்பு மண்டலங்களின் இறுதி முடிவாக இருப்பதால், நடந்து செல்வது உடலின் பல்வேறு அவயவங்களும் சிறப்பாக வேலை செய்வதற்கு நன்கு உதவியது. அதனால்தான் நமது முன்னோர் 100 வயதை அடைந்த காலத்திலும் மிகுந்த ஆரோக்கியமான உடலோடு நோயற்ற வாழ்வை வாழக் கூடியவர்களாக இருந்தனர். பின்னர் சைக்கிள் நடைமுறைக்கு வந்தது ஓரளவுக்கு உடலுக்கு நன்மையை கொடுத்தாலும் நடப்பதைப் போன்ற நன்மையைக் கொடுக்கவில்லை. மேலும் கார் போன்ற வாகனங்கள் வந்தபின் மக்கள் நடப்பதை விட்டு நோயை தேடிக் கொண்டனர். இதனால் நாம் நாகரிகம் என்ற போர்வையில் நமது வாழ்வை குறைத்துக் கொண்டோம். பல நோய்களும் எம்மை வந்து சேர்ந்து எமக்குத் தீராத வலிகளை ஏற்படுத்திக்கொண்டு இருக்கின்றன. நான் அனுபவத்தில் கண்ட பல விடயங்கள் இங்கே உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன். என்னுடைய மாமனார் கால்நடையாகவே எல்லா இடங்களுக்கும் சென்று வருவார். சைக்கிள் நடைமுறைக்கு வந்தபோது அவர் அதை பழக விரும்பவில்லை. 95 வயது அளவில் அவர் இயற்கை மரணம் எய்தினார். அதுவரைக்கும் அவருக்கு எந்த நோயும் வரவே இல்லை. நமது முன்னோரைப் பின்பற்றுவதை மீண்டும் நாம் கைக்கொள்வது மிகவும் முக்கியம்.

6. இனி எமது கோவில்களில் இருக்கும் சுகாதாரமான சூழலைப் பற்றிப் பார்ப்போம். பெரும்பாலும் கோவிலுக்குப் போவதற்கு முன்பு நாம் யாவரும் குளித்துத் தூய ஆடைகள் அணிந்து செல்வது வழக்கம். இதுவும் நமக்கு பரம்பரை பரம்பரையாக உள்ள ஒரு பழக்கம். கோவில் வாசலில் இருக்கின்ற நீரில் கை கால் அலம்பி சுத்தம் செய்த பின்னரே நாம் உள்ளே நுழைவது இப்போதும் நடைமுறையில் உள்ளது. கோவிலில் எந்நேரமும் ஊதுவத்தி அல்லது சாம்பிராணிப் புகை எங்கும் பரவி சுற்றாடலை தூய தாக்குகின்ற நிலமையை நாங்கள் பார்க்கலாம், இதனால் தீய கிருமிகள் பரவுவது தடை செய்யப்படுகின்றது. அத்துடன் சுற்றாடலும் நறுமணம் வீசுகின்ற இடமாக இருக்கும்.

அடுத்து அந்நாட்களில் மின்சார விளக்குகளுக்குப் பதிலாக தேங்காய் எண்ணெய் அல்லது நெய் ஊற்றிய விளக்குகளே எங்கும் எரிந்து கொண்டிருப்பதை நாம் காணலாம். தற்போது மின்சார விளக்குகள் கூடுதலாகப் பாவனையில் உள்ளன. சுவாமியின் அருகாமையில் மட்டும் குத்து



விளக்குகள் எரிந்து கொண்டிருப்பது வழக்கமான நிகழ்வாக உள்ளது. குத்து விளக்குகளிலிருந்து வரும் ஒளி நமது கண்ணுக்கு நன்மை தரும் என்பதை நமது முன்னோர் நன்கு அறிந்திருந்தனர். பெரும்பாலும் கிரியைகளிலும் கோவில்களிலும் செய்யப்படும் அத்தனை செயல்களும் நமக்கு நன்மை தருவனவாகவே அமைந்திருந்தன. இவற்றில் உண்மையான பயன்களை அறியாமல் நாம் நவீன உலகில் அவற்றையெல்லாம் மூட நம்பிக்கை என்று கைவிட்டுவிட்டு நோயை தேடிக் கொள்கிறோம். பெரும்பாலும் கோவில் செயல்கள் யாவற்றிலும் கற்பூரம், சாம்பிராணி, மஞ்சள், பால், பலவகைப் பழங்கள் பூஜை பொருள்கள் யாவற்றிலும் ஒரு முக்கியமான உடலுக்கும் உள்ளத்துக்கும் பயன்தரக்கூடிய விடயங்கள் இருக்கின்றன. நாங்கள் நெற்றியில் பூசும் திருநீறு கிருமிகளை கொல்லும் சக்தி வாய்ந்தது. அவ்வாறே சந்தனம் மூளைக்குக் குளிர்ச்சியையும் நறுமணத்தையும் தருகிறது. குங்குமம் கூட இந்தக் காரணத்துக்காகவே நெற்றியில் திலகமாக இடப்படுகிறது. எமக்குத் தருகின்ற தீர்த்தம் கலந்த நீரில் மருத்துவ குணமுள்ள பொருட்கள் கலக்கப்பட்டு இருக்கும். சிலவேளைகளில் மஞ்சள் கலந்த பாலையும் தீர்த்தமாகக் கொடுப்பர். அடுத்து ஆராத்தி காட்டிய தீபத்தை ஐயர் எங்களுக்கு முன்னால் பிடிக்கும்போது எமது கைகளிரண்டையும் அகல விரித்து நாம் அந்தத் தீபத்தை அப்படியே கையால் வணங்கிக்கொண்டு கண்ணில் ஒற்றிக் கொள்வது வழக்கம். இது எதற்காக செய்கிறோம் என்பது பெரும்பாலானோருக்குத் தெரியாது. காரணம் இதை ஒரு வழக்கமாகச் செய்கிறோமே தவிர அதைப்பற்றி யாரும் தெரிந்து கொள்வதில்லை. கையிலே இருக்கின்ற கிருமிகள் தீபத்தில் பட்டதும் அழிந்து போகின்றன. பின்னர் எமது கைகளை நாங்கள் முகத்திலும் கண்ணிலும் ஒற்றிக் கொள்கிறோம். அவ்விடங்களில் உள்ள கிருமிகளும் அற்றுப் போகின்றன. இதை அறியாமலே செய்கிறோம். நாம் கோவில்களில் செய்கின்ற பல செயல்கள் கிருமி அகற்றும் பல்வேறு நடவடிக்கைகள் என்பது இப்போது நன்றாக விளங்குகிறது.

தற்போது கொறோனாக்கிருமி பரவுகின்ற வேளைகளில்தான் இவற்றின் உபயோகங்களைப் பற்றி நாம் அக்கறை கொள்கிறோம். எனவே நமது முன்னோர் அதிகமானோர் கூடுகின்ற இடங்களிலெல்லாம் கிருமித் தொற்றுக்களை அகற்றுவதற்காகவே இவ்வாறான செயல்களை செய்து வைத்தனர். சைவக் கோயில்களின் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் நீங்கள் ஆராய்ந்து பார்த்தால் அதில் நமது சுக வாழ்வுக்கு ஊன்றுகோலாக இருக்கும் பல நிகழ்வுகளை காணக் கூடியதாக இருக்கும்.

7. ஆங்கிலேய வைத்தியமுறைகள் நமது நாட்டுக்கு வருவதற்கு முன்பு இயற்கை மூலிகைகள் கொண்டு தயாரித்த மருந்து வகைகளையே நாம் உட்கொண்டு ஆரோக்கியமாக வாழ்ந்தோம். கோரோசனை, குங்குமப்பூ, பெருங்காயம், திப்பிலி, கடுகு, மிளகு, வெந்தயம், சீரகம் போன்ற மருந்துப் பொருட்களை கொண்டு தயாரித்த கலவைகளை குடிநீராகவும் சூரணங்கள் ஆகவும் உண்டு ஆரோக்கியமாக பக்கவிளைவுகள் எதுவும் இன்றி வாழ்ந்து வந்தோம். தற்போது ஆங்கில மருந்துகளை உண்டு பக்கவிளைவுகளோடும், நோயோடும் வாழ்கின்றோம். இதனால் ஒரு நோய்க்குப் பதிலாக இன்னொரு நோயையும் வரவழைத்துக் கொள்கிறோம். நவீன வைத்திய



முறைகளால் நன்மைகள் ஏற்பட்டாலும் தீமைகள் இல்லாமல் இல்லை. எனவே நீரிழிவு, இரத்த அழுத்தம், மூட்டு வாதம், அஜீரணம் போன்ற நோய்களுக்கு எமது நாட்டு வைத்திய முறைகளை கைக்கொள்வது நல்லது எனப் பலரும் இப்போது உணர்ந்து செயல்படுவதை காணக்கூடியதாக இருக்கிறது.

8. நமது முன்னோர் உடல் ஆரோக்கி

(தொடர்ச்சி 17ஆம் பக்கம்...)

Alexander Immigration Services
Hemalatha K. Alexander, RCIC
Commissioner of Oaths
Canadian Government Licensed Immigration Consultant

- Express Entry
- Study Permit
- Visitor Visa
- Super Visa
- Citizenship
- LIMA & work Permit**
- Federal Skilled Workers
- Federal skilled Trades
- Canadian Exp. Class
- Business Immigration
- Provincial Nomination
- Family Sponsorship
- Visa extensions, renewal & more service

நிரந்தர குடியிருப்பு, விசா, குடியுரிமை
மற்றும் பல சேவைகள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்
ஆலோசனைக்கு இன்றே அழையுங்கள்
647-773-3673
email: info@alexanderimmigration.ca
web: www.alexanderimmigration.ca
வசதியான புதிய முகவரியில்
GTA Square
5215 Finch Ave. East Suite 261,
Toronto ON M1S 0C2
10 Milner Business Court
Suite 300,
Toronto, ON M1B 3C2
** Kindly note we do not provide Canadian jobs

# புவி நாள்



விதுசிகா அருள்தாசன்
அகவை -15

பூமி நாள் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி கொண்டாடப்படு கிறது. நமது பூமியைப் பாராட்டுவதற்கும் நமது சூழலை ஆதரிப்பதற்கும் இந்த நாள் கொண்டாடப்படுகின்றது.



பூமி நாள் முதன்முதலில் 1970ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது. அன்றை நாளில் நமது சூழலுக்கு உதவ, நாம் ஒரு மரத்தை நடலாம், குப்பைகளை சுத்தம் செய்யலாம், கடற்கரைகளை சுத்தம் செய்யலாம், வாகனம் ஓட்டுவதற்குப் பதிலாக சைக்கிள் ஓட்டலாம் அல்லது நடந்து செல்லலாம், உழவர் சந்தையில் வர்த்தக நடவடிக்கை களை மேற் கொள்ளலாம், மீண்டும் பயன்படுத்தக் கூடிய தண்ணீர் போத்தல்களை வாங்கலாம், பிளாஸ்ரிக் பயன்பாடுகளை குறைக்கலாம் மற்றும் விளக்குகளை நிறுத்தி வைக்கலாம்.



பூமி நாள் என்பது பூமியையும் சுற்றுச் சூழலையும் பாராட்டுவதாகும். தொற்று நோய் காரணமாக, முழு உலகமும் கொரோனா வைரஸின் எதிர்மறையான தாக்கங்களில் மாத்திரமே கவனம் செலுத்தியது, ஆனால் சில நன்மையான விளைவுகளும் உள்ளன.

நேர்மறையான சில விளைவுகள் உண்மை யில் நமது பூமிக்கு உதவுகின்றன. சீனாவில் பாரிய அளவு மாசு குறை வடைந்துள்ளது. சீனாவில் எந்த மாசு பாடுகளும் இல்லாமல் போயுள்ளது. மக்கள் பல ஆண்டுகளுக்குப் பிறகு நீல வானத்தைப் பார்க்கின்றனர் என்று கூறப்படுகின்றது. எல்லா தொழிற்சாலை களும் மூடப்பட்டு அனைத்தும் பூட்டப் பட்டிருப்பதால் இந்த மாற்றம் நிகழ்ந்தது.

இத்தாலியிலும், எல்லாப் பகுதிகளும் மூடப்பட்ட பிறகு, இத்தாலியின் வெனிஸில் உள்ள கால்வாய் நீர் தெளிவாக உள்ளது. மீன்கள் நீந்துவதைக் காணக் கூடிய அளவிற்கு நீர் தெளிவாகியுள்ளது டன் நீண்ட காலத்திற்குப் பிறகு, அன்னப் பறவைகள் கால்வாய்களின் மீது வெளியே வந்துள்ளன.

இந்தியாவில், தெளிவான வானம் ஏற்பட்டதன் காரணமாக பலருக்கு இமய மலையைப் பார்க்க முடிந்ததாகக் கூறப்படுகிறது. எல்லோரும் வீட்டிலேயே இருந்தபின் மாசு உண்மையில் அழிந்து போயுள்ளது. போக்குவரத்து மாசு முழுமையாக இல்லாமல் போயுள்ளது. எல்லோரும் வீட்டிலேயே இருப்பதால், பல விலங்குகள் தங்கள் வாழ்விடத்திலிருந்து வெளியே வந்து, தாம் கொல்லப்படுவோம் என்ற பயம் இல்லாமல் சுதந்திரமாக சுற்றி வருகின்றன.

இந்த தொற்று நோயின் மற்றொரு சாதகமான விளைவு என்னவென்றால், பிளாஸ்ரிக் பயன்பாடு குறைவடைந்துள் ளது. எல்லோரும் வீட்டில் இருக்கின்றனர், எனவே பிளாஸ்ரிக் பயன்பாடு அடிக்கடி தேவையில்லை. எல்லோரும் வீட்டில் இருக்கும் நேரம் என்பதனால், நமது பூமியை பாதுகாப்பாகவும் ஆரோக்கியமாக வும் வைத்திருக்க விரும்பினால், அதற் கான நடவடிக்கைகளை மேற் கொள்ள லாம். எல்லோரும் தங்களைப் பற்றி சிந்தித்து மேம்படுத்தக்கூடிய காலம் இது.

உங்களை நீங்களே உருவாக்க உதவும். நமது பூமிக்கு உதவுவதற்கான வழிகளைக் கொண்டு வாருங்கள், ஏனென்றால் மாசுபாட்டை நிறுத்தி பூமியைக் காப்பாற்ற முடியும் என்பதை கொரோனா வைரஸ் நிரூபித்துள்ளது. சில நாட்களில், புவி நாள் கொண்டாடப்படுகின்றது. முதலில் சிறிய விடயங்களைச் செய்வதன் மூலம் நமது பூமியைப் பாராட்டவும் உதவவும் நேரம் ஒதுக்குவோம். பிளாஸ்ரிக் பயன் படுத்த வேண்டாம், முடிந்தால் ஒரு மரத்தை நட்டு, மறுசுழற்சி செய்து, பூமிக்கு உதவும் என்று உங்களுக்குத் தெரிந்த சிறிய விடயங்களைச் செய்யுங்கள்.

**இனிய புவி நாள் வாழ்த்து!**

# பூமி இல்லையேல்...




22.04.2020 பூமிதினம் (Eathday)

ஆயிரமாயிரம் துன்பங்கள் மனிதர்வாழ்வில்
அனைத்திற்கும் தீர்வுக ளுண்டாமோ?
கோயிலில் சாமியின் தரிசனம் காண்பதற்கு
கூடுவோர் எல்லோர்க்கும் குறைகளுண்டே
பாயிலே படுத்தும் தூக்கம் வராமல்
பரிதவித்திடுவோரிங்கு எத்தனை கோடி?
வாயிலேவைக்க ஒருபருக்கை சோறின்றி
வாடுவோர் பூமியில் கோடான கோடி!

வாழும் பூமியில் எத்தனைதுயர்கள்?
வாழ்க்கையை வாழ்ந்திட எத்தனை முயற்சி?
சூழும் இடர்களைக் களைந்திட மனிதர்க்கு
சூத்திரம் ஏதும் தெரிவதுமில்லை
பாழும் உலகிலே வாழ்ந்து முடிக்க
பசிக்கும் வயிற்றுக்கு உணவே தேவை
பொழுதும் வயிற்றுக்காய் உழைக்குமவரால்
பொலிந்த எழிலுறு பூமியை நினைத்திடலாகுமோ?

பூமி இல்லையேல் உயிரினம் இல்லை வாழ்வுதரும்
பூக்களுமில்லை காய்களுமில்லை கனிகளுமில்லை
பூமியில்நல் வளங்களுமில்லை செழுமையுமில்லை
புகழ்பெற உயர்ந்த மலைகளுமில்லை
மாமியார் வீடுவந்த மாப்பிள்ளைபோல
மாண்புடன் ஓடும் ஆறுகளில்லை நதிகளுமில்லை
ஆழிபோல் ஆர்ப்பரிக்கும் கடல்களுமில்லை
அவை தழுவிவரும் காற்றுமேயில்லை

சுட்டெரிக்கும் சூரியனில் உஷ்ணம் மிகுந்து
சுழற்சி வேகத்தில் உடைந்துசிதற
'சட்டென்று' ஒருதுண்டு அண்டத்தில் வீழ்ந்து
கோடானகோடி ஆண்டுகள் பின்னால்
மொட்டான பூவொன்று பூத்ததுபோல
முழுவதும் குளிர்ந்து பூமியாகமாறி
விட்டதாக சொல்லும் ஆராய்ச்சியாளர்
விண்ணியல் அறிந்த அறிவாளரன்றோ?

சுவரிருந்தாலே சித்திரம் இருக்கும்
சுழலும் பூமியிருந்தால் உயிரினமிருக்கும்
அவரவர்க்கென்று ஆயிரம் தொல்லை
ஆயினும் யாவர்க்கும் பூமியே தேவை
தவறுகள் இருக்கும் திருத்திடவேண்டும்
தாங்கும் பூமியை வாழ்த்திடவேண்டும்
யாவரும் பூமியைபெற்ற அன்னையாயெண்ணி
நாளும் வணங்கினால் நலமெலாம் சூழும்!

கவிஞர் புரட்சிபாலன்
வன்கூவர்



# நமது...

16ஆம் பக்கத்தொடர்ச்சி

யத்திற்காகவும் உள ஆரோக்கியத்திற்காக வும் யோகப் பயிற்சியையும் தியானத்தை யும் கைக்கொண்டு நலமாகப் பல்லாண்டு காலம் உடல்நலத்தோடு வாழ்ந்து வந்தனர். இவற்றினுடைய முக்கியத்து வத்தை நாம் உணராமல் உடல்நலம் குன்றி வாழ்ந்து வருகிறோம்.

அண்மைக்காலமாக வெளிநாட்டவர் இவற்றின் பயனை நன்கு உணர்ந்து மூலை முடுக்குகளில் எல்லாம் யோகா பயிற்சி நிலையங்களையும் தியான மண்டபங்களையும் ஏற்பாடு செய்து இவற்றை பலருக்கும் பழக்கி வந்ததன் பின்னரே இவற்றின் முக்கியத்துவத்தை நாம் இப்போது உணர்கிறோம். இவ்வாறு நமது முன்னோரின் பாரம்பரிய பழக்க வழக்கங்களையும் விளையாட்டு முறைகளையும் மறந்து வெளிநாட்டவர் கைக்கொண்ட பின்னரே நாம் உணர்ந்து செயல்படுகிறோம். சைவ மக்களின் நோய்த்தடுப்பு முறைகளை எள்ளி நகையாடிய அவர்கள் யாவரும் கிருமித் தொற்றுக்கள் வந்த பின்னரே அவற்றை பின்பற்றி நடக்க முற்பட்டிருக்கின்றனர்.



இது காலத்தின் கோலம். நிலமை மாறிக்கொண்டு வருகிறது. நாமும் அதற்கேற்ப நமது நிலமையை மாற்றிக்கொள்வது நன்மை பயக்கும்.

**இளையோர் ஆக்கம்** இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# அங்கீகாரம்




பொதுவாக எந்த ஒன்றை செய்யும்போதும் அதற்கான அங்கீகாரத்திற்காக மனம் ஏங்கும். வெளியிலிருந்து அங்கீகாரம் கிடைத்தாலே தவிர நீங்கள் செய்வதை உங்களாலேயே அங்கீகரிக்க முடியாமல் மனம் தவிக்கும்.



அங்கீகரிக்கப்படாத எந்த ஒரு செயலுமே உங்களுக்கு சாதனையாகவே தெரிய மறுக்கிறது. ஆனால் அந்த அங்கீகாரத் திற்கான ஏக்கமே, அது கிடைக்காதபோது உங்களுக்கு சலிப்பை ஏற்படுத்தி விடுகிறது. அங்கீகாரத்தை எதிர்பார்ப்பது தவறல்ல. ஆனால் பிறரது அங்கீகார மென்பது அவர்களின் விருப்பு வெறுப்பிற் கும் பல்வேறுவிதமான கோணங்களுக்கும் உட்பட்டது என்பதைப் புரிந்து கொண்டால் அங்கீகாரத்திற்காக இல்லாமல் ஆத்ம திருப்திக்காக செயல்படத் தொடங்கி விடுவீர்கள்.

அதனால், எதை செய்தாலும் நீங்கள் செய்யக் கூடிய அந்த விடயம் முதலில் உங்களுக்கு திருப்தி தரக் கூடிய ஒன்றாக இருக்க வேண்டும் என்பதை மனதில் எண்ணிக் கொள்ளுங்கள். இது நிச்சயம் வெற்றி அடையும் என்ற தன்னம்பிக்கை யோடு செயலைத் தொடருங்கள்.

பிடித்த விடயத்தை செய்ய முடியவில்லை யென்றால் செய்து கொண்டிருக்கும் விடயத்தை பிடித்தமானதாக உருவாக்கிக் கொள்ள உங்கள் எண்ணத்தை சீர் செய்யுங்கள். எந்த மாதிரியான எண்ணம் உங்கள் ஆற்றலை தூண்டிவிட்டு நீங்கள் செய்யும் வேலையை உங்களுக்கு சுவாரஸ்யமானதாக மாற்றக் கூடும் என சிந்தித்துப் பாருங்கள்.

வெற்றி என்பது பணத்திலோ அல்லது புகழிலோ இல்லை. உங்கள் செயலால் இந்தப் பிரபஞ்சம் அடையும் பலனில் இருக்கிறது.

அது ஒருவருக்கானதாக இருந்தாலும் சரி அல்லது ஒரு நாட்டுக்கோ இந்த உலகிற்கோ ஆனதாக இருந்தாலும் சரி, அந்த செயலைத் தொடர்ந்து செய்வதற்குப் பெருமைப்படுங்கள்.

பொதுவாக நம் கனவுகளோடும் கற்பனை களோடும் எப்போதும் நம் வாழ்க்கையை ஒத்துப் பார்த்து நிறைவில்லாத தன்மை யில் பெரும்பாலும் உழல்கிறது மனம். அதனால் நாம் செய்துகொண்டிருக்கும் எந்த வேலைக்கும், நம்மிடம் இருக்கும் எந்தப் பொருளுக்குமான மதிப்பு நமக்குத் தெரியாமலே போகிறது.

எத்தனை நல்ல விடயங்கள் நடந்திருந் தாலும் நீங்கள் விரும்பி, நடக்காமல் நழுவிப் போகும் அந்த ஒன்றில் உங்கள் முழு கவனமும் தேங்கி, சறுகிய பாறை யில் வழிந்தோடும் நீராக மகிழ்ச்சி யெல்லாம் வழிந்தோட ஆற்றாமையும் வெறுமையுமாக மனம் பாசி படிந்து போகிறது. எனக்கு எதுவுமே சரியாக அமைவதில்லை, நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான் என்று இயலாமையாகத் தோன்றி விடுகிறது. மகிழ்ச்சி அந்தக் கிடைக்காத ஒன்றில் மறைந்துகொண்டு கண்ணாமூச்சி ஆட, வாழ்க்கை சலிப்புத் தட்டுகிறது.

உண்மையில் உங்களுக்குக் கிடைத்திருக் கும் எந்த வேலையாக இருந்தாலும் அதை இந்தப் பிரபஞ்சத்தோடு தொடர்பு படுத்திப் பார்த்தால் அதன் மதிப்பு உங்களுக்குப் பெரிதாகத் தோன்றும். வாழ்வின் அர்த்தம் புரியும். அதாவது, நீங்கள் எது செய்தாலும் ஏதோ என் கடமையை செய்கிறேன் என்றில்லாமல் எதற்காக செய்கிறோம் என்னும் அந்தப்

(தொடர்ச்சி 28ஆம் பக்கம்...)




## படித்ததில் மனதைத் தொட்டது

நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள்
Vlambaram@sympatio.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!



S. Sureka

ஆறுகள் தங்கள் நீரைக்
குடிப்பதில்லை...
மரங்கள் தங்களது கனிகளை
உண்பதில்லை...
சூரியன் தனக்காக
ஒளி வீசுவதில்லை...
மலர்கள் தங்களுக்காக
மணம் பரப்புவதில்லை...

பிறருக்காக வாழ்வதுதான்
இயற்கையின் நியதி.

நாம் அனைவரும்
ஒருவர் மற்றவருக்கு
உதவுவதற்காகவே
பிறந்திருக்கின்றோம்.

இது கடினமான ஒன்றா?
இது எப்படி கடினமாகும்?

நீங்கள் மகிழ்ச்சியாக
இருக்கும்போது
உங்கள் வாழ்க்கை
நன்றாக இருக்கும்.

உங்களால் பிறர்
மகிழ்ச்சியடையும் போதுதான்
உங்கள் வாழ்வு
சிறப்பானதாக அமையும்.

நாம் ஒன்றை
நினைவிற் கொள்வோம்,
ஒவ்வாரு தாவர இலைக்கும்
மாறுபடும் அதன் நிற
வேறுபாடுதான் அழகு.

மனித வாழ்வில் மாறுபடும்
ஒவ்வொரு சூழலும்தான்
நம் வாழ்க்கைக்கு அழகு.

இரண்டிற்கும்
மிகத் தெளிவான
தொலைநோக்கு அவசியம்.

எனவே.....
முணுமுணுக்க வேண்டாம்!
குற்றம்சாட்ட வேண்டாம்!

வலிகள்தான்



வணக்கத்திற்குரிய பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களின் மிக அழகான அர்த்தமுள்ள செய்தி.

நாம் உயிரோடிருக்கிறோம்
என்பதன் அடையாளம்.,

பிரச்சினைகள்தான்
நாம் வலிமையானவர்கள்
என்பதன் அடையாளம்,

செபம்தான்
நாம் தனிமையில் இல்லை
என்பதன் அடையாளம்,

மேற்கூறியவற்றை
மனதில் இருத்துவோம்...

இந்த உண்மைகளை,
ஒழுங்குகளை
ஏற்க முடிந்தால்தான்
நமது மனம்
நமது உள்ளம்
மற்றும்
நமது வாழ்வு
மிகவும் அர்த்தமுள்ளதாக...
மிகவும் மாறுபட்டதாக...
மிகவும் மேன்மையானதாக
இருக்கும்.

நெருக்கடியான
இக்காலகட்டத்தில்
இந்த நாள் உங்களுக்கு
ஆசீர்வாதமான நாளாக அமைய
இறைபணிந்து
வாழ்த்துகிறேன்...

# Proud to be serving you through these two Funeral Homes!

**GTA EAST**

OGDEN
FUNERAL HOMES
4164 Sheppard Ave E,
Scarborough, ON M1S 1T3.
www.ogdenfuneralhome.com

**GTA WEST**

LOTUS
Funeral and Cremation Centre Inc.
121 City View Dr,
Etobicoke, ON M9W 5A8.
www.lotusfuneralandcremation.com

:: Family owned and operated for over 70 years
:: East Toronto location just off Hwy 401, between Kennedy Road and Midland Ave
:: Affordable funeral plans to meet your budget

:: On-Site Crematorium
:: West Toronto location just off Hwy 401,410, 427 & 407 North of Belfield Rd and East of Hwy 27
:: Beautiful Facility With Up To 500 Seating

State of the art technology
Financing plans available for both preplanned funerals and at-need funerals
Diverse staff to care for your needs, honour your traditions and speak your language
Travel Repatriation Insurance available (**$495.00 only**) for your lifetime coverage



## Patricia Peter BBM

*Licenced Funeral Preplanning Director*
*Licenced Insurance & Investment Advisor*

Direct: **416-834 5753**
Email: advisorpat10@gmail.com

*"Serving With Dignity, Compassion and Excellence"*

# நான் உயிரோடு இருப்பதே எனக்கு கிடைத்த மகத்தான பரிசு!

**நேர்காணல் :** கவிஞர் மனுஷ்யபுத்திரன் **சந்திப்பு: கண்ணன்**

"என்னிடம் முன்பு மோட்டாரில் இயங்கும் சக்கர நாற்காலி ஒன்று இருந்தது. நான் சிங்கப்பூர் சென்றிருந்தபோது முஸ்தபா என்ற நண்பர் பரிசாக அளித்தார். அதை நான் மிகவும் விரும்பிப் பயன்படுத்திக் கொண்டிருந்தேன். சுயமாக நடக்கும் ஓர் உணர்வை அது அளித்திருக்கிறது. பிறகு ஒரு சிறிய பழுதிற்காக சரி செய்யக் கொடுத்திருந்தேன். அவர் உதிரி பாகங்கள் கிடைக்கவில்லை என்று இழுத் தடித்து கடைசியில் திரும்பத் தராமலே போய்விட்டார். அதன்பிறகு எனக்கு இருதய அறுவை சிகிச்சை நடந்தது. என் வாழ்க்கை பெருமளவு முடங்கிவிட்டது. சென்ற மாதம் முதல் வாரத்தில் ஒரு நாள் நான் மாலுக்குப் போக விரும்பினேன். பொருள்கள் எதுவும் வாங்க அல்ல. அதன் நீண்ட வராண்டாவில் செல்லும் ஆசுவாசத்திற்காக. ஆனால், அன்றைக்கு அது நடக்கவில்லை. அப்படி செல்லும் போது என் மன அழுத்தம் கணிசமாகக் குறைவதை உணர்ந்திருக்கிறேன். அதற்காகவே வணிக வளாகங்களுக்கும் கடற்கரைக்கும் போவேன்.

இப்போது ஊரடங்கால் நண்பர்களை சந்திக்கவும் செல்ல முடியவில்லை. யாரும் வர முடிவதுமில்லை. அலுவலகம் இல்லை. இந்த சிறிய அறைக்குள் சில சமயம் பைத்தியம் பிடித்துவிடும் போல் இருக்கிறது. ஒரு மோட்டார் சக்கர நாற்காலி வாங்க மனம் மிகவும் ஏங்குகிறது. கொஞ்சநேரம் ஆளரவமற்ற தெருவின் இந்த முனையிலிருந்து அந்த முனைவரை சக்கர நடை நடந்துவிட்டு வரலாமே. நானே நடைக்கு இப்படி ஏங்கு கிறேன் எனில் நடந்துகொண்டே இருந்த வர்களின் நிலையை எப்படி இருக்கும்? நினைக்க கஷ்டமாக இருக்கிறது."

கொரோனா பரவலைத் தடுக்க இந்தியா வில் அமல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கால் வீட்டில் முடங்கியுள்ளார் கவிஞர் மனுஷ்ய புத்திரன். தமிழக தொலைக்காட்சி விவாதங்களில், திமுக சார்பாக ஆளுங் கட்சிக்கு எதிராக அனல் கக்க விவாதம் செய்துகொண்டிருப்பவர். இடைவிடாமல் அரசியல், இலக்கியம் என இயங்கிக் கொண்டே இருப்பவர், சமீபத்தில் இருதய அறுவை சிகிச்சை செய்துகொண்டார். அதன்பின்னர் ஓய்வு எடுத்துக்கொள்வார் என்று எதிர்பார்த்தால் இன்னும் அதிக வேகத்துடன் சுழன்று கொண்டிருக்கிறார். 11 புத்தகங்கள், 1000க்கும் மேற்பட்ட கவிதைகளை கடந்த ஒரு வருடத்தில் மட்டும் எழுதியிருக்கிறார். அவரை சந்தித்தோம்.

**சமீபத்தில் இருதய அறுவை சிகிச்சை செய்துகொண்டீர்கள் அந்த நெருக்கடியில் இருந்து மீண்டு வந்தது எப்படியுள்ளது?**

இந்த வருட என் பிறந்த நாள் நான் சாவின் விளிம்பிலிருந்து மீண்டுவந்த நாளின் பிறந்த நாள். அதனால் எனக்குக் கிடைத்த ஒவ்வொரு வாழ்த்தும் பரிசும் விலை மதிப்பற்றதாக இருந்தது. வாழ்வ தும் உயிரோடு இருப்பதும் எவ்வளவு மகத்தான பரிசு எவ்வளவு பேர் நான் இதயங்களில் இருக்கிறேன் என்பதை உணர்ந்த நாள் அது. சண்டையிட்டுக் கொண்டவர்கள்கூட வாழ்த்தினர்."

**முன்பிருந்த அளவிற்கு தொலைக்காட்சி விவாதங்களில் நீங்கள் அதிகம் கலந்து கொள்வதில்லையே, ஏன்?**

இதய அறுவை சிகிச்சை காரணமாக கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக இடைவெளியாகிவிட்டது. அதில்லாமல் மாதத்தில் பாதி நாளுக்கு மேல் சினிமா நடிகர்களின் உளறல்களைச் சுற்றி விவாதங்கள் நடப்பதால் ஒரு பிரதான கட்சியைச் சேர்ந்தவன் என்ற முறையில் அதில் நான் பங்கேற்க ஒன்றுமில்லை. அதில்லாமல் பொதுவாக ஊடகங்களில் திமுக தரப்பிற்கு குறைந்த பிரதி நிதித்துவமே தரப்படுகிறது. எங்கள் குரல் முடிந்தவரை சுருக்கப்படுகிறது.

**கவிஞர் 'எழுத்தாளர் – பத்திரிகை ஆசிரியர் அரசியல்வாதி – பேச்சாளர் என எப்படி உங்களால் இத்தனை வேலைகளை இழுத்துப்போட்டு இயங்க முடிகிறது?**

இதுதானே என் வேலை. உங்கள் அக்கறையும் ஈடுபாடும் பரந்ததாக இருந்தால் அதற்கான நேரமும் தானாக உருவாகும். சும்மா இருந்தால்தான் நேரமே கிடைக்காது. பல்வேறு துறை களில் ஆர்வமுடையவராக இருந்தால் மட்டும் போதாது. அந்தத் துறைகளுக்குக் தேவைப்படும் நபராக உங்களை தகுதிப் படுத்திக்கொள்ள வேண்டும். அதற்கான உழைப்பும் அர்ப்பணிப்பும் மிகவும் முக்கியம். மேலும், பல்வேறு துறை சார்ந்த பணிகளில் ஈடுபடுவதால் எனது உலகின் எல்லைகள் விரிகின்றன. எனது கவிதைகளுக்கு அவை புதிய உள்ளடக் கங்களை தருகின்றன. அது எனக்கு மிகுந்த உற்சாகம் தருகிறது. பத்து வேலை செய்தால் பத்து வாழ்க்கையை வாழ்வதுபோல. ஒரே வேலை செய்தால் சலிப்பே நம்மைக் கொன்றுவிடும்.



**இடதுசாரிக் கொள்கைப்பிடிப்புடன் அரசியல் பயணத்தை தொடங்கிய நீங்கள் தற்போது திமுக கட்சியில் இணைந்துள்ளீர்கள். எதனால் இந்த மாற்றம்?**

இந்தியாவில் நிலவும் சாதியத்தை எதிர்கொள்ளாமல் இங்கு சமத்துவத்தைக் கொண்டுவர முடியாது என்ற புரிதலே இடதுசாரி அரசியலிருந்து திராவிட அரசியலுக்கு என்னைக்கொண்டு வந்தது. சமூக நீதிக்கொள்கைகளின் வழியாகவே சாதியக் கட்டமைப்பை வலிமையிழக்கச் செய்ய முடியும் என்பதை கண்டேன். இன்றும் சாதி மூர்க்கமாகத்தான் இருக்கிறது. ஆனால், அது பண்பாட்டுத் தளத்தில்தான் மூர்க்கமாக இருக்கிறது. பொருளாதார, நிலவுடைமை சார்ந்த தளத்தில் தன் பிடியை இழந்துவிட்டது. இது திராவிட இயக்கத்தின் சாதனை என்று நினைக்கிறேன். வர்க்கப்புரட்சி இந்தியாவில் சாத்தியமாகாத நிலையில் சமூக நீதிக்கோட்பாடுகள் சார்ந்த சீர்திருத் தங்களே மாற்றத்தைக்கொண்டு வரும்.

இந்தியா முழுக்க இடதுசாரி அரசியலின் பின்னடைவிற்கு அவர்களின் சாதியம் குறித்த போதுமான புரிதலின்மையே காரணம். வர்க்க முரண்பாடுகளை சாதிய முரண்பாடுகள் கூர்மையிழக்கச் செய்து விடுகின்றன. இதை இடதுசாரிகள் கவனிக் கத் தவறிவிட்டனர். மற்றொன்று பிராந்திய அரசியல், மொழி அரசியல் போன்றவற் றில் இடதுசாரிகளால் ஒரு தெளிவான நிலையை எடுக்க முடியவில்லை. பிராந்தி யக் கட்சிகளிடம் இடது சாரிகள் தங்கள் களத்தை விட்டுக் கொடுத்தது இதனால் தான். மற்றொன்று பாஜகவின் மதவாத அரசியலை எதிர் கொள்வதற்கான ஒரு மாற்றுத்திட்டம் காங்கிரஸை போலவே இடதுசாரிகளுக்கும் இல்லை.

**ஆனால், திமுக இடைநிலைச் சாதியினருக்கான கட்சி என்று தொடர்ந்து விமர்சிக்கப்படுகிறதே?**

தலித்துகளின் கல்வி, வேலை வாய்ப்பு, அவர்கள்மேல் இழைக்கப்பட்ட சாதிக் கொடுமைகளை ஒழித்தல் என எல்லா வற்றிலும் திமுக செய்ததற்கு நிகரான ஒன்றை இந்தியாவில் இடதுசாரிகள் உட் பட எந்தக் கட்சியும் செய்தது கிடையாது. அம்பேத்கரின் கனவுகளை பெரியாரின் சீடர்கள்தான் இங்கு நிறைவேற்றினர்.

**பிரஷாந்த் கிஷோரை வைத்து தேர்தல் வியூகம் வகுக்கும் அளவுக்கு இன்று திமுகவின் நிலை மாறிவிட்டது என்று கூறப்படும் விமர்சனங்களுக்கான உங்கள் பதில்?**

பிரஷாந்த் கிஷோரை நான் சந்தித்திருக் கிறேன். அவர் மிகச்சிறந்த ஒரு தேர்தல் உத்தி வகுப்பாளர் என்பதில் சந்தேக மில்லை. இன்றைய புதிய தொழில்நுட்ப யுகத்தில் அதன் அனைத்து சாத்தியங் களையும் பாஜக தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. சில விஷயங்களில் பிரஷாந்த் கிஷோர் போன்றவர்களின் ஆலோசனைகள் எங்களுக்குத் தேவை. மேலும், ஒரு கட்சி தனது வெற்றிக்கு எல்லா உத்திகளையும் பயன்படுத்தும். இதில் மற்றவர்களுக்கு என்ன கவலை? இதில் சட்டவிரோதமான, கொள்கை விரோதமான அம்சம் ஏதும் இருக்கிறதா?

**தற்போது தமிழக மக்களால் எதிர்க்கப்படும் பல திட்டங்கள் திமுக ஆட்சிக் காலத்தில் கையெழுத்திடப்பட்டதுதான் என்று அதிமுக சொல்கிறது?**

இது ஒரு பொய்யான பரப்புரை. இதற்கு நாங்கள் விரிவான பதில்களை தொடர்ந்து ஊடகங்களில் அளித்து வந்திருக்கிறோம். உதாரணமாக நீட்டிற்கு நாங்கள் விலக்குப் பெற்றோம் என்பதை மறைத்துவிட்டு திமுக கூட்டணி ஆட்சியில் இருந்தபோது நீட் வந்தது என்று சொல்லிக்கொண்டே இருப்பார்கள்.

**குடியுரிமைச் சட்டத்தால் இந்திய இஸ்லாமியர்களுக்கு பாதிப்பில்லை என்று மத்திய, மாநில அரசுகள் தொடர்ந்து கூறி வருகிறதே, எப்படி பார்க்கிறீர்கள்?**

இது ஒரு பொய். குடியுரிமை சட்டத்திற்கு கீழ் வரும் தேசிய குடிமக்கள் கணக் கெடுப்பு, தேசிய குடிமக்கள் பதிவேட்டை உருவாக்கப் பயன்படுத்தப்படும். அதன் அடிப்படையில் அஸ்ஸாமில் நிகழ்ந்தது போல சந்தேகத்திற்குரிய குடிமக்கள் பட்டியல் ஒன்று உருவாக்கப்படும். யார் வேண்டுமானாலும் ஏதேனும் ஒரு அற்ப காரணத்தைக் காட்டி சந்தேகத்திற்குரிய குடிமக்களாகப்படக்கூடும். இது பெரும் பாலும் இஸ்லாமியர்களையும் அரசியல் ரீதியாக பாஜகவை எதிர்ப்பவர்களையும் நோக்கி ஏவப்படும். இதுதான் அவர்களின் நீண்டகால திட்டம்.

**ஆனால், மக்கள்தொகை பதிவேடு எடுப்பதை தற்காலிகமாக தமிழக அரசு நிறுத்திவைத்திருக்கிறதே?**

மத்திய அரசின் ஒரு சட்டத்திற்கு எதிராக ஒரு மாநில அரசு செயல்படமுடியாது. சட்டப்பூர்வமாக என்.பி.ஆர். கணக்கெடுப் பிற்கு விலக்குபெறுவதே ஒரே தீர்வு. அதற்கான போராட்டத்தை நடத்தும் முதுகெலும்பு அதிமுக அரசிற்குக் கிடையாது.

**எந்த மாதிரியான சூழல்கள் உங்களை அதிகமாகக் கவிதை எழுத வைக்கும்?**

எனக்கு எழுத தனிப்பட்ட சூழல் என்று

(தொடர்ச்சி 21ஆம் பக்கம்...)



# நான்...

20ஆம் பக்கத்தொடர்ச்சி

எதுவும் இல்லை. எல்லா சூழலிலும் எல்லா மனநிலையிலும் நான் கவிதைகள் எழுதுவேன். அதுதான் ஓர் எழுத்தாளனின் இயல்பாக இருக்கவேண்டும் என்று நினைக்கிறேன். எந்நேரமும் வேட்டைக்கு விழித்திருக்கும் மிருகத்தின் புலன்கள்போல.

**தமிழக பள்ளிக்கூடங்களில் செயல்படுத்தப்பட இருக்கும் பூண்டு – வெங்காயம் இல்லாத இஸ்கானின் காலை உணவு திட்டத்தை எழுத்தாளர் ஜெயமோகன் ஆதரித்து எழுதியிருக்கிறாரே?**

ஜெயமோகன் அந்த சமயத்தில் எது ட்ரெண்டிங்கில் இருக்கிறதோ அதைப்பற்றி எதையாவது ஒன்றை 'ப்ரொவோக்கிங்'காக சொல்வார். அது அவர் அபிப்பிராயமாகக்கூட இருக்காது. நூறு பேர் நம்மைத் திட்டினால் நாம் 'லைம் லைட்'டில் இருக்கிறோம் என்று இன்பம் அடைவார். இதை அவர் ஒரு டெக்னிக்காகவே நீண்ட காலமாக பயன்படுத்தி வந்திருக்கிறார். அதை சீரியஸாக எடுத்துக்கொள்ள வேண்டாம். மற்றபடி எளிய மனிதர்களுக்கு தரும் உணவில் நீ இதைத்தான் சாப்பிடவேண்டும் என்று சொல்வதை ஆதரிப்பவன் ஓர் இனவாத ஃபாசிஸ்டாகத்தான் இருக்க முடியும்.

ஜெயமோகன், ராமகிருஷ்ணன் உட்பட பல தீவிர எழுத்தாளர்கள் இன்று சினிமாவிலும் இயங்குகின்றனர். உங்களுக்கு சினிமாவுக்கு எழுதும் ஆசையில்லையா? தமிழ் சினிமா எந்த எழுத்தாளனையும் எழுத்தாளனாகவே பயன்படுத்தவில்லை. வெறும் வசனகர்த்தாகவேதான் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. எழுத்தாளர்கள் சினிமாவுக்குப் போய் அங்கு ஓர் உதவி இயக்குநர் வேலையைத்தான் செய்து கொண்டிருக்கின்றனர். இந்த நிலை அவலமானது. ஓர் எழுத்தாளனின் சிறந்த கதைகளை அல்லது அவனது படைப்புத் திறனை சினிமா பயன்படுத்திக்கொள்ளாத வரை ஓர் எழுத்தாளன் அங்குபோய் வேலை செய்வதில் எந்த மாற்றமும் நிகழப் போவதில்லை. அவருக்குக் கொஞ்சம் பணம் கிடைக்கலாம், அவ்வளவுதான்.

**ஆனால், கமலின் 'உன்னைப் போல் ஒருவன்' படத்தில் இடம்பெற்ற உங்கள் பாடல் நல்ல வரவேற்பைப் பெற்றது. ஆனாலும், ஏன் சினிமாவில் தொடர்ந்து பாடல்கள் எழுதவில்லை? அதுபோல் 'சூப்பர் டீலக்ஸ்' படத்திற்கு பிறகு நடிப்பையும் தொடரவில்லை, ஏன்?**



உண்மையை சொன்னால் இரண்டிலுமே எனக்கு ஆசையும் ஈடுபாடும் இருக்கிறது. ஆனால், வாய்ப்புகளை தேடிப்போகக் கூச்சமாக இருக்கிறது. சினிமாவில் வாய்ப்புகளை பின்தொடர்ந்தால்தான் அதில் நாம் நம் இடத்தைப்பெற முடியும். வாய்ப்புகள் வரும்போது நிச்சயம் இரண்டையும் செய்வேன்.

**எப்போது தேர்தலில் போட்டியிடப்போகிறீர்கள்?**

கட்சி முடிவு செய்யும்போது.

**கொரோனா அச்சத்தால் உலகமே அதிர்ந்து கொண்டிருக்கிறது. உங்கள் அன்றாடப் பணிகள் எப்படி போகிறது?**

நான் பெரும்பாலும், தனிமைப்படுத்தப்பட்ட சூழலில்தான் பணி செய்பவன் என்பதால் எனக்கு பெரிய வித்தியாசம் தெரியவில்லை. ஆனால், இது மனித குலம் இதுவரைக் காணாத பேரழிவாக மாறக்கூடுமோ என்று அஞ்சுகிறேன். இது ஒரு சுனாமியைப் போன்றது.

# உயில்...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

**Handwritten Will** Legal?

Alberta, Ontario, Manitoba, Quebec, New Brunswick, Newfoundland, Saskatchewan ஆகிய மாகாணங்கள் கையால் எழுதப்பட்ட உயில்களை சட்டப்பூர்வமாகக் கருதுகின்றன. British Columbia மாகாணத்தில் கையால் எழுதப்பட்ட உயில் அங்கீகரிக்கப்படவில்லை. ஆனால் ஓர் உயில் British Columbiaவுக்கு வெளியே கையால் எழுதப்பட்டு, சம்பந்தப்பட்ட சொத்து அந்த மாகாணத்திற்குள் இருந்தால், அந்த உயில் British Columbia நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்படும்.

**உயில் எழுதாமல் இறந்தால் என்ன ஆகும்?**

உயிலை உருவாக்குவது இலகுவானதல்ல. ஆனால் உயில் இல்லாமல் இறப்பது சிலவேளைகளில் மோசமானது. -Making a Will isn't fun. Dying without one is worse.

நீங்கள் வாழ்க்கையில் செய்ய வேண்டிய செயல்களின் பட்டியலில் உயில் எழுதுவது ஒன்றாக இருந்தாலும் அது எப்போதும் முன்னுரிமை பெறுவதில்லை. உங்களிடம் மட்டுமல்ல, 50% கனேடியரிடம் உயில் இல்லை என்றும், உயில் வைத்திருக்கும் ஏனையோரில் 74%மானோரது உயில்கள் புதிப்பிக்கப்படாமலே இருக்கின்றன எனவும் ஆய்வுகள் மூலம் தெரியவருகிறது.

உங்கள் மரணத்தைப்பற்றி நீங்கள் சிந்திக்க வேண்டும். இது எம்மில் பெரும்பாலானோர் தவிர்க்கும் ஒரு விடயமாக இருக்கிறது. உங்கள் சொத்துக்கள் மதிப்புமிக்கவை என்று நீங்கள் நினைக்காவிட்டால் அல்லது உங்கள் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் நியாயமானோர் என்றும் உங்கள் சொத்துக்களை சமாதானமாகப் பிரச்சினைகள் ஏதும் இல்லாமல் பிரித்துக் கொள்வர் என்றும் நீங்கள் கருதினால், ஓர் உயில் எழுதுவதன் முக்கியத்துவத்தை உங்களுக்கு நியாயப்படுத்துவது மிகவும் கடினம்.

**உயில் எழுதாமல் நீங்கள் இறந்தால்:**

1.எல்லாவற்றையும் சட்டமே தீர்மானிக்கும்: உங்கள் மனைவி, பெற்றோர்,குழந்தைகள் மற்றும் உடன்பிறப்புகளிடையே உங்கள் சொத்துக்கள் எவ்வாறு பகிர்ந்தளிக்கப்படும் என்பதை நீதிமன்றமே தீர்மானிக்கிறது. உங்களுக்குக் குழந்தைகள் இல்லையென்றால் உங்கள் மனைவி முழு சொத்துக்களையும் பெறுவார். உங்களுக்குக் குழந்தைகள் இருந்தாலும், உங்கள் மனைவி சொத்து முழுவதையும் அல்லது உங்கள் சொத்தில் முதல் $200,000இனை உங்கள் மனைவியும் மற்றும் மீத முள்ளவையை உங்கள் பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினரிடையே சமமாகப் பிரிக்கப்படும். உங்களுக்கு வாழ்க்கைத் துணை அல்லது குழந்தைகள் இல்லையென்றால், அது மற்ற உறவினர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும்.

2. பொதுவான சட்ட வாழ்க்கைத் துணை- Common-law spouse: பொதுவான சட்ட வாழ்க்கைத்துணை உங்கள் சொத்தையோ அல்லது அதன் ஒரு பகுதியையோ தானாகவே (automatically) பெறமாட்டார். சொத்து எவ்வாறு பகிர்ந்தளிக்கப்படும் வேண்டும் என்பதில் சில குழப்பங்கள் ஏற்படலாம்.

3. தனிப்பட்ட பிரதிநிதி- Personal Representative: தனிப்பட்ட பிரதிநிதியாக உங்கள் நெருங்கிய உறவினரில் ஒருவர் நீதி மன்றத்தினால் நியமிக்கப்படுவார். இவர் உங்கள் சொத்தை நிர்வகித்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் போன்றவற்றைச் செய்வார். இவர் நீங்கள் விரும்பியிருந்தபடி தன் கடமைகளைச் செய்வார் என்பது உத்தரவாதமில்லை.

4. நெருங்கிய உறவினர்கள் - Living next of kin: உங்களுக்கு நெருங்கிய உறவினர்கள் எவரும் இல்லையென்றால், உங்கள் முழு சொத்தும் அரசாங்கத்திற்கு செல்லும். உங்களுக்குப் பிடித்த தொண்டு நிறுவனம்கூட இந்தச் சொத்தால் பயனடையும் வாய்ப்பை இழந்துவிடும்.

5. தனிப்பட்ட பொருட்கள் -Personal items: நீங்கள் விரும்பியபடி தனிப்பட்ட பொருட்கள் பகிர்ந்தளிக்கப்படாமல் போகலாம். (உங்கள் மருமகள், உங்கள் தாயுடன் மிகவும் நெருக்கமான உறவைக் கொண்டிருந்தார், நீங்கள் இறந்தபின் உங்கள் தாயின் வைர மோதிரத்தைப் இவர்தான் பெறவேண்டும் என விரும்பியிருந்தீர்கள். ஆனால் இப்போது உங்கள் சொத்தை யார் நிர்வகிக்கிறாரோ அவரே இதைத் தீர்மானிப்பார்.)

6. வரிச்சலுகைகள் - Tax savings: உங்கள் சொத்துக்களைப் பெறுவோர் அவற்றிற்கான வரிச்சலுகைகளைப் பெறமாட்டார்கள்.

7. பராமரிப்பு தேவைப்படும் குழந்தை - Dependent child: உங்கள் பராமரிப்பில் இருந்த நீண்டகாலப் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைக்கு நீங்கள் வழங்க நினைத்த நிதி ஆதரவு கிடைக்காமல் போகலாம்.

8. பாதுகாவலர் - Guardian: உங்கள் 18 வயதிற்கு உட்பட்ட பிள்ளைகளின் பாதுகாவலர் யார் என்பதை நீதிமன்றமே முடிவெடுக்கும்.

9. இறுதிச் சடங்கு மற்றும் அடக்க ஏற்பாடுகள் -Funeral arrangments: உங்கள் இறுதிச் சடங்கு மற்றும் அடக்க ஏற்பாடுகள் உங்களுடைய விருப்பத்தின் படி நடக்கும் என்பதற்கு உத்தரவாதமில்லை.

10. நன்கொடைகள் - Charities: நீங்கள் ஆதரிக்க விரும்பும் தொண்டு நிறுவனங்கள் உங்கள் சொத்திலிருந்து எந்தவித நன்கொடைகளையும் பெறமுடியாது.

ஓர் உயிலை உருவாக்குவதற்கு நிறைய பணம் செலவழிக்க வேண்டியதில்லை, அதற்கு நிறைய நேரம்கூட எடுக்க வேண்டியதில்லை. நீங்கள் அதை எவ்வாறு செய்கிறீர்கள் என்பது முக்கியமல்ல - அல்லது உங்களுக்கு உதவ எந்த வழக்கறிஞரை நீங்கள் ஈடுபடுத்துகிறீர்கள் என்பதும் முக்கியமல்ல. நீங்கள் உயில் உருவாக்குவதை ஒரு கட்டாய தேவையாகக் கருதவேண்டும். இப்பொழுது செலவிடும் நேரமும் ஒரு சிறுதொகை பணமும் நீங்கள் இறந்தபின் பல பிரச்சினைகளையும் பெருமளவு பண விரையத்தையும் தவிர்க்க உதவும்.




**கனடாவில் எழுதப்பட்ட மிகக் குறுகிய உயில்:**

1948 ஜூன் 8ஆம் திகதி கனடாவின் Saskatchewan மாகாணத்திலுள்ள Rosetown என்ற இடத்தில், சிசில் ஜோர்ஜ் ஹாரிஸ் (Cecil George Harris)என்ற விவசாயி தனது சொந்த டிராக்டரின் கீழ் சிக்கிக் கொண்டார். உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் அந்த நேரத்தில் டிராக்டரின் சில்லைச் சுற்றியிருக்கும் உலோகப் பகுதியில் (fender) ஒரு உயிலைச் செதுக்கினார். அதில் "In case I die in this mess I leave all to the wife. Cecil Geo. Harris." எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. நீதிமன்றத்தினால் அந்த உலோகப் பகுதி பரிசோதிக்கப்பட்டு அவரது விருப்பம் நிறைவேற்றப்பட்டது. தற்போது அந்த உலோகப் பகுதி Saskatchewan College of Lawவிலுள்ள நூலகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

**உலகிலேயே குறுகிய உயில்:**

உலக கின்னஸ் சாதனை புத்தகத்தில் 'உலகில் குறுகிய உயில்' என்னும் பட்டியலில், 1967ஆம் ஆண்டுதான் சிறிது

(தொடர்ச்சி 27ஆம் பக்கம்...)

# தமிழர்...

04ஆம் பக்கத்தொடர்ச்சி


மரணவீட்டிற்குப் பலரும் வருவர். அது மாத்திரம் அல்லாமல் இறந்தவரின் உடலில் இருந்து கிருமிகள் வெளியேறலாம். வைத்தியசாலைகள் நோயாளிகள் நிறைந்த இடம். ஆகையால் அங்கு எம்மையறியா மலும் கிருமிகள் நம் உடலிலோ, உடுப்பிலோ ஒட்டிக்கொள்ளலாம் என்ற காரணத்தால், நீராடி, உடுத்த உடுப்புக் களைக் களைந்து விட்டே வீட்டிற்குள் நுழைவர். இவை ஆச்சாரம் என்ற பேரில் மேற்கொள்ளப்பட்டது. இதிலும் அடிப்படை நோக்கம் முற்றிலும் சுகாதாரமே.

## "துடக்கு" (விலக்கி வைத்தல்) என்பது என்ன?

இது முற்றிலும் சுகாதார அடிப்படை விடயமே. வீட்டில் ஒருவர் மரணம் அடைந்தாலோ அல்லது பிள்ளைப்பேறு கிடைத்தாலோ அல்லது பூப்பு அடைந்தாலோ 31 நாள் துடக்கு (விலக்கி வைத்தல்) கடைப்பிடிக்கப்படுகின்றது.

இந்த இடங்களில் கிருமித் தொற்றுக்கு வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றபடியி னால், 31 நாட்கள் மற்றவர்களிடம் இருந்து அவர்களைத் தனிமைப்படுத்துதல் தான் அதன் சூட்சுமமாகும். ஏனெனில் ஒரு கிருமியின் மிகக்கூடிய வாழ்க்கை வட்டம் 31 நாளில் அற்றுப்போய்விடும். எனவே 31 நாட்கள் துடக்கு என்ற பெயரால் தனிமைப் படுத்தப்படுகின்றனர். இதேவேளை அவர்கள் வீட்டில் உண்பவர்களும் தனிமைப் படுத்தப்படுகின்றனர். இன்று வெளியில் இருந்து வருபவர்களும் 14 நாட்கள் தனிமைப்படுத்தப்படுகின்றனர் என்றதுடன், நீங்கள் ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழன் இந்த வியூகத்தை ஆதிகாலத்திலேயே கையாண்டுள்ளான் என்பது உங்களுக்கு புரிய வைப்பதுடன் ஆச்சரியத்தையும் கொடுக்கும்.

## பொது இடங்களுக்குச் செல்லும் போது எப்படிச் செல்லவேண்டும்?



முன்னைய காலங்களில் பொது இடங்கள் என்று மக்கள் அதிகம் செல்லும் இடங்கள் கோவில்களாகவே இருந்தன. இதனால் இங்கு வரும் பக்தர்களின் சுகாதார நோக்கம் கருதி, கோவிலுக்கு வரும்போது குளித்து, தோய்த்து உலர்ந்த ஆடை உடுத்தி, விபூதி அணிந்து வரவேண்டும் என்று சொன்னார்கள். இப்படிச் செய்யும் போது புறச்சுத்தம் கிருமித்தொற்றை பொது இடங்களில் தடுக்கின்றது. கோவிலுக்குக் காலணிகளுடன் செல்வதையும் தடுத்திருந்தது சுகாதார நோக்கம் கருதியே என்பதை நாம் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். அதைத்தவிர ஓரிடத்தில் கோவிலின் முன்பு கற்பூரம் எரிக்கும் இடம் ஒதுக்கப்பட்டிருக்கும். விரும்பிய பக்தர்கள் கற்பூரத்தை இட்டு அது விசேடகாலங்களில் தொடர்ந்து எரிந்து கொண்டே இருக்கும். இது ஏனென்றால் அதிக மக்கள் கூடும் போது, அங்கு நச்சாகும் காற்றை கற்பூரப் புகை சுத்தமாக்குகின்றது. முன்னோர் கடைப்பிடித்த வழிகளை இன்றும் நாம் காரணகாரியம் தெரியாமல் கடைப் பிடிக்கின்றோம். அதற்குள் எவ்வளவு உண்மைகள் பொதிந்துள்ளன என்பதை யாரும் சொல்வதில்லை.

## சடங்குகளில் 'பாலறுகு' வைத்துக் குளிப்பாட்டுதல் ஏன்?

திருமணச்சடங்குகளில் ஆணுக்கும் பெண்ணுக்கும் திருமணத்தின் முன் பாலறுகு வைத்து குளிப்பாட்டித்தான் சடங்கே தொடங்கு கின்றனர். ஓர் ஆணும் பெண்ணும் உடல் ரீதியாக ஒன்றாகச் சேரும் காலம். இவர்கள் ஒரே வீட்டில் வாழ்ந்தவர்கள் அல்லர். இவர்கள் வாழ்ந்த சூழ்நிலைகள் வேறு கிராமம், வேறு வீடு. எனவே இவர்களில் இருக்கும் நுண் கிருமிகள் ஒருவருக்கொருவர் பழக்கப் பட்டதாக இருக்காது. இதனால் திடீரென நோய் வாய்ப்பட ஏதுவாக இருக்கும். ஆதலால் இவர்களை முதலில் பாலறுகு கொண்டு சுத்தம் செய்யப்பட்டு, பஞ்சகௌவியம் கொடுத்து புறச்சுத்தம் பேணப்பட்டுச் சடங்குகள் ஆரம்பிக்கப்படு கின்றன. இதுவும் சமயாசாரம் என்ற ரீதியில் சுகாதார நோக்கம் கொண்ட பண்பாட்டு விழுமியம் என்பதை உணர வேண்டும்.

ஒவ்வொரு சமயச்சடங்குகளிலும் 'பஞ்ச கௌவியம்' முன்னிலைப்படுத்தப் படுகின்றது. முற்றிலும் சுகாதாரத்தை முன்னிலைப் படுத்தித்தான் பஞ்சகௌவியம் இடம் பெறுகின்றது.

பஞ்சகௌவியத்தைப் போத்தலில் அடைத்து அழகான வர்த்தகக் குறியிட்டு விற்றால் எல்லோரும் வாங்குவர். ஏனெனில் நவீன நாகரிகம் என்பது புதிதாக ஒன்றும் உலகிற்குக் கொண்டு வரவில்லை பழைய வற்றைத்தான் நவீன வடிவத்தில் உயர்தர விலைக்குக் கொடுக்கின்றனர். எம்மிடம் எளிமையாக உள்ளதை உதாசீனம் செய்கின்றோம் என்பதுதான் யதார்த்தம்.

## ஏன் திருநீறு, சந்தனம் அணிதல் வேண்டும்?



'திருநீறு' சைவத்தின் சின்னமாக இருந்தா லும் இதில் விஞ்ஞான உண்மை பொதிந் திருக்கின்றது. திருநீறு என்பது பசுவின் சாணத்தைச் சுட்டெரித்த சாம்பல். இதை அணிவதற்குப் பலர், பலவிதமான விளக்கங்கள் கொடுத்திருந்தாலும் உண்மைத் தன்மை என்ன?

ஒரு பொருள் சாம்பல் ஆகும்போது, அது சுத்தமானதாகின்றது. காற்றில் கலந்திருக் கும் அசுத்தங்களை அழிக்கும் வல்லமை பெறுகின்றது. இதனால் நெற்றியில் நாம் அணியும்போது, எமது சுவாச உறுப்பான மூக்கு அதன்கீழ் இருப்பதால், அந்த நெற்றித் திருநீறானது, மூக்கினுள் செல்லும் காற்றை ஓரளவாவது சுத்தம் அடையச் செய்கின்றது. எனவே நாம் சுவாசிக்கும் காற்றுச் சுத்தமாகின்றது. எனவே திருநீறு அணிதல் என்பது கடவுளுக்குமட்டுல்ல எமது சுகாதார நோக்கமும் கொண்டவையே. சந்தனம் இயற்கையான வாசனைத் திரவியமாகும். அதை நீரில் கரைத்து நெற்றியில் இடும் பொழுது புருவ நடுவில் பொருந்தியுள்ள 12 நாடிகளுக்கும் குளிர்மை கிடைக்கிறது. குங்குமமும், மஞ்சளிலிருந்து தயாரிக்கப் படுவதால் கிருமி நாசினியாகவே செயற்படுகின்றது.

## முன்னைய காலத்தில் அழைப்புப் பத்திரிகைகள் கொடுக்கும்போது மஞ்சள் தடவிக் கொடுப்பது ஏன்?

அதாவது நாங்கள் கொடுக்கும் பத்திரிகை களில், ஏதாவது கிருமிகள் ஒட்டிக் கொண்டு அவர்கள் வீட்டிற்குள் நுழைந்து விடாமல் இருக்கவே அழைப்பிதழ் பத்திரிகையின் நான்கு மூலைகளிலும் மஞ்சள் தடவிக் கொடுத்து தொற்றுக் களைத் தடுத்தனர்.

எதிரியை அழிப்பதென்றால் நாம் வல்லமை யாக இருக்கவேண்டும் அல்லது எதிரியைப் பலவீனமாக்க வேண்டும். கொரோனாவில் இருந்து எம்மைப் பாதுகாக்க எங்கள் உடம்பை வலிமையாக்க வேண்டும். இது தான் நாம் இப்போது விரைந்து செய்ய வேண்டும். அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? என்று அன்று சித்தர்கள் சொல்லிச் சென்றதை நாம் மறந்து விட்டோம். மீண்டும் கடைப்பிடிப்போமாக.

அன்று அகத்தியர் சொன்ன "திரிகடுகம்" "திரிசூரணம்" போன்றவை உங்கள் உடம்பைத் தொற்றுக்களிலிருந்து பாது காக்கும் தன்மை கொண்டவை மாத்திரம் அல்ல, உடல் வலுவை மேலும் உறுதி யாக்கும் தன்மை கொண்டவை.


கொரோனா வந்தவர்களைப் பாதுகாக்க மருந்து தேவைப்படும். கொரோனா வராமல் தடுப்பதற்கு வருமுன் காப்போம் என்ற கோட்பாட்டில் அகத்தியர் சொன்ன திரிசூரணம் தினமும் சாப்பிடுங்கள். உங்கள் உடல் நோய்எதிர்ப்புச் சக்தியை உருவாக்கி, கிருமித் தொல்லைகளிலிருந்து பாதுகாக்கும் ஓர் அரண் ஆகும்.

## திரிசூரணம் செய்வது எப்படி?

(தொடர்ச்சி 28ஆம் பக்கம்...)



# சித்தர்கள் வாழ்ந்த சிறப்புப் பெற்ற சித்தன்கேணி ஊர்



கணபதிப்பிள்ளை
மாரிமுத்து - கனடா

பகுதி - 06

## வைத்திய முறை

ஆரம்பகாலத்தில் நோய்களுக்கு நாட்டு வைத்தியம் சித்த ஆயுள்வேதம் என்பன மூலமே வைத்தியம் நடந்தது. 'டிஸ்பென்சரி' எனப்படும் சிறு வைத்திய நிலையத்தில்தான் ஆங்கில மருந்து களைப் பெற்றனர். விஷக் கடிக்கு, புண்ணுக்கு மருந்து கட்டுவதற்கு எனத் தொட்டு வைத்தியம் இருந்தது. சித்தர்கள் வழிபாடு செய்த சிவபூமியால் இவ்வூரில் எவரும் விஷக் கடிகளால் பாதிக்கப்பட்ட தாகத் தெரியவில்லை. கண் வைத்தியம், பல் வைத்தியம் இருந்ததில்லை. பல் இயற்கையாக விழும்வரை மக்கள் வாழ்ந்தனர். கண் வருத்தம் வந்தால் தாய்ப்பால் அல்லது நல்லெண்ணை விட்டு சுகமாக்கி விடுவர். நந்தியாவட்டை என அழைக்கப்படும் பூவின் இதழையும் சுத்தமான நீரில் ஊறவைத்து கண்ணில் வைத்தும் சுகமாக்குவர். அப்பொழுது மகப்பேற்றிற்கு வைத்தியசாலைக்கு



செல்வது இல்லை. மருத்துவ மாதுவை 'மருத்துவச்சி' என அழைப்பர். அவர் களின் உதவியில் வீட்டிலேயே சுகப் பிரசவங்கள் நடைபெறும். சத்திரசிகிச்சை செய்து பிள்ளைகள் பிறந்ததாக இல்லை. வீட்டில் பிள்ளைகள் பிறந்ததினால் அக்காலத்தில் பிறப்புப் பதிவதே குறைவு. பாடசாலையில் சேர்க்கும் பொழுது பிறப்பு அத்தாட்சி கேட்பதினால் தான் இப்பதிவு முக்கியம் பெற்றது. பிள்ளை பிறந்ததும் நிழலை அளந்து நேரம் பார்ப்பதும், வாழையை வெட்டி நேரத்தைக் கணிக்கும் முறையும் இருந்தது. அப்போ பெரும் பாலும் இயற்கை மரணமே நடந்தது. எங்கள் ஊரில் பல சித்த ஆயுள்வேத வைத்தியர்கள் பிரபல்யமாக இருந்தனர். அப்போது முறிவுகளுக்குப் புக்கை கட்டுதல், பத்துப் போடுதல் என்ற சிகிச்சைகள் மூலமாக சுகமாக்கப்பட்பது. தற்பொழுது ஆங்கில வைத்தியங்கள் ஏற்பட்டதால் கண், காது, முறிவு போன்ற பலவகை சிகிச்சைகளுக்கும் பல தரப்பட்ட வைத்தியங்கள் நடைபெறுகிறன.

## இடம் பெயர்வுகளும் புலம் பெயர்வுகளும்

1980ஆம் ஆண்டு தொடக்கம் ஏற்பட்ட போர்க்கால அசாதாரண சூழ்நிலை காரணமாகப் பல கஸ்டங்களை இங்கு மக்கள் எதிர் நோக்கி வாழ்ந்தனர். படைத் தரப்பினரின் கெடுபிடிகள், பூசாவிற்கு கொண்டு சென்று தடுத்து வைத்தல் போன்ற காரணங்களினால் இளைஞர்கள் பல இன்னல்களுக்கு ஆளாகினர். இச் சூழ்நிலையில் வாழ வழிதேடி ஜேர்மனி, சுவிஸ், கனடா, நோர்வே, பிரான்ஸ், டென்மார்க் போன்ற அகதிகளை ஏற்கும் நாடுகளை நாடி எம் இளைஞர்கள் புகலிடம் தேடிச் சென்றனர். இதனால் ஊரில் இளம் சமுதாய வளர்ச்சி குறைவு ஏற்பட்டது. காலப்போக்கில் இவ்வாறு சென்றோர் தம் குடும்பம், பெற்றோர் யாவரையும் தாம் சென்ற நாடுகளுக்கு அழைக்கலாயினர். இதனால் மேலும் குடிசனத் தொகையில் தளர்வு ஏற்படலாயிற்று.

இத்துடன் நிற்கவில்லை. தொடர்ந்தும் நாட்டில் ஏற்பட்ட செல் வீச்சுக்கள், குண்டு வீச்சுக்கள், துப்பாக்கிச் சூடுகள் காரண மாக எம் சொந்தங்கள் எல்லாம் பயந்த நிலையில் பதுங்கு குழிகளில் வாழ்ந்த நிலையை நோக்கில் மயிர் சிலிர்க்கும். அதுமட்டுமின்றி அன்றாட பாவனைப் பொருட்கள், உணவுப் பொருட்கள் யாவற்றிற்கும் அரசினால் தடை விதிக்கப் பட்டது. உண்ண உணவின்றி பலர் கஸ்டப்பட்டனர். இதனை விலாவாரியாக விபரிக்க முடியாத நிலைமை. அது நித்திரையின்றி வாழ்க்கை வாழ்ந்த காலமாகும். இக்காலப்பகுதியில் தான் இந்திய அமைதிப்படை என்ற இராணுவமும் எம் மத்தியில் வந்து அட்டகாசம் செய்தனர்.

இத்தாக்குதல்கள் காரணமாக சித்தன் கேணியைச் சுற்றி நடந்த குண்டு வீச்சுத் தாக்குதலிலும், கலிப்பர் தாக்குதலிலும், செல் தாக்குதலிலும் பலர் பலியாகி உள்ளனர். வீடுகள் பல சேதமாக்கப் பட்டன. அயல் ஊரில் வட்டுக்கோட்டை யில் நடந்த விமானத் தாக்குதல்களிலும் எம் சொந்தங்கள் பலியாகினர்.



வரலாற்றை விபரமாகக் கூறப்புகின் மேலும் விரிந்து கொண்டே போகும்.

இதனைவிட இங்கிருந்து போராளியாகச் சென்றவர்கள் பலர் வீரமரணம் அடைந்துள்ளனர். இதற்கும் மேலாக 1995ஆம் ஆண்டு ஏற்பட்ட மாபெரும் இடப்பெயர்வின் காரணமாக பெரும் இழப்புடன் எம் மக்கள் நடை பவனியாகக் கைதடி வழியாக வன்னி நிலப் பரப்பிற்குச் சென்றனர். இதனால் ஊர் மக்கள் நடமாட்டக் இல்லாத நிலமாக மாறியது. சாவகச்சேரிப் பகுதியில் புகலிடம் தேடியோர் சிறிது காலத்தின்பின் திரும்ப இராணுவம் அனுமதி வழங்கியது. வன்னி நிலப்பரப்புக்கு சொன்றோர் பின்பு வேறு பல இடங்களுக்கு மாறியதுடன் வெளி நாடுகளுக்கும் சென்றனர். மீண்டும் ஊர் திரும்பியோர் படைத்தரப்பின் கட்டுப்பாடு களுடன் வாழ்ந்தனர். இக்காலப்பகுதியில் மக்கள் அன்றாட வாழ்வில் கஸ்டப்பட்டது டன் கல்வியிலும், பொருளாதாரத்திலும் பின்னடைவு அடைந்தனர். தேனீர் குடிக்க சீனி, சாப்பாட்டுக்கு அரிசி, பெற்றோல், மண்ணெண்ணை, பற்றறி என சகல வற்றிற்கும் தடைவிதிக்கப்பட்ட காலம். இக்காலப் பகுதியை இருண்ட காலம் எனலாம். 2009ஆம் ஆண்டுக்குப் பின் ஓரளவு பயமின்றிய சூழ்நிலை இருப்பினும், மகிழ்ச்சியான வாழ்வு எனக் கூற இயலாது.

## தொகுப்பு


சித்தன்கேணி ஊரை அடிப்படையாக வைத்தே கடந்தகால வாழ்வியல் நோக்கப்பட்டுள்ளது. இத்தொகுப்பின் நோக்கம் நம் முன்னோரின் கல்வி, கலாசாரம், சமயம், அன்றாட வாழ்வு எவ்வாறு இருந்தது என்பதை அறிவதுடன் நமது தற்கால வாழ்வுடன் உற்றுப் பார்ப்பதற்கேயாகும். அத்துடன் இது போன்று நமது ஊர்களைப் பற்றி அறிவதற்கு மேலும் பலரது ஆய்வுகளை உருவாக்குவதே ஆகும். விஞ்ஞான வளர்ச்சியில்லாத காலப் பகுதியில் வாழ்ந்த மக்கள் எப்படிச் சிரமப்பட்டிருப்பர் என்பதைக் கணிப்பிட முடியாது. இயற்கைச் சூழலுடன் வாழ்ந்த அம் மக்கள் கஷ்ரத்தில்தான் வாழ்ந்திருப்பர். நாட்டில் நடந்த போர்க்கால சூழல் வாழ்க்கை எமக்கு ஓர் எடுத்துக் காட்டாகும். நேற்று நடந்ததை மறந்து, நாளை நடக்கப் போவதைப் பற்றிச் சிந்திக்காமல் இன்று வாழ்ந்தால் போதும் என்ற எண்ணத்துடன் வாழும் எமக்கு கடந்த கால வரலாறு ஒரு வாழ்க்கைப் பாடமாகும்.

இக்கட்டுரையில் தற்கால வாழ்வியல் அம்சங்கள் உட்புகுத்தப்படவில்லை. எதிர் நீச்சல் போட்ட பழைய வாழ்வு முறை கூறப்பட்டது. விஞ்ஞானயுகத்தில் வாழும் எமக்கு மின்சாரம் ஒருமுறை நின்று விட்டால் அடுத்தது என்ன செய்வதென்று புரியாத நிலை ஏற்பட்டு வாழ்வே நிசப்தமாகிவிடும்.

இக்கட்டுரை விரிவாக்க முடியாமையால் சுருக்கமாக உள்ளது. எமது வருங்கால சந்தியினருக்கு ஊரைப்பற்றி ஓரளவு அறிய சர்ந்தப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது மேலும் ஆராயப்பட வேண்டியதே ஆகும்.

வெளிநாடுகளில் வாழ்ந்தாலும், பிறந்தா லும் மூலவேர் இருக்கும் இடமான ஊரையும், அங்குள்ள குல தெய்வங்களை யும் அறிவூட்டிய கல்விக் கூடங்களையும், ஆசான்களையும், இனசன உறவு சொந்தங்களையும் எக்காலமும் மறவாது மனதிலிருத்தி தமிழ் உணர்வுடன், உறவுடன் வாழ்வோமாக.

**"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்"**
'வணக்கம்'






## BASEMENT FOR RENT

**NEILSON & HWY 401**
2 Bedroom bsmt for rent. 1Parking. Close to all facilities. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **416.587.9118**

**MCCOWAN & LAWRENCE**
1 Bedroom (Ground floor) bsmt for rent. No Parking. Student or couple Preferred. Close to all facilities. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **416.871.8627**

**FINCH & TAPSCOTT**
1 Bedroom & 2 Bedroom Bsmt for rent. Family or Females preferred. Close to all facilities. Internet, laundry & utilities included.
தொடர்புகளுக்கு: **416.726.4186**

**KENNEDY & LAWRENCE**
3 bedroom bsmt for rent. Sep. entrance, Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**416.826.3870 / 647.905.4914**

**14Th AVE. & 9Th LINE**
2 Bedroom new bsmt for rent. Sep.entrance, parking. Couple or family preferred. Close to Bus & school. Avail. immediately.
**416.829.3212 / 416.879.9603**

**BRIMLEY & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Working Female or student preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.238.9061**

**MARKHAM & STEELES**
2 Bedroom walkout bsmt for rent. Laundry. Close to School & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.258.8755**

**MIDDLEFIELD & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Couple or small family or student preferred. Close to TTC. Avail. May 01,2020.
**416.297.9742 / 647.709.1711**

**MARKHAM & 14th AVENUE**
3 bedroom & 2 full washroom bsmt for rent. Sep. entrance. Sep. laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.296.7932**

## உடனடி வாடகைக்கு விற்பனைக்கு

**வீடுகள், கொண்டோக்கள் விற்க, வாங்க வாடகைக்கு விட வாடகைக்கு பெற்றுக்கொள்ள** அழையுங்கள்
**Jey - 416.816.9011**

## BASEMENT FOR RENT

**BROCK & KINGSTON**
3 bedroom & 2 full washrooms Brand new bsmt for rent. Sep.entrance & laundry brand new appliances, 1 parking. No pet & No smoking Avail.Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **416.731.8542**

## ROOM FOR RENT

**MARKHAM & STEELES**
1Rooms bsmt for rent Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**416.587.6564 / 647.678.0611**

**PHARMACY & FINCH**
1 Room for rent. Unlimited Internet, Sep. Washroom. Close to all facilities. Avail. May 01, 2020.
**647.201.1222 / 647.261.0216**

**MARKHAM & ELESMERE**
Room for rent in bangalo house main floor. Close to all facilities. All included wifi and parking. Avail. May 01, 2020.
தொடர்புகளுக்கு: **647.996.6977**

**MARKHAM & STEELES (STAINES ROAD)**
Furnished room for rent in Brand new bsmt. Sep. entrance. Working male only Rent $600 (all included wifi & parking)
தொடர்புகளுக்கு: **416-827-5565**

**KENNEDY & ELLESMERE**
1 Room for rent. Parking, laundry. Female Preferred. Close to all facilities. Avail. May 01, 2020.
**416.474.4958/416.474.4935**

**MCCOWAN & DENISON**
1 Bedroom for rent. Sep.washroom, parking, laundry, utilities. Female preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.678.2599**

**BRIMLEY & ELLESMERE**
1 Bedroom for rent in main floor. only for female. Close to all facilities. Avail. From April.
தொடர்புகளுக்கு: **416.906.5013**

**ORTON PARK & LAWRENCE**
1 Bedroom for rent. Parking, laundry. Male preferred. No smoking & No drinking. Avail. immediately.
**647.707.0457 / 647.857.9536**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## BASEMENT FOR RENT

**SCARB.GOLF CLUB & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, internet, utilities. Close to all facilities. Avail. immediately.
**905.471.2444 / 647.998.0181**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & CORONATION**
1 bedroom bsmt for rent. Sep. entrance, laundry includes once a week (every sunday) shared parking, full kitchen, full living room, 1 bathroom. Fee: $900 per month first & last request. Aval. immediately
Contact : **(416)-305-5158**

## BASEMENT FOR RENT

**KENNEDY & ELLESMERE**
Bedroom bsmt for rent. Sep.entrace, 1 parking, laundry, 5 minutes Kennedy bus. No pet & No smoking. Avail.immediately.
தொடர்புகளுக்கு: **647.869.8363**

## BASEMENT/ROOM FOR RENT

**MCLEVIN & SEWELLS**
Basement for Rent or Room for Rent with separate entrance for parking, laundry, internet and utilities. Close to TTC and other facilities.
Contact: John **416.809.2280**

## ROOM FOR RENT

**KENNEDY & EGLINGTON**
1 Bedroom for rent in 2 bedroom apartment. Living with one person, shared kitchen & bathroom. No pets. Parking is avail. for extra cost. Walking distance to TTC, Kennedy Station, Kennedy GO, groceries. Avail. from May 1st, 2020.
தொடர்புகளுக்கு: **(647) 765-4924**

## ROOM FOR RENT

**DANFORTH & EGLINTON**
1 Rooms for rent in main floor. Single female preferred. Close to Kennedy subway station, Scarborough centre & Bellamy go station (24 hours) Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.869.9733**

## ROOM FOR RENT

**MCCOWAN & EGLINTON**
1 Room for rent in a Condo. Christian female only. Super clean, gym, security. 5 minutes to Kennedy station. Close to all Facilities. Avail. immediately.
**Call: 416.710.5852**

## BASEMENT FOR RENT

**KENNEDY & LAWRENCE**
2 bedroom bsmt for rent. Sep. entrance, Parking, laundry. Close to all facilities. Available May 01, 2020
தொடர்புகளுக்கு: **416.219.6062**

## வாடகைக்கு

**4 BR, 3 BR, 2 BR, 1 BR House, Condo, Basement வாடகைக்கு உள்ளது அழையுங்கள்.**
**647.861.8240**

## HOUSE FOR RENT

**NELSON & MCLEVIN**
3 Bedroom house for rent. 3 washroom & 3 Balcony, 1 parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.786.6161**

**TAPSCOTT & FINCH**
3 Bedroom & 2 washroom house for rent. Rent $2400+50% utilities. No smoke, Alcohol or pets. Avail. immediately.
**647.855.2148/647.985.6101**

## HOUSE FOR SALE/RENT

**SCARBOROUGH**
**SHEPPARD & McCOWAN**
2 Bedroom condo apartment with one parking for sale $299,900.00

**AJAX**
**HARWOOD & KINGSTON**
3 bedroom brick detached bungalows with finished basement apartment with 3 bedrooms. for sale
**$600,000.00**

**416.917.0557**
**Rajah Masillamany**
**(HomeLife / Future Realty Inc.)**

## வீடு வாடகைக்குபெற்றிட/கொடுத்திட

வாடகைக்கு வீடுகள், Condo., Bsmts போன்றவற்றை Scarborough, Markham, Mississauga, Brampton, Ajax பகுதிகளில் பெற்றிட
அழையுங்கள்: **647.402.2937**

## APARTMENT FOR RENT

**DONMILLES & EGLINTON**
2 bedroom, apartment for rent with furniture. Students welcome. Aval. immediately
**Call me : 647. 296. 9565**

## HOUSE FOR SALE/RENT

**SCARBOROUGH**
3 Bedroom & 2 washroom House for Rent / sale. Convenient location
**Please contact for further details:**
**416.648.7283**

## HOUSE/BASEMENT FOR RENT

**BELLAMY & BRIMORTON**
3 bedroom **house**( main floor)for rent. All amenities in walking distance. 1 bedroom **basement** apartment also for rent. Sep. entrance. 1 parking, laundry. Rent+utilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.505.9465**

## SALE / RENT

**MARKHAM & SHEPPARD**
4 bedroom & 3 washroom house for **Sale.**

**NEILSON & SHEPPARD**
2 bedroom & 2wasroom Houses for **Rent.**
Kannan Kankesu: **416.834.4200**

## OFFICE SPACE FOR RENT

**MIDDLEFIELD & FINCH**
Avail. immediately.
தொடர்புகளுக்கு:
**647.296.7932**

## வாகன போக்குவரத்து

விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி மற்றும் நீண்ட தூர, குறுகிய தூரப் பயணங்களுக்கு
அழையுங்கள்: **416.880.5952**

## OFFICE SPACE FOR RENT

**MIDDLEFIELD & FINCH**
Avail. immediately.
தொடர்புகளுக்கு:
**416.854.6427**

## MOVING & DELIVERY

புதிய, பாவித்த Fridge, Stove விற்பனைக்கு உண்டு.
பழைய இரும்பு பொருட்கள், Electonic பொருட்கள் இலவசமாக எடுக்கப்படும்.
Junk Removal
Call Rajan: **647.524.1320**

## AZ DRIVERS WANTED

Amero Logistics Inc. is currently hiring experienced AZ drivers for Toronto to Montreal run. Also AZ city drivers for local work in GTA.
Need 1-year experience and clean CVOR and abstract. Weekly Pay .
For more info call : **647.274.0300**

## திருமணசேவை

திருமண சேவைக்கு
தொடர்பு கொள்ளவும்
**905.607.3896**

## TAILORING

**SCARBOROUGH**இல்
Saree Blouses $25க்கு
தைத்துக் கொடுக்கப்படும்.
**V G Tailors:**
**647.621.3694**

## CARS, VANS & TRUCKS WANTED

**Any make, Any condition.**
**Pay top dollars.**
**Contact: 416.835.3475**

## ஸ்ரீசாயி திருமண சேவை

உங்கள் பிள்ளைகளுக்கு பொருத்தமான வாழ்க்கைத் துணையை தேடிக்கொள்ள எங்கள் சேவையை நாடுங்கள். பல துறைகளில் தகுதி பெற்ற மணமகன், மணமகள் உள்ளனர்.
**416.890.6497**
**srisai2912@hotmail.com**

## பராமரிப்பாளர் தேவை

ஸ்காபரோவில் வாழும் Wheel Chairஇல் இருக்கும் வயதான பெண்மணி ஒருவரை வீட்டில் இருந்து பராமரிப்பதற்கு பெண் பராமரிப்பாளர் உடனடியாகத் தேவை.
Full time LIVE-IN caregiver (female) needed asap in Scarborough.
தொடர்புகளுக்கு: **437.223.7767**

## JUNK REMOVAL

பழைய இரும்பு பொருட்கள், **Electronics** பொருட்கள் வீசுவதற்காக வைத்திருந்தால் இலவசமாக எடுக்கப்படும்.
**MOVING / DELIVERY AVAILABLE.** தொடர்புகளுக்கு: பிறேம் - **647.835.5244**



மேலும் பக்கங்கள்
24, 26, 27



## CHEF / COOK WANTED

We are looking for an experienced Chef / Cook for a famous restaurant in
**Scarborough.**
Must be specialized in
**South Indian traditional food and snacks.**
Accommodation would be provided. Salary negotiable.
Please send your resume to:
**canadajobad@gmail.com**

## BUSINESS / PROPERTY SALE

**CONVENIENCE STORE BUSINESS FOR SALE**
Convenience store Business for sale in Brighton, Ontario.
With inventory $20k. Weekly sale 7k to 8 k.
40 minutes drive east from Oshawa.
if anyone interested.
**Please contact : 416.906.5013**

## PROPERTY FOR SALE

Property with big corner lot for sale in Brighton Ontario on highway 2. With 5 rental units and one convenience store. Suitable to start your own business. Rental income Approx. $5200 per month. if anyone interested.
**Please contact : 416.906.5013**

## BUSINESS PARTENER WANTED

Looking for working partner for convenience store business. This business is in Brighton Ontario.
1 Hour driveeast from Scarborough.
If anyone interested
**Please contact : 416.906.5013**

# FOR RENT - CONDO/HOUSE / BASEMENT
# WATSON PROPERTY MANAGEMENT - 416-284-9999

*** Scarborough - Ellesmere / Military trail – Bsmt**
Room For Students Near U Of T Scarborough. Furnished Room Available. Everything Included. 5 Minutes Walk To U Of T / Centennial College. **[Asking $520/m]**

*** Toronto – Charles / Bloor / Yonge – Condo Apt**
(1+1Brm + 1Bath) Located at Yong & Bloor. 24 Hrs Concierge, Party, Yoga, Theatre Rooms, Yorkville Neighborhood. Close To Ryerson University, U Of T and Subways. **[ Asking $2350/m]**

***Oshawa – Simcoe / Conlin - Room**
Room For Rent From May 1st 2020. Students are welcome. Close To Oshawa University. **[Asking $650/m]**

*** Scarborough – Morningside / Sheppard – Detached – Rooms**
Rooms available for Female Students or Couples. Close To Scarborough U Of T, Centennial College, Pan Am Ctr, Hwy 401, Hospital. **[Call 647-913-9241]**

*** Markham– Highlen / Brimley– Detached-Bsmt**
Room for Rent for single lady. One Parking included. **[Asking $650/m]**

***Richmond Hill – Yonge / 407 – Condo Apt**
(1+1Brm +1 Bath) Spacious Condo, Steps to Yonge St, School & Highways. Rent Includes Heat Hydro and Water. **[Asking $2000/m]**

***Scarborough – Birchmount / Eglinton – Main Floor**
(3Brm + 1Bath) 5 Mins To 24 Hr Bus Stop. Close To Schools, Medical Clinics. Walking distant to Kennedy. **[Asking $2100/m]**

*** Scarborough – Neilson / Mclevin – Condo Town House**
(3 Brm + 2 Bath) Beautiful Townhouse located Near Schools, Transit, and Shopping & 401. Walk Out Balcony. **[Asking $2200/m]**

## வீட்டு முதலீட்டாளர்களுக்கான கருத்தரங்கு

- வாடகைக்கு விட சரியான வீட்டை எப்படி தெரிந்தெடுப்பது.
- அந்த வீட்டுக்கான கடனை எப்படிப்பெறுவது.
- சரியான வாடகையாளர்களை எப்படி கண்டுபிடிப்பது.
- அந்த வீட்டை சரியாக எப்படி நிர்வகித்து கூடிய லாபம் பெறுவது.

இதற்கான கருத்தரங்கில் கலந்துகொள்ள விரும்புவரகள்

**தொடர்பு கொள்ளவும்: கரு கந்தையா: 416-284-5555**

watsonpm1989@gmail.com

## SEMINAR FOR INVESTORS

- How to select the right property to buy as an investment?
- How to qualify for mortgage for those properties?
- How to find the right tenant?
- How to manage the property to get high net income?

If you are interested contact us for more details! Limited Seats!

**Contact: Karu Kandiah: 416-616-7278**

watsonpm1989@gmail.com

# MANAGING RESIDENTIAL PROPERTIES
watsonpm1989@gmail.com

# முதலீட்டாளர்களே! நீங்கள் ஓய்வெடுங்கள்!!
## உங்கள் வீட்டை வாடகைக்கு கொடுத்து பராமரிக்கும் வேலையை நாங்கள் செய்து தருவோம்!!

**எமது சேவைகள்:**

- வீட்டின் சரியான வாடகையைத் தீர்மானிப்பது.
- வீட்டைச் சந்தைப்படுத்தி அதை விசாரிப்பவர்களுக்கு மேலும் தகவல் தருவது.
- தகுதியான வாடகையாளர்களை கூட்டிச் சென்று வீட்டைக் காட்டுவது.
- வாடகைக்குப் பெற விரும்புவோரின் வேலை வருமானம், நம்பகத்தன்மை என்பவற்றை உறுதி செய்து கொள்ளுதல்.
- தகுதியான வாடகையாளருடன் வாடகை ஒப்பந்தத்தை செய்து கொள்ளுதல்.
- வாடகையாளர் குடியேற முன்னரும் பின்னரும் வீட்டின் நிலையை கவனித்துக்கொள்ளுதல்.
- சரியான திகதியில் வாடகைப்பணத்தை அறவிட்டு வீட்டுரிமையாளரின் வங்கிக்கணக்கில் வைப்பிலிடுதல்.
- பிரச்சனை தரும் வாடகையாளர்களை வெளியேற்றும் முயற்சியில் ஈடுபடல்.
- வீட்டில் திருத்த வேலைகள் தேவைப்படும் போது அதில் அனுபவம் வாய்ந்தவர்களை அனுப்பித் திருத்தும் முயற்சியில் ஈடுபடல்.
- வருட முடிவில் அந்த வீட்டின் வரவு செலவுக் கணக்கை உரிமையாளர்களுக்கு ஒப்புவித்தல்.
- வாடகை ஒப்பந்தத்தை புதுப்பித்தல்.
- வருடாந்த வாடகை அதிகரிப்பை அறிவித்தல்.
- வீட்டின் பெறுமதியில் ஏற்ற இறக்கத்தை அறிவித்தல்.
- திரும்பவும் வீடு உங்களுக்குத் தேவைப்படும் போதுசரியான வழிமுறை களைக் கையாண்டு பெற்றுத்தரல்.
- வாடகைக்கு விடக்கூடிய குறைந்த விலையிலுள்ள வீடுகளை கண்டுபிடித்து வாங்க உதவி செய்தல்.
- வாடகைக்கு விடுவதற்கு வீட்டில் என்ன திருத்த வேலைகள் அவசியம் என்று அறிவுரை வழங்குதல்.

***You can relax while we take care of your investment property!***

**WATSON**
PROPERTY
MANAGEMENT LTD

**Direct: 416-284-9999**
WatsonPM1989@gmail.com
80 Corporate Drive, Unit 207
Scarborough, ON, M1H 3G5



**Karu Kandiah** Director
30+ Years in Real Estate







# உயில்...

21ஆம் பக்கத்தொடர்ச்சி

நேரத்தில் இறக்கப் போவதை உணர்ந்த Czech நாட்டைச் சேர்ந்த ஒருவர் "எல்லாம் மனைவிக்கே - "Vse zene" என Czech மொழியில் தன் படுக்கையறை சுவரில் எழுதிய உயில் இடம் பெற்றுள்ளது.

1995இல் டெல்லியைச் சேர்ந்த பிமல் ரிஷி 'எல்லாம் மகனுக்கே' (All to son) என்று எழுதியதுதான் இந்தியாவிலே மிகச் சிறிய உயில்.

**நகைச்சுவையான உயில்:**

கனடாவில் வாழ்ந்த வழக்கறிஞரான சால்ஸ் மில்லர் (Charles Vance Millar, 1854-1926) 'தான் இறந்து 10 ஆண்டுகளுக்குள், எந்த பெண் அதிக பிள்ளைகளைப் பெற்றெடுக்கிறாளோ, அவள்தான் தனது மொத்த சொத்துகளுக்கும் வாரிசு' என்று உயில் எழுதி வைத்தார். சால்ஸின் வாரிசுகள், உயில் போலியானது என்று நிராகரிக்க முயற்சித்தனர். ஆனால், முடியவில்லை. இறுதியில், மொத்த சொத்தும் நான்கு பெண்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டது.

**புகழ்பெற்றவர்களின் உயில்கள்:**

1. நெப்போலியன், தனக்கு உதவிய போர் தளபதிகள், போர்வீரர்களுக்கு சொத்தில் ஒரு பங்கைப் பிரித்துக் கொடுத்தார். பாத்திரங்கள், கரண்டிகள், பெட்டிகள், மேசைகள், ஆடைகள், புத்தகங்கள், போர்வாள்கள், துப்பாக்கிகள் போன்று, தன் வாழ்நாளில் பயன்படுத்திய எல்லாப் பொருட்களையும் தன் உயிலில் குறிப்பிட்டார்.

2. மறைந்த தொழில் அதிபர் எம்.பி. பிர்லாவின் (Madhav Prasad Birla) மனைவி பிரியம்வதா (Priyamvada Devi) தன் 5,000 கோடி இந்திய ரூபாய் சொத்துக்கள் அனைத்தையும் குடும்ப நண்பரும், கணக்காளருமான ஆர்.எஸ்.லோதா (Rajendra Singh Lodha) பெயருக்கு எழுதி வைத்தார்.


3. ரிலையன்ஸ் குழுமத்தின் தலைவர் திருபாய் அம்பானி (Dhirubhai Ambani) உயில் எழுதி வைக்காததால் அவருடைய மகன்களான முகேஷ் அம்பானியும், அனில் அம்பானியும் தாயார் கோகிலா பென் அம்பானி தலைமையில், நிதி ஆலோசகர்களின் உதவியுடன், ரிலையன்ஸ் குழுமத்தின் நிறுவனங்களைப் பிரித்துக் கொள்ள வேண்டியதாயிற்று.

**உலகிலேயே மிகவும் நீளமான உயில்:**

Frederica Evelyn Stilwell Cook என்ற பெண் January 09, 1925இல் தனது 68ஆவது வயதில் Londonஇல் இறப்பதற்கு முன் எழுதிய 1066 பக்கங்களை (95,940 சொற்கள்) கொண்ட உயில்தான் உலகிலேயே மிகவும் நீளமான உயில். இந்த உயில் October 17, 1919இல் எழுத ஆரம்பிக்கப்பட்டு March 02, 1924வரை கையால் எழுதி பல தடவை வெவ்வேறு நாட்களில் கையொப்பமிடப்பட்டுள்ளது. இந்த உயிலில், தான் இறந்தபின் தனது நாட்குறிப்புகள் எல்லாவற்றயும் எரிக்க வேண்டும், தனது வயதை கல்லறையில் குறிப்பிட வேண்டாம் மற்றும் தன்னுடைய திருமண மோதிரத்தை தன் உடலுடன் சேர்த்து புதைக்கவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

**பரிசு வழங்குவதற்காக உயில் :**

ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த அல்பிரெட் நோபல் (Alfred Nobel -1833-1896), 1867இல் டைனமைட் எனும் வெடி மருந்தைக் கண்டுபிடித்தார். அதை விற்றதன் மூலம் கோடிக் கணக்கான பணம் சம்பாதித்தார். இந்த டைனமைட் வெடிமருந்தைப் பயன்படுத்தி ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். 1888இல் இவரது மூத்த சகோதரன் Ludvig Immanuel Nobel இறந்தார். Alfred Nobel இறந்துபோனதாக நினைத்து, பிரெஞ்சு பத்திரிகை ஒன்று, இவரது டைனமைட் கண்டுபிடிப்பை மனதில் கொண்டு 'மரணத்தின் வியாபாரி' ("The merchant of death is dead") என்ற கடுமையான வார்த்தைகளைக் கொண்டு விமர்சித்தது. இச்செய்தியைப் படித்த அல்பிரெட் நோபல், தனது கண்டு பிடிப்பால் ஏற்பட்ட கொடுமைகளை எண்ணி மனம் வருந்தினார். தன் வாழ்நாளில் சம்பாதித்த சொத்துகள் முழுவதையும் ஒருங்கிணைத்து, அதிலிருந்து கிடைக்கும் வட்டியை ஒவ்வொரு ஆண்டும் 1.இயற்பியல், 2.வேதியியல், 3.மருத்துவம், 4.இலக்கியம், 5.சமூக சேவை அல்லது


Alfred Nobel

உலக அமைதி போன்ற துறைகளில் முன்னிலை வகிப்போருக்கு பரிசு வழங்க வேண்டும்' என்று உயில் எழுதினார். அதுதான் இப்போது பிரபலமாக இருக்கும் நோபல் பரிசு!

**அங்கீகாரம்** என்பது திறமையால் கிடைப்பதாகும் **கௌரவம்** என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் கிடைக்க வேண்டியதாகும் - இந்து தர்மம்

எந்த நிலையில் இருந்தாலும் உங்கள் **நற்பண்பு**களை எப்போதும் கைவிடாதீர்கள் அது மட்டும்தான் நீங்கள் யார் என்பதை தீர்மானிக்க வல்லது - இந்து தர்மம்

# தமிழர்...

22ஆம் பக்கத்தொடர்ச்சி

மிகவும் எளிமையானது. சம அளவில் மிளகு, வேர்க்கொம்பு (சுக்கு), சின்னச் சீரகம் எடுத்து சுத்தமாக்கி அரைத்து ஒரு போத்தலில் வைத்துக் கொள்ளுங்கள். காலையில் எதுவும் சாப்பிடமுன் 1 தேனீர் கரண்டி அளவு எடுத்து நீரில் கலந்தோ அல்லது தேனில் கலந்தோ தினமும் சாப்பிட்டு 2 மணி நேரம் கழித்துக் காலை உணவைச் சாப்பிடுங்கள். என்றும் உங்கள் உடம்பில் நோய் எதிர்ப்புச் சக்தி வலுவாக இருப்பது மட்டுமல்லாமல், உங்கள் உடம்பு திடகாத்திரமானதாகவும் இருக்கும். இதை அகத்தியர் 'காயகற்பம் என்று சொல்கின்றார். இது எமது உடலில் நோய் எதிர்ப்புச்சக்தியை வலுவாக்கிக் கிருமிகள் செல்லும்போதே வலுவிழக்கச் செய்யும் வேதிப்பொருளை உருவாக்க வேண்டிய மூலப்பொருட்களைக் கொண்டிருக்கின்றது. உடம்பு எதற்கும் தயார் நிலையில் இருக்கின்றது. விரும்பியவர்கள் சாப்பிட்டுப் பலன் அடையுங்கள். எதுவித பக்க விளைவுகளும் இல்லை. ஆங்கில Antibioticபோல் அல்லாமல் இது பக்க விளைவுகள் அற்ற அற்புதமான அகத்தியர் திரிசூரணம்.

**அகத்தியரின் திரிசூரணப்பாடல்**

"தவறிப்போம் திரிகடுகு சூரணத்தால்
தருவான மந்தமுடங்க ளிச்சல் தீரும்
தவறிப்போந் தேனிலே கொண்டாயானால்
தருகாது சந்நிசீத ளங்கள் தானுந்
தவறிப்போம் பனைவெல்லம் கூட்டியே யுண்ண
தன்மையுள்ள வயிற்று நோய்தானே தீரும்
தவறிப்போம் சகலநோய் தனைக்கண்டால்
தருகாது வைத்தியன்பேர் சொல்லுமுன்னே"

அநேகமான தமிழர் அன்றைய கால கட்டத்தில் பொது இடங்களில் சாப்பிட மாட்டார்கள். ஏனென்றால் ஆச்சாரம் என்று சொல்வர். தமிழன் தனது கலாசாரத்தையே நுண்கிருமிகளின் தாக்கத்திலிருந்து தன்னையும் தன் சமுதாயத்தையும் காப்பதற்கு எப்படி எளிமையான முறையில் 'வருமுன் காப்போம்' என்ற பண்பாட்டைக் கொண்டிருந்தனர் என்பது மேலே கூறப் பட்ட விடயங்களிலிருந்து நாம் மீண்டும் கற்றுப் பண்பாட்டையும், கலாசாரத்தையும் காரணம் தெரியாமல் பகுத்தறிவாளர்கள் எனத் தம்மைத் தாமே கூறுவோர் சொல்லும் மூடநம்பிக்கை என்ற வரை யறைக்குள் தள்ளாது கடைப்பிடிப்போமாக.

இன்று கொரோனாவைத் தடுப்பதற்கு அவர்கள் சொல்லும் வழிமுறை அத்தனை



யும், மேற்கூறப்பட்டுள்ள தமிழ்க் கலாசாரப் பழக்க வழக்கங்களை ஒத்திருப்பதை நீங்கள் உணரலாம். நம் தமிழ் முன்னோர் செவிவழி உங்களுக்குத் தந்த அரும் பெரும் பொக்கிஷங்களை நாமும் உபயோகித்து உலகமக்களும் கடைப்பிடிக்க உதவுவோம். வாழ்க தமிழ்! அனைவரும் வாழ்க வளமுடன்.

2009இல் தமிழருக்கு எதிரான படு கொலையில் உலக வல்லரசுகள் ஒன்றிணைந்து தமிழருக்குப் பொது எதிரி யாகச் செயற்பட்டு 70,000க்கு மேற்பட்ட தமிழர் ஒரே இரவில் படுகொலை செய்யப்பட்டனர். இன்று உலகத்திற்கே பெரிய பொது எதிரியாக 'கொரோனா' கண்ணுக்குத் தெரியாமல் கொல்லு கின்றதே. இது என்ன விதியா? சதியா? "எளியாரை வலியார் கொல்லின் வலி யாரைத் தெய்வம் கொல்லும்" என்னும் கூற்றும் உண்மை தான். நம்முன்னோர் மிகவும் தெளிவான கருத்துக்களைத் தான் வாழ்விற்கு தந்து விட்டுச் சென்றுள்ளனர் என்பதைத் தெளிவாக உணர்வோம்.

ஆக்கம்: சிவனடிமை
Email: sivanadimai1234@gmail.com

# அங்கீகாரம்

18ஆம் பக்கத்தொடர்ச்சி

புரிதல் இருந்தால், அதனோடு ஒரு குறிக்கோளை இணைத்துக்கொள்ள முடிந்தால், அந்த வேலை சலிப்பில்லாத மகிழ்ச்சியைத் தரும்.

ஏனென்றால். எதற்காக ஒன்றை செய்கி றோம் என்று புரிந்து செய்யும்போது, அதை ஈடுபாட்டோடு செய்ய முடியும். தவிர உங்களுக்குக் கிடைக்கும் சின்னச் சின்ன சந்தர்ப்பங்களையும் நீங்கள் பயன் படுத்திக் கொள்ளும்போது, அதில் முன்னேற்றத்தை பார்க்கும்போது, அதன் வெற்றியை தரிசிக்கும்போது வாழ்க்கை தொய்வில்லாமல், தடைப்படாமல் சுவாரஸ்யமானதாக இருக்கும்.

உண்மையில் வாழ்வின் முன்னேற்றம் என்பது எங்கோ கண்ணுக்கெட்டாத தூரத்தை எட்டிப் பிடிப்பது மட்டுமல்ல. உங்கள் அன்றாட செயல்களை அழகான முறையில் அமைத்துக் கொள்வதிலும் இருக்கிறது. அது உங்கள் கைவசமே இருக்கிறது.

உற்சாகமான உழைப்பும், புத்திசாலித்தன மான சிந்தனைகளும் இருந்தால் எதிலும் புதுமை படைக்கலாம். ஒரு மணி நேரம் செய்யக் கூடிய வேலையை பயிற்சியின் மூலம் அதற்கு முன்பாக முடிக்குமளவு செய்யத் தேர்ச்சி பெறுவதும் முன்னேற்றம் தான்.

உங்களுடைய எந்த ஒரு வேலையையும் ஒவ்வொரு முறை செய்யும்போதும் அதன் தரத்தை, அதன் வேகத்தை இன்னும் நேர்த்தியாகக் கூட்டுமளவு செய்வதும் ஒரு சாதனைதான். உங்களை நீங்களே தட்டிக் கொடுத்துக் கொள்ளும் சின்னச் சின்ன சாதனைகளே பெரிய சாதனைகள் படைக்க உங்களை ஈர்த்துச் செல்லும்.

உங்களுடைய ஒரு நாள் எப்படிப் போகிற தென்று சின்னச் சின்ன விடயங்களாக இருந்தாலுமே பட்டியல் போட்டுப் பாருங்கள். நீங்கள் என்னவெல்லாம் செய்கிறீர்கள் என்று எழுதிப் பார்க்கும் போது, நீங்கள் நினைத்துக் கொண்டிருப் பதைவிட அதிகமான வேலைகளை நீங்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பது உங்களுக்கு புலப்படும் அல்லது இன்னும் நேர்த்தியாகப் பயனுள்ளதாக நேரத்தை செலவிடலாமே என உங்களை 'productive'ஆக சிந்திக்கச் செய்யும்.

அப்படி உங்கள் அன்றாட செயலை நீங்கள் பட்டியலிடும்போது உங்களுடைய ஒரு நாளில் உங்களுக்குப் பிடித்த விடயம் எது நடக்கிறது, உங்களுக்குப் பிடிக்காத விடயங்கள் எத்தனை செய்கிறீர்கள், அதை உங்கள் மனம் எந்த அளவு ஏற்றுக் கொண்டுள்ளது அல்லது முரண்படுகிறது, என்பதை அலசிப் பார்க்க முடியும். உங்கள் சூழலில் உங்கள் திறமைக்குத் தீனி இருக்கிறதா அல்லது திறமை அற்ற விடயங்களில் உங்கள் நேரம் வீணாகிக் கொண்டிருக்கிறதா என்பதை முடிவு செய்யுங்கள்.

தவிர, உங்களுக்குப் பிடித்த சாதனை யாளர்களின் வாழ்க்கை வரலாற்றைப் படித்துப் பார்த்தால் அவர்கள் எந்த வகையில் தங்களை மேம்படுத்திக் கொண்டனர் என்பது புலப்படும். அப்படிப் புலப்படும்போது, உங்களையும் அறியாமல் உங்கள் ஆற்றல் விரிவடை யும். உங்களுடைய குறிக்கோளுக்கு ஏற்ப விருப்பத்திற்கு ஏற்ப உங்கள் திறமை அகன்று கொடுக்கும். என்னால் முடியும் எனும் உந்து சக்தி எழும்.

மொபைல் ஃபோன்கள் பயன்பாட்டிற்கு வந்த புதிதில் அவற்றில் பயன்படுத்திய 'சிம்பியன் ஓ.எஸ்' பற்றி அறிவீர்களா? மனிதர் செல்லும் இடங்களிலெல்லாம் தொடர்பில் இருக்கும் மொபைல் ஃபோன் இயங்குவதற்கு ஓர் இயங்கு தளம் தேவை என்ற ஒற்றை குறிக்கோளில்தான் அந்த மென்பொருளை உருவாக்கினர்.

இன்று உலகையே உள்ளங்கைகளில் கொண்டுவந்து சேர்க்கும் ஸ்மார்ட் ஃபோன்களை உருவாக்க அடித்தளம் அமைத்துக் கொடுத்தது சிம்பியன் ஓ.எஸ். அந்த மென்பொருளை உருவாக்கி யோருக்கு எந்த அங்கீகாரமும் தேவைப் படவில்லை. David Potter ஆரம்பித்த PSION Software Co கொண்டுவந்த அந்த



செயலியை இன்று பெரும்பாலானோர் அறிந்திருக்காததைப் பற்றியும் அவர்களுக்குக் கவலை இல்லை. ஏனென்றால் அவர்கள் குறிக்கோள் இந்த உலகைத் தாங்கள் இணைக்க வேண்டும் என்பதுதானே தவிர அதற்கான அங்கீகாரம் தங்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதல்ல.

பொதுவாக எது செய்தாலும் என்ன நோக்கத்திற்காக செய்கிறோம் என்பதை யோசியுங்கள் அல்லது ஓர் ஆக்க பூர்வமான நோக்கத்தை நீங்களே உருவாக்கிக் கொள்ளுங்கள். அப்படி செய்யும் போது வாழ்க்கையில் மகிழ்ச்சியையும் சேர்த்தே நீங்கள் உருவாக்கிக் கொள்கிறீர்கள் என்பதை புரிந்து கொள்வீர்கள்.

*விழிகள் விண் மீன்களை வருடினாலும் விரல்கள் ஜன்னல் கம்பிகளுடன்' எனக் கனவுகள் விண்ணைத் தொடலாம். ஆனால் என்னுடைய சூழல் கட்டுண்டதாகவே இருக்கிறது. இதில் நான் எங்கிருந்து முன்னேறுவது எப்படி மகிழ்ச்சியாக இருப்பது எனப் பல நேரம் வாழ்க்கை சலிப்பாகத் தோன்றலாம். அந்த நேரங்களில் உங்கள் கோணத்தை மாற்றி சிந்தித்துப் பாருங்கள். உங்கள் விரல்கள் ஜன்னலை தொட்டுக் கொண்டிருந்தாலும் உங்கள் விழிகள் விண்மீன்களை வருடிக் கொண்டிருக்கின்றன எனத் தன்னம்பிக்கை கொள்ளுங்கள்.*

*உங்களுக்கு இன்று எட்டாததாக இயலாமையாகத் தோன்றக் கூடிய ஒன்று நீங்கள் நினைத்தால் நிச்சயம் மாற்றக்கூடிய ஒரு விடயமே என்று அதை நோக்கிய பயணத்திற்குத் திட்டமிடுங்கள். உங்கள் ஆழ்மனம் உங்கள் ஆசைகளை செயலாற்றித்தர முன்நிற்கும்.*

*நம்மால் முடியுமென நினைக்கும்போது அதை செய்யக்கூடிய ஆற்றலும் கிடைக்கும். அது நீங்கள் சாதிப்பதற்கான களத்தை இனம் காணச் செய்யும். நீங்கள் விரும்பும் உயரத்தை உங்கள் கண்களில் தேக்கிக்கொண்டு தன்னம்பிக்கையோடு உங்கள் பயணத்தைத் தொடருங்கள். உங்கள் பாதை விரிவடையும். மகிழ்ச்சி மலரும்*

யோகா சோதிடம்

கிரகப்பொருத்தம் பார்த்தல் | சுபமுகூர்த்தம் கணித்தல்
பலன் பார்த்தல் | சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

# புகழ்பெற்ற ரென்னிஸ் வீரனின் கண்ணீர்க் கதை

**போரிஸ் பெக்கர்** (Boris Becker)

வாழ்க்கையை விளையாட்டாகக் கருதி எல்லாவற்றையும் இழந்து நிற்கும் ஒரு வீரனின் கண்ணீர்க் கதை. போரிஸ் பெக்கர் உலகத்தின் கனவு சிகரத்தின் உச்சியில் முகில்களுக்குள் தெரிந்த ரென்னிஸ் உலகின் அரசகுமாரன். இன்று எல்லாம் இழந்து நிர்க்கதியாகிப்போன கண்ணீர் கதை இது.

மதுபானம் மற்றும் தூக்க மாத்திரைகளாலும் model அழகிகளாலும் வெற்றிக் கிண்ணங்களையே விற்று வீதிக்கு வந்துவிட்ட இந்த நூற்றாண்டின் இன்னொரு இரத்தக் கண்ணீர்க் கதை.

வெற்றிப் பணத்தையெல்லாம் விழிவீச்சால் சூறையாடிபோன வேல் விழி மாதரெல்லாம் இன்று எங்கே? விழிகளைச் சுழற்றுகிறான் யாரையுமே காணவில்லை. ஏங்கித் தவித்து நிற்கின்றான் போரிஸ் பெக்கர்.

அதோ கரகோஷங்கள் வானைப் பிளக்கின்றன. விம்பிள்டன் மைதானம் நிரம்பி வழிகின்றது. பிரித்தானிய அரச குடும்பம் போரிஸ் பெக்கரின் ஆட்ட அழகை, அலங்காரத் தோரணையை ரசித்தபடியே அங்கே பல்கணியில் இருக்கின்றது. ஒரு சின்ன வைரக்கல் வெட்டிய ஒளிக்கீற்று மகாராணியாருடைய கண்களில், அடடா இவன் அல்லவா இந்தச் சூரியன். பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் இளவரசனாக இருந்திருக்க வேண்டியவன் என்ற ஒளி அரசியினுடைய கண்களில் மின்னித் தெறிக்கின்றது. ஒன்றா இரண்டா 1985,86, 89 என்று மூன்று தடவை அந்த வீரனின் கைகளை விம்பிள்டன் வெற்றிக்கிண்ணம் அலங்கரிக்கின்றது. பணம் தேம்ஸ் நதி போலப் பெருக்கெடுத்து ஓடுகின்றது. விம்பிள்டன் அருகிலேயே அவனுடைய புதிய வண்ண மாளிகை எழுந்து நிற்கின்றது. ஒன்றா இரண்டா ஆறு Grand Slam வெற்றிகள், அவுஸ்திரேலிய ஓபின் வெற்றி 1991,96 U.S.Open 1989 என்று 99வரை வெற்றிகள் பணம் எல்லாமே இவனுக்குத்தான் என்று காலமாம் பெரும் தேவதை சரித்து சரித்து கொட்டுகிறது அவன் காலடிகளில்.

உலகத்தின் மிகப்பெரும் பணக்காரர்கள் மட்டுமே சங்கமம் ஆகின்றன துபாய் நாட்டில் எழுந்து நிற்கின்றது பெக்கரின் வசந்த மாளிகை போன்ற மாபெரும் வர்த்தகம் மண்டபம். ஜெர்மனியில் பிறந்தாலும் பெக்கருக்கு ஒரு இந்தியத் தொடர்பும் இருக்கின்றது. இந்தியாவின் பிரபல ரென்னிஸ் வீரர் விஜய் அமிர்தராஜ் இரட்டையர் ஆட்டத்தில் தன்னோடு சேர்த்துக் கொண்ட ஒரு வீரன்தான் இந்த போரிஸ் பெக்கர். அன்று அவனுக்கு வயது 17 மட்டுமே. 1985ஆம் ஆண்டு இலை துளிர் காலம் றொற்றடாம் என்ற ஜெர்மனிய நகரத்தில் நடந்த ஆட்டத்தில் விஜய் அமிர்தராஜைஜே திகைக்க வைத்தான் அந்த இளைஞன்.

அன்று அவனை பூம் பூம் பெக்கர் என்று உலகம் போற்ற ஆரம்பித்தது. 6 அடி 3 அங்குலம் உயரம் கொண்ட ஆஜானுபாகுவான அவன் கையிலிருந்து அடிபட்டால்



ரென்னிஸ் பந்து துப்பாக்கிக் குண்டு போல் பறக்கும். அவனுடைய சேவீசோ அதைவிட வேகம். எதிரில் நிற்பவர் ஒருவேளை அவன் சேவீசை திருப்பி அனுப்பினால் அடுத்துவருவது அதைவிட வேகம். அதுபோல அவன் வெற்றிகளும் ஒன்றன் மேல் ஒன்றாக குவிய ஆரம்பித்தன. மழை போல மலைபோல. அவன் வெற்றிகளை பார்த்து அவன் உலகமே கைகொட்டி முழங்கியது. ஐம்பதாயிரம் பேர் கொண்ட மைதானங்கள் ஒரு இலட்சம் கரங்களினால் ஒவ்வொரு அடிக்கும் அவனை வாழ்த்தி வாழ்த்திப் பாடின. மூன்றே மாதங்களில் விம்பிள்டன் வெற்றி. ஆனால் அந்த வெற்றிக்கும் ஒரு நாள் வந்தது. விதிக்கும் அவனுடைய வெற்றியைப் பொறுக்க முடியவில்லை போலும். அதன் பின்னர்தான் அவன் வீழ்ச்சி ஆரம்பிக்கிறது.

1999 விம்பிள்டன் கடைசி வெற்றியின் பொழுது அவன் மனைவி பார்பறா பெக்கருடன் மோதல் பூகம்பமாக வெடிக்கிறது. அவள் வைத்தியசாலையில் பிரசவ வலியால் அலறி துடித்துக் கொண்டிருக்கின்றாள். ஆனால் இவனோ ரஷ்ய நாட்டின் மொடல் அழகி Ermakova Angela வுக்காக ஒரு ஹோட்டலில் காத்திருக்கின்றான். மலர்கிறது புதிய காதல். கேட்கிறதே குழந்தையின் குரல். ஆனால் அதை பெக்கர் கேட்க விரும்பவில்லை. புதிய காதலியுடன் 2003வரை ஆடம்பர வாழ்வு சுழல்கிறது. பணம் கரைகிறது, அவளுக்கும் பிறக்கிறது ஒரு குழந்தை. ஆனால் பெக்கரோ அந்தக் குழந்தை தன்னுடைய குழந்தை இல்லை என்கின்றார். DNA பரிசோதனை அது அவன் குழந்தைதான் என்று கூறுகின்றது. இப்படி வாழ்க்கையில் அவனுக்கு ஒரு தள்ளாட்டம். மனைவி பார்பறா பெக்கரை விவாகரத்துச் செய்கிறான். அதற்காகப் பெரும் பணத்தை இழக்க நேரிடுகின்றது. அத்துடன் அடுத்த கட்ட வீழ்ச்சி ஆரம்பமாகின்றது.

அன்று மோசமான விளையாட்டுக்களால் உடல் வலி காரணமாகத் தூக்கம் வராது தவித்தபோது போட்ட தூக்க மாத்திரை

(தொடர்ச்சி 31ஆம் பக்கம்...)

## EDUCATION

### Review Questions 20-6

➢ **CHEMISTRY 11**

A sample of crushed eggshell (2g), containing Calcium carbonate is mixed with 100 ml of 0.5mol/L HCl and then the excess HCl in the mixture was titrated with 22ml, 0.5mol/L NaOH. Determine the mass percent of Calcium carbonate in egg shell.

➢ **CALCULUS**

Differentiate the following.

(i) $\sqrt{\dfrac{1+x^3}{1-x^3}}$ (ii) $\sqrt{1+x^2}.sin^3\sqrt{x}$

➢ **Physics 11**

(i) Two balls are thrown vertically upward, one after the other with a 1.2 s time difference. Balls reach maximum heights at the same instant (these heights are different). If the initial speed of the first ball is 25.0 m/s, determine the initial speed of the second ball.

(ii) A 50 kg building material is pulled up vertically by a rope for a distance of 50m. The maximum tension that the rope is 600N. What is the shortest time, starting from rest in which the material can be brought up ?

### Answers 20-6

➢ **CHEMISTRY 11**

$CaCO_3 + 2HCl \rightarrow CaCl_2 + H_2O + CO_2$

Number of moles of HCl added , n= cv = 0.50 x0.10= 0.05 Excess HCl in the mixture was titrated with 22ml, 0.5mol/L NaOH ;
$NaOH + HCl \rightarrow NaCl + H_2O$

Number moles of NaOH , n= cv; n= 0.50x 0.022= 0.011mol ; Excess HCl in the mixture= 0.011mol

Moles of HCl reacted with $CaCO_3$ = 0.05-0.011 = 0.039

Moles of $CaCO_3$ = 0.039 /2

Mass of $CaCO_3$ = 0.0195 x 100= 1.95 g

Mass percent of $CaCO_3$ = (1.95 x100)/2= 98%.

➢ **CALCULUS**

$$\frac{d}{d_u} = \sqrt{u}\,\frac{d}{d_x}\left(\frac{1+x^2}{1-x^2}\right)$$

$$= \frac{3x^2}{\sqrt{(1+x^2)}\sqrt{(1-x^2)}}$$

(ii) $\sqrt{1+x^2}.sin^3\sqrt{x}$

Apply product rule

$$\frac{d_y}{d_x} = \sqrt{1+x^2}\,\frac{d}{d_x}\,sin^3\sqrt{x} + sin^3\sqrt{x}\,\frac{d}{d_x}\,\sqrt{1+x^2}$$

➢ **Physics 11**

(I)For the 2nd one, $v_1$ =0, $v_2$ = 12.0m/s, a= 9.8m/s²

$$t = \frac{12-19.6}{9.8} = 2\,s$$

First ball , t = 4s
Therefore distance fall $\Delta d = v_1t + ½\,at^2$
$\Delta d_1 = 0 + ½ \times 9.8 \times 4^2 = 78.4m$
Second ball , t = 2s
Therefore distance fall $\Delta d = v_1t + ½\,at^2$
$\Delta d_2 = 0 + ½ \times 9.8 \times 2^2 = 19.6m$
(ans=78.4m -19.6m = 58.8m)

First ball (A) Calculate the time required to reach maximum height
$V_f = V_i + a\,\Delta t$
$v_i$ =25.0m/s, $v_f$ = 0m/s, a= -9.8m/s² ;

$\Delta t = 2.5\,s$

For the 2nd ball(B)
$v_i$ =? , $v_f$ = 0m/s, a= -9.8m/s²;
$\Delta t$ = (2.5-1.2) s
$V_f = V_i + a\,\Delta t$ ; $V_i$ = 13.3m/s

II)




490 N (mass= 50kg)
$F_{net}$ = m a; $F_{net}$ =(600- 490)N;
110= 50x a; a= 2.2 m/s²

$\Delta d = V_i\,\Delta t + ½\,a\,\Delta t^2$ ; 30 = 0+ ½ x 2.2 $\Delta t^2$
t = 27.3s (ans: 27.3s)

☎ 647 341 3975
Dr. K.A. Srikrishnaraj
KEEN TUTORING CENTRE

# ஆழியவளை

**தொடர் கட்டுரை**

## யாழ்ப்பாணத்துக் கடலோரக் கிராமம் ஒன்றின் மரபும் மாற்றமும்



கந்தசாமி முத்துராஜா

கடந்த இதழ் தொடர்ச்சி

யாழ்ப்பாணத்து வாழ்க்கை பற்றிய சமூக மானிடவியல் ஆய்வுகள் ஒருபுறம் மிக மிகக் குறைவு. யாழ்ப்பாணத்தவர் எவருமே அத்தகைய நோக்கில் எழுதவில்லை எனலாம். (சித்தார்த்தனுடைய The Karmic Theatre ஓரளவில் விதிவிலக்கானது. ஆனால் அது கூடப் பண்பாட்டு நெருடலான விடயங்களைக் கூறவில்லை) மறு புறத்தில் எழுதப்பட்டவை எல்லாமே ஆங்கிலத்திலேயே உள்ளன. (பக்தவத்சல பாரதியின் நூலைத்தவிர தமிழர் மானிடவியல் பற்றிய நூல்களைத் தமிழில் காண்பது அரிது) முத்துராஜா மெச்சத் தகுந்த உணர்திறனுடன் சாதிகள் பற்றி விடயங்களை மிகத் தெளிவாகச் சொல்லு கிறார். இந்நூலின் எடுத்துக்கூறுமுறைமை, இந்த நூலினை ஒரு சமூக ஆவணமாக்கியுள்ளது.

இந்திய இலங்கைச் சூழலில் சாதி முறைமையின் ஒரு முக்கிய அம்சம், சாதிகளின் மேல் நிலையாக்கத்துடன் ஏற்படுகின்ற நவீன மயப்பாடு கொண்டு வரும் சமஸ்கிருத மயப்படுகையாகும். இந்த நூலில் அந்த சமஸ்கிருத நெறிப் படுகையை விபரிக்கும் அதேவேளையில் அதற்கு முந்தைய நிலையை மிகத் தெட்டத் தெளிவாக விபரிக்கின்றார். உண்மையில் யாழ்ப்பாணத்து மீன்பிடித் தொழில் பற்றிய இவரது விவரணத்தில் ஆசிய, ஆபிரிக்க மட்டங்களில் அபிவிருத்தி அடையாத நிலையில் நடை பெற்று வந்த மீன்பிடி முறைமைகள் மனக் கூச்சமின்றி சொல்லப்படுகின்றன. ஆழிய வளைக் கிராமத்தில் மீன்பிடி இருநிலை களில் செய்யப்படுகிறது. இச்சமூகத்தினர் ஆழ்கடலிலும் பரவைக் கடலிலும் பரிச்சய முள்ளவர்களாவர். இந்த மீன்பிடி முறைமைகள் எவ்வாறு ஒரு வாழ்க்கை முறையின் தளமாக அமைகின்றன என்பதனை இவர் நூலிலிருந்து தெளிவாக அறியமுடிகின்றது. உண்மையில், மரபு மாற்றங்களுக்குப் பின்புலத்திலுள்ள உற்பத்தி முறைமை மாற்றங்கள் மிக உன்னிப்பாகக் கவனிக்கப்பட வேண்டி யவை. நவீனமயவாக்கத்தின் வருகை, சந்தைப்படுத்தப்படல் முறைமை மாற்றங் கள், உபரிச் சேகரிப்பின் வேறுபடும் தன்மை ஆகியனவும் கல்வி, வீதிப் போக்குவரத்து வசதி போன்ற நவீன வாக்கச் செயற்பாடுகளும் எவ்வாறு அச் சமூகத்தை மாற்றியுள்ளன என்பதனைப் பொருளியல் வரலாறு நோக்குடன் பார்த்தல் அவசியம்.

இதில் ஆழியவளை என்னும் அலகு, வடமராட்சி என்னும் பிரதேச அலகினுள் இணையும் முறைமை, கிளிநொச்சி, பளை, யாழ்ப்பாணமாகிய பிரதான நகரங்களுடன் இணையும் முறைமை ஆகியனவற்றை நோக்கும் பொழுது உண்மையில் நாம் ஆழியவளைக் கிராமத்தின் வரலாற்றினூடாகவே, யாழ்ப் பாண மாவட்டத்தினது வரலாற்றின் தெரியப்படாத பக்கங்களுக்கு வருகிறோம். இந்த ஆய்வு, முதற் பட்டத்துக்கான இறுதி வருடத் தேர்வுத் தேவைக்காகச் செய்யப்பட்டது. எனவே இதற்குள் எல்லாம் இருப்பதாகவோ, பேசப்படுவதா கவோ கொள்ள முடியாது, கொள்ளவும் கூடாது. ஆனால் இந்த நோக்குமுறை முக்கியமானது.

தங்கள் தங்கள் வாழ்க்கைப் பின்புலம் பற்றிய தாழ்ச்சியுணர்வு, குற்றவுணர்வுகள் இல்லாமல் தயக்கமின்றிப் பட்டவர்த்தன மாக எடுத்துப் பேசும் பலம் வருகின்ற போதுதான் நாம் நமது பிரதேசத்தினுள், மாநிலத்தினுள் உண்மையான ஒற்றுமை, அதிலும் பார்க்க ஒருமைப்பாடு



உடையோர் ஆகிறோம். இந்நூல் என்னைக் கவர்வதற்கான இன்னொரு காரணம், அண்மைக் காலத்தில் வளர்ந்து வரும் பண்பாட்டாய்வியற் துறையின் (Cultural Studies) ஒரு முகிழ்ப்பினை இதிலே நான் காணுகிறேன். பண்பாட்டாய் வியல், பண்பாட்டு மானிடவியலிலிருந்து வேறுபடும் புள்ளி மையம் முக்கியமானது. பண்பாட்டு மானிடவியல், வாழ்க்கையின் பாரம்பரிய நடைமுறைகளுக்கு முக்கியத்து வம் கொடுக்க, பண்பாட்டு ஆய்வியலோ நவீன உலகின் இன்றியமையா வாழ்க்கை முறைகள் (ஊடகம், உடுப்பு போன்றவை) எவ்வாறு மக்களின் பண்பாட்டு இருப் பினையும் அவர்கள் நடைமுறைகளையும் விருப்பு வெறுப்புகளையும் பாதிக்கின்றன என்பதனைப் பற்றி ஆராய்கின்றது. இந்த ஆய்வியல் பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளிலேயே பெரிதும் வளர்ந்துள்ளது.

மூன்றாவது உலகநாட்டு சூழல்களில் இவை எவ்வாறு தொழிற்படுகின்றன என்பது பற்றிய ஆய்வுப் பரிச்சயம் மிகக் குறைவே. முத்துராஜா அவர்கள் ஆழிய வளையின் மாறிவரும் சமூகத்தின் சமூக ஊடாட்டங்கள், அரசியல் மயவாக்கம் போன்றவை பண்பாட்டு முறைமைகளுடன் குறிப்பாக புதிய குறியீடுகளைத் தோற்று விப்பதன் மூலம் அல்லது பழையனவற்றை எவ்வாறு புதுக்கி அமைத்துக் கொள்கின் றது என்பதன் மூலம் நிகழ்கின்றன என்பதைப் பற்றி எழுதவில்லை. ஒரே விடங்களில் ஆழியவளைப் பண்பாட்டை நாட்டார் நிலை (Folk) நின்று நோக்கு கின்ற ஒரு தன்மையும் காணப்படுகிறது. ஆயினும் இந்தத் தகவல்களினூடாக நாம் பண்பாட்டு ஆய்வியலுக்கான கூறுகளை மிகத் தெளிவாகக் காணக்கூடியதாக உள்ளது.

இந்நூலின் பிற்சேர்க்கையாக வரும் இறுதி அத்தியாயம் உண்மையில் நூல் ஏறத்தாழ முற்றுருப்பெற்றபின் சேர்க்கப் பட்டதாகும். ஏனெனில் இந்நூலின் அச்சுருவாக்கத்திற்கான படியைத் தயார் செய்த பின்னரே இவர் அந்த அத்தியா யத்திற் பேசப்பெறும் பயணத்தை மேற் கொண்டார். ஊரிலிருந்து திரும்பி வந்த பொழுது அவர் பதிவு செய்திருந்த மாற்றங்களை விபரித்தபொழுது அவை தவிர்ப்பின்றிப் பதியப்பட வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினேன். பிற் சேர்க்கையாக உள்ள அத்தியாயம் இந்நூலின் முழுமைக்கு உதவுகின்றது. ஏறத்தாழ 1950இல் இருந்து 2003 டிசம்பர் வரை ஏற்பட்ட மாற்றங்கள் இந்நூலிலே பதிவு செய்யப்பட்டுள்ளன.

சமூக மானிடவியல் ஆராய்ச்சிகளை மேற்கொள்வோர் தாம் ஒரு காலகட்டத்தில் ஆராய்ச்சி மேற்கொண்டு அவ்வாராய்ச்சி யினைப் பிரசுரித்தவர்கள், பதினைந்து

(தொடர்ச்சி 31ஆம் பக்கம்...)



Math tutorial407

Answers to tutorial 406

1)The length of the strip is 2(3.35) +3(2.25) =13.45

2)The first link contributes 2cm to the total ;length.

The second link ,and each succeeding link ,contributes only 1.5 cm to the total length (2.00 - 2x0.25)

The total length of a 100 link chain

3)There are 4 birds and 3 branches.

4)$y= 5\sin3(\O +30^{\circ}) -2$

5)Since the vertices in the xy plane , the coordinates in$R^3$ will be

(-7 ,3 ,0 ), B (3 ,1 ,0) and C92 ,-6 ,0 )

Now $\overline{AB}$ =(10 ,-2 ,0), $\overline{AC}$ =(9 ,-9 ,0 )

AND $\overline{AB}$ X$\overline{AC}$ =(0 ,0 ,-72 )

Area of triangle ABC=1/2(|$\overline{AB}$ X$\overline{AC}$ |)=72/2 =36

Tutorial 407 Questions

1)A ball which bounces straight up and down, falls from a height of 16m .Each time it bounces up to half the height from which it just fell. When the top of it bounce is 1m from the floor , find the total distance it has travelled

(for gr 6)

2)Each number in a sequence is obtained by adding the two previous numbers.The $6^{th}$ ,$7^{th}$ ,and the $8^{th}$ numbers of the sequence are 29 ,47 ,and 76 .Find the $3^{rd}$ number in the sequence ?rgr 8&9)

3)A mathematics contest has seven questions , each with 4 possible answers A ,B ,C , D .As well as,a student may choose not to answer any particular questions If 30000 students enter the contest.Is it possible every answer sheet different.

# புகழ்பெற்ற...

29ஆம் பக்கத்தொடர்ச்சி

களுடைய சிறிய பழக்கம் அதிகரிக்கின்றது. அதில் தஞ்சமடைய ஆரம்பிக்கின்றான். இரவு முழுவதும் அவனை தூங்க வைத்த தூக்க மாத்திரைகள் இப்பொழுதோ நான்கே மணி நேரத்தில் செயலிழந்து அவனை தூங்க வைக்க முடியவில்லை. இதனால் மீண்டும் இன்னும் இரண்டு மாத்திரைகள். அதுவும் பயனில்லாமல் போகிறது. என்ன செய்யலாம்? அதற்கு மேலால் விஸ்கியை ஊத்துகிறான். போதையும் தூக்கமும் தேடி அலைகின்றான். காதலிகளை மறக்க முடியவில்லை. விம்பிள்டன் அருகே கட்டிய விலை உயர்ந்த அவனுடைய மாளிகையும் 7 மில்லியன் யூறோக்களுக்கு ஏலம் போகிறது. ஒரு ராஜா அந்த விம்பிள்டன் வீதிக்கே வருகின்றான்.

இராஜதந்திர கடவுச்சீட்டு கையிலிருந்து பறிபோகிறது. துபாயில் இருந்த கடைத் தொகுதியில் மின்னிக் கொண்டிருந்த பெக்கரின் அலங்காரப் படம் கீழே இறக்கப் படுகின்றது. 7 மில்லியன் யூறோக்கள் நஷ்டம். தான் வங்குரோத்து நிலையை அடைந்து விட்டேன் என்று அவன் அரசுக்கு அறிவிக்கின்றான். ஆனால் அப்போதும் சில மில்லியன்களை அவன் கையில் வைத்திருந்த காரணத்தினால் ஏமாற்றினான் என்கின்ற சட்டத்தில் சிக்கி விடுகிறான். பாவம் இதனால் வங்கிக் கணக்குகள் மூடப்படுகின்றன. எதிர்வரும் 2030ஆம் ஆண்டுவரை பெக்கருக்கு வெறும் 500 யூறோக்களுக்கு மேல் உலகில் எந்த வங்கியும் கடன் கொடுக்கக் கூடாது என்று நீதிமன்றம் அறிவிக்கின்றது.

U.S.Open வெற்றிக்கிண்ணம் £150,250 என ஏலம் போனது. தொடர்ந்து 82 வெற்றிக் கிண்ணங்கள் பதக்கங்கள் எல்லாம் ஒவ்வொன்றாக ஏலத்திற்கு வந்து £52,100



விலை போயின. பணமும் போய் விட்டது. மேலும் சில வெற்றிக் கிண்ணங்கள் உள்ளன என்று ஏலம் விடுவோர் அறிவிக்கின்றனர். ஆனால் அவனோ தன் தாயிடம் அவற்றை பரிசாக அவளுக்கே கொடுத்து விட்டான். அதனால் அவனால் அவற்றை ஏலம் விட முடியவில்லை.

இப்போது மெல்பேர்ன் நகரில் உள்ள ஹோட்டல் பூல்மானில் (Pullman) 40 நிருபர்கள் அவனுக்காகக் காத்திருக்கின்றனர். அந்த ஐந்து நட்சத்திர ஹோட்டலில் ஒரு வாடகை அறை எடுக்கக்கூட இன்று பெக்கரிடம் பணம் இல்லை. நகரத்தில் ஒரு சாதாரண வீட்டில் எங்கோ அவன் இருப்பதாகத் தகவல் வருகின்றது. நிருபர்களுக்கு ஆச்சரியம். இத்தனை தூரம் அவன் விழுந்துவிட்டானா? பத்து முப்பதுக்கு வரவேண்டிய பெக்கர் பதினோரு மணியாகியும் வரவில்லையே எங்கே என்று கேட்கின்றனர். தூங்கிக் கொண்டிருக்கிறார் வந்து விடுவார் என்ற செய்தி வருகின்றது. நேரம் 11 அடிக்கின்றது. அதோ இரண்டு நிமிடங்கள் கடந்த நிலையில் ஒருவர் படிக்கட்டுகளால் வருவது தெரிகிறது.

களைத்துப்போன உடல், தளர்வுற்று தோற்றுப் போன ஒரு தொழில் அதிபரின் தளர்வுற்ற உடல். 52 வயதா இவனுக்கு? அதையும் மீறிய முதுமை தோற்றம். மெல்லிய இருமல், சிறிது தண்ணீரை குடிக்கிறான். தாமதம் எனது தவறுதான் ஆனால் நான் நேர்மையானவன் என்று அந்த அரங்கில் அவன் கூறுகின்றான். இப்போது ரென்னிஸ் உலகில் யாரெல்லாம் பிரபலங்கள் என்று வினவுகிறான் அதைக்கூடப் படிக்க அவரிடம் இப்போது நேரமில்லை. உறக்கத்தில் கிடக்கின்றான். ஏன் இன்று இளைஞர்கள் புதிதாக ரென்னிஸ் ஆட்டத்தில் வரவில்லை என்ற கேள்வியை எழுப்புகிறான். டென்மார்கின் ரென்னிஸ் தாரகை கரோலின் ஏன் ஆட்டத்தை நிறுத்தினாள் என்று அடுத்த கேள்வியை கேட்கிறான். பின் எனது வாழ்க்கை அதிசயமானது என்று விரக்தியாக சிரிக்கின்றான். 30 வருடங்களாகப் பொது வாழ்வில் உச்சத்தில் இருந்தேன் என்று தன்னுடைய கடந்த காலத்தை நினைவு மீட்கின்றான்.

அவனுடைய ஆட்டங்களை 1999இல் நிறுத்தினான். தேடியது எல்லாம் வெறும் இருபது வருடங்களில், இன்று இழந்து போய்விட்டான். இதுதான் வாழ்க்கை. வெற்றியே வாழ்வாக இருந்த மனிதனை தோல்வியே வாழ்வான மனிதனாக நேரடியாக பார்த்துக் கொண்டிருக்கிறோம் அவனுடைய கைகளில் எதுவும் இல்லை. தன் கைகளை தானே பார்க்கின்றான். பேட்டி முடிந்தது. எழுந்து வருவேன் என்று எழுந்து நடக்கின்றான் போரிஸ் பெக்கர். அவனால் மீண்டெளத்தான் முடியுமா? இன்று அவனுடன் துணைக்கு ஓர் உதவியாளர் கூட இல்லை.

விளையாட்டில் தோற்றால் சிலவேளை வெற்றி பெற்று விடலாம். ஆனால் வாழ்க்கையில் தோற்று விழுந்துவிட்டால் மீண்டெழுவது அவ்வளவு இலகு அல்ல என்பது அவன் நடையில் தெரிகின்றது. வாழ்க்கையையும் விளையாட்டாகக் கருதியதால் விழுந்துபோன போரிஸ் பெக்கறின் உடல் படிக்கட்டுகளில் மறைகிறது. கைகளை ஆட்டுகிறான். ஆனால் அதில் வெற்றிக்கிண்ணத்தைக் காணவில்லை. இது வாழ்க்கையை விளையாட்டாகக் கருதுகிற ஒரு விளையாட்டு வீரனின் உண்மைக் கதை.

# ஆழியவளை

30ஆம் பக்கத்தொடர்ச்சி

இருபது வருடங்களின் பின்னர் அங்கு மீளவும் சென்று தாம் விட்ட இடத்திலிருந்து ஏற்பட்ட மாற்றங்களைப் பதிவு செய்வர். இந்த எழுதுமுறையை ஆய்விடத்துக்கு மீளச் செல்லுதல் (Revisiting the Area of Study) என்பர்.

உண்மையில் ஆழியவளை எப்படி அண்மைக்காலப் பிரச்சினைகளினூடே நவீனவாக்கத்தைப் பெற்றுள்ளது என்பதும் இந்த நவீனவாக்கம் ஏற்படுத்தியுள்ள சமூக மாற்றமும் இந்தச் சமூக மாற்றத்தினைக் காட்டும் காட்சிப்புல மாற்றங்களும் அவற்றுக்கு மேலாக பெறுமான நியம மாற்றங்களும் எவ்வாறு நிகழ்ந்துள்ளன என்பதை மிகத் துல்லியமாக வெளிக்கொணருகின்றன. இந்தப் பிற்சேர்க்கை அத்தியாயந்தான் இந்த நூலை யாழ்ப்பாணச் சமூகத்தின் அடிநிலைப்பட்ட நுண்குறு (Micro - History) வரலாறாக, அந்த வரலாற்றின் மறுக்கமுடியாத ஒரு முக்கிய அம்சமாக முத்தாய்ப்பு வைக்கின்றது. இசை மொழியிற் கூறினால் அந்த அத்தியாயம் கவர்ச்சிமிக்க ஓர் 'ஆவர்த்தனத்தின்' வனப்புமிக்க 'தீர்மானமாகின்றது'.

இந்நூலின் முக்கியத்துவம் அது ஆழியவளையைப் பற்றித் தரும் தகவல்கள், தரவுகளில் மாத்திரம் தங்கியிருக்கவில்லை. யாழ்ப்பாணச் சமூகம், கட்டமைப்பு, பண்பாட்டுருவாக்கம் போன்ற விடயங்களைப் பார்ப்பதற்கான ஓர் அணுகுமுறை -புலமைக் குற்றங்கள் அதிகமில்லாத ஒரு கற்றறி ஒழுங்காற்றலுக்கான ஒரு விதை இதனுள் இருக்கிறது. இதுவே இந்த நூல் மிகப் பரந்துபட்ட நிலையில் வாசிக்கப்பட வேண்டும் என்பதற்கான தேவையாகும்.

இறுதியாக ஒரு குறிப்பு.

ஆழியவளையின் பெயர்ப்பொருத்தம் முதல் அங்கு காணப்படும் பொருளாதாரப் பண்பாட்டு நடைமுறைகள் எவ்வாறு ஐந்திணை மரபுக் காலத்துத் தமிழ் மரபின் தொடர்ச்சியைக் காட்டுகின்றன என்பது ஆழியவளைக் கரைவலை முறைமையை அகநானூற்றுப் பாடல் வரிகள் சிலவற்றின் தொடர்ச்சியாகப் பார்ப்பது மிகுந்த ஆச்சரியத்தைத் தருகின்றது. ஆகம மரபுகளுக்குள் அழிந்துபோன தமிழ்ப் பாரம்பரியத் தொடர்ச்சிகள் பலவற்றை மிகச் சாதாரண மக்களிடையே அவர்கள் பேச்சு வழக்கிலே காணக்கூடியதாக உள்ளது என்பது ஒரு மிக முக்கியமான அம்சமாக எனக்குப் படுகிறது.

பண்பாட்டு வளர்ச்சியில் முன்னேற்றங்களில் வேர் அறாத வளர்ச்சிகளே பொதுமைகளுக்குள் தனித்துவங்களைப் பேணுவதற்கு உதவுவதாகும். அவ்வகையில் இந்நூலின் பொருள், அதனிலும் பார்க்க அது சொல்லப்பட்டுள்ள நெஞ்சந் திறந்த எடுத்துரைப்பு முறைமை இந்த நூலின் மிக முக்கியமான பலம் என்று கருதுகிறேன். இதைச் சொல்கின்றபொழுது இது ஒரு முன்னோடிப் பணி என்பதனையும் மனத்திருத்திக் கொள்ளல் வேண்டும்.

- பேராசிரியர். கா. சிவத்தம்பி

# அகங்காரம்



அறியாமை என்னும் இருழில் மூழ்கி
அகங்காரப் பட்டு படு குழியில் வீழ்ந்து
அழிவுப் பாதையில் செல்லும்
இன்றைய மனித இனம்

போட்டியோடு கூடிய பொறாண்மையும்
கூடி இருந்து குழி பறிக்கும் குள்ளக்குணமும்
ஆசை என்னும் அசுரப்பசாசும் இணைந்து
ஆட்டிப் படைக்கிறது மனித இனத்தை

ஆணவத் திமிரினால் அதிகார வெறிகொண்டு
மதவாதம் பேசி மமதையும் செருக்கும் கொண்டு
மனதில் ஆணிவேராய் அடிவரை சென்று
ஆட்டம் போட வைக்கிறது அகங்காரம்

பணத்திமிராலும் பதவி மோகத்தாலும்
அகங்கார வெறி கொண்டு மனிதனை மனிதன்
கொன்று ஒழித்துச் சாகடிக்கும்
மாக்களாய் மாறிவிட்டான் மனிதன்

நானே கடவுள் நானே அனைத்து மென்று
இறுமாப்புக் கொண்ட இரணியனும்
அவனது அகங்காரத்தால் அன்று
அழித் தொழிக்கப்பட்டான்

தர்ம வழி சென்ற பாண்டவர்களுடன்
அதர்ம வழி சென்ற துரியோதனனும்
போர் புரிந்து அனைத்தையும் இழந்ததும்
அவனது அகங்காரத்தாலே தான்

எனவே நான் எனது என்ற ஆணவப்பிடியில்
சிக்கி அகங்காரம் என்னும் தீயில் வீழ்ந்து
வெந்து மடியாமல் அறவழி சென்று
நல்வாழ்வு வாழ முயல் வோமாக.



கவிநாதம் பரந்தாமன்

# யுத்தமில்லை சத்தமில்லை



கத்தியில்லை இரத்தமில்லை
கணத்தில் மூச்சடங்குதே
புத்திகெட்ட மானுடரால்
புவனமின்று புலம்புதே
சத்தியத்தின் மேன்மையின்று
சரிந்து வீழ்ந்து போனதே
இத்தரையில் இனித்த வாழ்வும்
இருமல் சளியில் கசத்ததே!

யுத்தமில்லை சத்தமில்லை
யுகத்தின்முடிவு நெருங்குதே
குற்றமில்லை குறையுமில்லை
குடும்பம் அழிந்துபோகுதே
கத்தும் கடலில் கப்பலில்லை
காற்றில் மிதக்கும் விமானம் இல்லை
கொத்துக்கொத்தாய் மனிதவுயிர்
கொள்ளை நோயால் மாளுதே!

குண்டுமில்லை குருதியில்லை
கொன்றுகுவிக்கப் படைகளில்லை
கூண்டுமில்லை
கொலைக்களங்களில்லை
கூற்றுவன் வரவுக்களவுமில்லை
தொணுடுமில்லை தொழிலுமில்லை
தோளில் சுமக்க ஆளுமில்லை
கண்டுகொள்ள யாருமில்லை
காய்ச்சல்கண்டு மாளுதே!

கறுப்புமில்லை வெளுப்புமில்லை
கணக்கு முடிந்து போகுதே
வெறுப்புமில்லை விருப்புமில்லை
விதிமுடிந்து போகுதே
பொறுப்புமில்லை புரிதலில்லை
பொசுக்கெனவே சாகுதே
மறுப்புமில்லை அறுப்புமில்லை
மரணமிங்கு நிகழுதே!

சண்டையில்லை சமாதானமில்லை
சாதல் மட்டும் இருக்குதே
தொண்டை கட்டிப் போவதனால்
தொல்லை வந்துசேருவேதே
மண்டையிலே சளிபெருகி
மரணம்தன்னை அழைக்குதே
குண்டைவீசிக் கொல்லாமலுயிர்க்
குறைப்பு இங்கு நடக்குதே!

பொல்லா உலகப்போர்களினால்
பொசுங்கிப்போனது எத்தனைகோடி?
செல்லாக்காசாகி வீழ்ந்தது
செம்மைமிகு பொருளாதாரம்
வல்லமை கொண்ட நாடுகளின்
வக்கரத்தாலே வந்ததிந்த
கொல்லும் கொரோனா பாதிப்பு
கொடுமனத்தோரின் சாதிப்பு!

சீனநாட்டின் சீற்றமிதா?
சீண்டும் நாட்டின் மாற்றமிதா?
தானதர்மம் பண்ணாத
தற்குறி நாட்டின் செயலிதுவா?
ஆனது ஆயிற்று அழிவைநோக்கி
ஆரம்பம் ஆயிற்று உலகழிவு
வானமும் பூமியும் வாழ்ந்திருக்கும்
வையத்தில் வாழ்ந்திட உயிரேது?



கவிஞர் புரட்சிபாலன்
வன்கூவர்

# ஈழத்துக் காந்தியாம் எங்கள் செல்வா!



செந்தமிழர் தலைவனாய்ச் சேவை செய்த
செப்பரிய நாயகமாம் செல்வா என்றும்
நந்தவன மாகவே நாடு போற்ற
நன்மைகள் செய்துசென்ற நற்ற லைவன்
விந்தைபல காட்டியே விளங்க வைத்தே
விடுதலைக்காய் வித்திட்ட வீரச் செம்மல்
அந்தரங்கம் ஏதுமற்ற ஆனந்த சோதி
ஐயனவர் எம்மைவிட் டகன்றா ரன்றே.

சட்டத் தரணியாய்ச் சாதனை செய்தே
சகலரையும் ஒன்றிணைத்தே தமிழர்க் காக
திட்டமிட்டே கட்சியொன்றைச் சீர்மு றையில்
செப்பமுற அமைத்ததனைப் பதிவு செய்தே
பட்டதாரிச் சமுகமுமே பங்கு பற்றப்
பட்டிதொட்டி எங்குமே படரச் செய்தார்
சுட்டெரிக்கும் வெய்யிலிலே சூறா வளியாய்
சூழ்ந்துவரத் தொண்டர்கள் பாத யாத்திரை.

பிரதேச வாதத்தைப் பேசித் தீர்த்தார்
பிற்பட்ட மக்களின் பேதம் நீங்க
இரவுபகல் பாராது இணைத்துப் பேசி
ஏற்றநல் முடிவுகளை ஏற்பாய்ச் செய்தார்
கரங்கொடுத்தார் மக்களுமே கவன மாக
கண்ணியம் கட்டுப்பாடு காக்கும் நோக்கில்
சிரமத்தைப் பார்க்காத சிந்தனைச் செல்வர்
சிங்களத்தை விட்டுவிட்டு சமஸ்டி கேட்டார்.

வன்முறையை என்றுமே ஏற்றி டாதே
வாழ்ந்துகாட்டிச் சென்றவர்தான் செல்வா தானே
இன்னலுற்றார் சிங்களச் சட்டத் தாலே
ஈழத்துக் கேற்றதே சமஸ்டி என்றார்
தன்னலம் நோக்காதன் சொத்தை விற்றே
தமிழர்க்காம் கட்சியொன்றைத் தாபித்துக் கொண்டே
கன்னித் தமிழுக்கோர் கலங்கரை விளக்காய்க்
கவினொளிர் சுதந்திரனைக் கற்கத் தந்தார்.

தேர்தலிலே வெற்றிகண்டார் சிறப்பாய்த் தானே
தேம்பலின்றிப் பேச்சுவார்த்தை செய்து கொண்டே
அர்த்தமுள்ள ஒப்பந்தம் ஐய மின்றி
ஆற்றலுள்ள பண்டார நாயக செல்வா
ஈர்ப்பாகச் செய்ததனை இணைந் தேற்க
எதிர்ப்புக்கள் எதிர்கொள்ள கிழித்தெ றிந்தார்
சீரான இலங்கையின்று சீரழிந்து போகச்
சிங்களத்தின் இனவாதம் சிந்தும் தீயே.

- முருகேசு மயில்வாகனன் -

# ஔடதம் இப்போ அதுவாகும்!



அவசிய மின்றிப் போகாதே
ஆபத்து அங்கு காத்திருக்கு
இஞ்சியை மஞ்சளை மறவாதே
ஈரமாய் தொண்டையை வைத்துவிடு
உலாபோதல் நினைப்பை விட்டுவிடு
ஊரது நலத்தை உணர்ந்துவிடு
எச்சிலை வெளியில் துப்பாதே
ஏற்காத எதுவும் உண்ணாதே
ஐயம் வந்தால் வாங்காதே
ஒன்றையும் தொட்டிட விரும்பாதே
ஓரிடம் தேர்ந்து இருந்துவிடு
ஔடதம் இப்போ அதுவாகும்!

கட்டாயம் மிளகை சேர்த்துவிடு
காஷாயம் நன்றாய் குடிக்கநினை
கிட்டவே நிற்பதைத் தவிர்த்துவிடு
கீரை உணவில் சேர்த்துவிடு
குடிக்க மதுவை எண்ணாதே
கூடிக் கும்மாளம் அடிக்காதே
கெட்டித் தனமாய் நடந்துவிடு
கேடுகள் உன்னை அணுகாது
கைகளை நாளும் கழுவிவிடு
கொதிக்க வைத்தே நீரைக்குடி
கோரமாய் கொரனோ வருகிறது
கௌரம் பேணிட மறக்காதே!
(கௌரம்-சுத்தம்)

சங்கடம் இப்போ நிறைந்திருக்கு
சாவாய் கொரனோ வந்திருக்கு
சித்திரம் வரைய சுவர்வேண்டும்
சீலமாய் இருத்தல் சிறப்பாகும்
சுத்தம் என்பது முக்கியமே
சூழ்ந்து இருளாய் இருக்கிறது
செல்லும் பாதை சீராக
சேமமாய் இருக்க எல்லோரும்
சைவ உணவை நாடிடுவோம்
சொற்களைக் கவனமாய் கேட்டிடுவோம்
சோம்பலை தவிர்க்கப் பயிற்சிசெய்வோம்
சௌக்கியம் எங்கள் சொத்தாகும்!



எம். ஜெயராமசர்மா
மெல்பேண் அவுஸ்திரேலியா

# உள்ளுவதை நல்லதாக உள்ளவேண்டும்!

பேசுலகின் பாவஇருள் போக்கிடவந்த _அந்தப்
பெருமகனார் பிறந்தஇந்த நல்லநாளிலே
யேசுபிரான் பிறப்புணர்த்தும் மனிதநேயத்தை _நாங்கள்
நேர்மையோடு கடைப்பிடிக்க உறுதிபூணுவோம்!

சொந்தநலன் ஒன்றைமட்டும் நெஞ்சில்நிறுத்தி _என்றும்
சோறுதேடும் வாழ்க்கைஒரு வாழ்க்கையாதம்பி
மந்தைபோன்று வாழ்வதைநாம் வாழ்க்கைஎன்பதா _நாங்கள்
மானிடர் என்பதிலோர் அர்த்தமில்லையா?

புத்தாண்டு எமதுநெஞ்சில் புதியஉணர்வை _என்றும்
பூக்கவைக்கும் ஆண்டாக மலர்ந்திடவேண்டும்!
செத்தஆண்டு நடந்தவற்றை மறந்திடுவோமா? _நாங்கள்
திருந்தியதைக் காட்டஒன்று சேர்ந்திடுவோமா?

உள்ளுவதை நல்லதாக உள்ளுதல்வேண்டும்! - வாயில்
உண்மையோடு நேர்மைசேர்த்துச் சொல்லுதல்வேண்டும்!
கள்ளமின்றி நடந்துலகை வெல்லுதல்வேண்டும்! - பார்த்துக்
காய்பவரும் வாயடைக்கப் பண்ணுதல்வேண்டும்!

சபா. அருள்சுப்பிரமணியம்




# குழந்தைகளும் மனச்சோர்வும்

## Children & Depression

### குழந்தைகளில் மனச்சோர்வு என்றால் என்ன?

ஒரு குழந்தை வளரும்போது, அவ்வப்போது சோகமாக, காயப்பட்டதுபோல், வருத்தமாக... இப்படிப் பல உணர்வுகளைக் கொண்டிருப்பது இயல்புதான். ஆனால், சில குழந்தைகளுக்கு இந்த உணர்வுகள் நீண்ட நேரம் நீடிக்கலாம். இது அவர்களுடைய உணர்வு மற்றும் மனநலத்தில் தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

குழந்தைகளுக்கு வரும் மனச்சோர்வு மிகவும் கவலை தரும் விடயம். ஒரு குழந்தை எப்படிச் சிந்திக்கிறது, எப்படி உணர்கிறது மற்றும் எப்படி நடந்துகொள்கிறது என்பதை இது பாதிக்கக்கூடும், அந்தக் குழந்தையின் வாழ்க்கைத் தரத்தையே பாதிக்கக்கூடும்.

### குழந்தைகளில் மனச்சோர்வுக்கான அடையாளங்கள் என்ன?

மனச்சோர்வு பொதுவாக பெரியவர்களுடைய நோய் என்று கருதப்படுகிறது. அது குழந்தைகள் மற்றும் வளர் இளம் பருவத்தினரைப் பாதிக்கும்போது அதனை அடையாளம் காண்பது குறைவு. பெரியவர்களுடன் ஒப்பிடும்போது இந்தப் பிரச்சினைக்கான அறிகுறிகள் குழந்தைகளில் கொஞ்சம் மாறியிருக்கின்றன. இந்த அறிகுறிகளை அடையாளம் காண்பதுதான் குணப்படுத்துதலின் முதல்படி.

### மனச்சோர்வு கொண்ட ஒரு குழந்தை இவ்வாறெல்லாம் இருக்கக் கூடும்:

படிப்பில் அதன் ஆர்வம் குறையக்கூடும், பாடசாலையில் அதன் செயல்திறன் திடீரென்று குறையக்கூடும், பாடசாலைக்கு செல்ல மறுக்கக்கூடும், அதன் கவனம் சிதறக்கூடும், படிப்பிலோ மற்ற வேலைகளிலோ கவனம் செலுத்த இயலாமல் இருக்கக் கூடும், எளிதில் களைப்படைந்து சோம்பேறித்தனமாக உணரக்கூடும், பசி எடுக்காமல், தூக்கம் இல்லாமல் இருக்கக் கூடும், சிந்தித்தல் மற்றும் தீர்மானம் எடுத்தலில் தடுமாறக்கூடும், சிறிய விடயங்களுக்கும் எரிச்சல் அடையக் கூடும், காரணமில்லாமல் அழக்கூடும், தனக்குத் தலைவலி அல்லது வயிற்றுவலி என்று சொல்லக்கூடும், ஆனால் அந்த நோய்க்குச் சிகிச்சை எடுத்தால், அதற்கு எந்தப் பலனும் இருக்காது, நண்பர்களுடன் விளையாட மறுக்கக்கூடும், அவர்கள் முன்பு மகிழ்ச்சியோடு செய்த செயல்களில் இப்போது ஆர்வம் இல்லாமல் இருக்கக்கூடும்.





### குழந்தைகளில் மனச்சோர்வு எதனால் ஏற்படுகிறது?

இன்றைய போட்டி நிறைந்த உலகத்தில் குழந்தைகள் படிப்பிலும் மற்ற பொழுதுபோக்குகளிலும் சிறப்பாகத் திகழ வேண்டும் என்று தேவையில்லாத சுமைக்கு ஆளாகின்றனர். ஒவ்வொரு குழந்தையும் தனித்துவமானது என்கிற உண்மையைப் பெற்றோரும் ஆசிரியர்களும் கவனிப்பதில்லை. குழந்தைகள் ஒரு கண்டிப்பான அமைப்பைப் பின்பற்ற வேண்டும், விதிமுறைகளின்படி நடக்கவேண்டும் என்று வற்புறுத்தப்படுகின்றனர். இது அவர்களுக்கு மிகுந்த மன அழுத்தத்தைத் தருகிறது. இதனை அவர்களால் கையாள இயலுவதில்லை. குழந்தைகள் வீட்டிலிருந்தாலும் சரி, பாடசாலையிலிருந்தாலும் சரி, அவர்களுடைய நேரத்தில் பெரும்பகுதி கல்வியிலேயே செல்கிறது என்பதால் குழந்தைகளில் மனச்சோர்வுக்கு இது ஒரு மிகப் பெரிய காரணமாக இருக்கலாம். அதே சமயம் குழந்தையின் மன ஆரோக்கியத்தைப் பாதிக்கக்கூடிய மற்ற உளவியல், சமூகக் காரணிகளும் உள்ளன. உணர்வு மற்றும் மன எழுச்சி நிலைகளைக் கையாள இயலாத குழந்தைகளுக்கு மனச்சோர்வு வரக்கூடும்.

### குழந்தைகள் மற்றும் பதின் பருவத்தினரில் பின்வரும் காரணங்களால் மனச்சோர்வு ஏற்படக் கூடும் எனக் கண்டறியப்பட்டுள்ளது:

வீட்டிலுள்ள பிரச்சினைகளால் ஏற்படும் தொடர்ச்சியான மன அழுத்தம், உதாரணமாக, குடிக்கின்ற அல்லது சண்டை போடுகின்ற பெற்றோர், அதிர்ச்சிகரமான நிகழ்வுகள், உதாரணமாக வன்முறை, உடல் சார்ந்த அல்லது உள்ளம் சார்ந்த துன்புறுத்தல் அல்லது புறக்கணிக்கப்படுதல், மற்ற குணப்படுத்தப்படாத மனநல நிலைகள், உதாரணமாக, பதற்றக்

(தொடர்ச்சி 34ஆம் பக்கம்...)




# இதற்கோர் மருந்துண்டா?

ஆடலரச னினாட்ட அரங்கேற்றம் கொரோனா
தேடவேண்டாம் தேர்ந்தமருந் திதற்கென் றுமே
பாடந்தான் மக்களுக்குப் பார்த்துத் திருந்தாவிட்டால்
ஈடிதற்கு வேறில்லை ஏற்றதோர் காலமுண்டே!

இயற்கையாம் காடுந்தி ஏற்றமுறு மலைவளங்கள்
தயக்கமின்றி அழித்ததனால் தாங்கொணா இயற்கைமாதா
மயக்கமுற்ற காரணத்தால் மாசுற்ற பாரினது
துயர்போக்கி பக்குவப் படுத்தற்காம் பயன்பாடே.

புதியதோர் உலகங் காணப் புனிதராம்
பதியரசன் பார்வையிலே பழமைபோக்கிப் புதுமைகாண
உதித்ததோர் செயற்பாடென்றே ஊகிக்க இடமுமுண்டே
சதியென்றே எண்ணிவிட்டால் சாத்திரங்கள் ஏதுமில்லை.



பழையன கழிதலும் புதியன புகுதலும்
களம்பல கண்ட காட்சிக ளாயினும்
இளந்தலை முறையினர் இதற்கோர் உதாரணம்
வளம்பல காண வழிமுறை காண்பரே.



பேராசை கொண்டோரின் பெரும்பிழை யாலே
சீரா யமைந்த சிறப்புறு இயற்கையாம்
வேராம் காட்டை யழித்தே களனியாக்கி
ஊருணி யழித்தே உயர்கட்டி டமாக்கியும்,

மாபெரும் பிழைகளால் மக்களுக்கு மக்களால்
ஆபத் துண்டாக்கி அல்லற் படுத்திய
சாபம் இதற்கோர் சான்றா மென்பர்
தூப மிட்டோரே துணையா மிதற்காம்.

தன்வினை தன்னையே சுட்டெரிக்கும் மென்பரே
உன்னையே நீகாக்கில் ஊறுகள் செய்யாதே
இன்னல் இல்லா உலக மொன்றை
அன்னை பராசக்தி அருளால் காண்பார்.

முருகேசு மயில்வாகனன்

# குழந்தைகளும்...

33ஆம் பக்கத்தொடர்ச்சி

குறைபாடுகள், குழந்தையின் தன்னம்பிக் கையையும் செயல்திறனையும் பாதிக்கக் கூடிய கற்கும் பிரச்சினைகள், குழந்தை களில் மனச்சோர்வு மிகக் குறைவாகத் தொடங்கி நடுத்தர அளவுக்குச் சென்று தீவிரமாகவும் ஆகலாம்.

மிதமான மனச்சோர்வு என்பது, ஒரு குழந்தையைச் சோகமாக உணரச் செய்யும், ஆனால் அந்தக் குழந்தையால் சாதாரணமான வாழ்க்கையை வாழ இயலும். அந்தக் குழந்தை தினசரி வேலைகளைச் செய்யவோ அல்லது பாடசாலை வேலைகளைச் செய்யவோ அதிக ஆர்வம் காட்டாமல் இருக்கலாம். ஆனால் பெற்றோரின் ஆதரவு, எளிய வாழ்க்கை முறை மாற்றங்களின்மூலம் அந்தக் குழந்தை மிதமான மனச்சோர் விலிருந்து குணமாகிவிடலாம்.

நடுத்தர மனச்சோர்வு குழந்தையின் வாழ்க்கையை குறிப்பிடத்தக்க அளவு பாதிக்கலாம். அந்தக் குழந்தை எப் போதும் துயரத்துடனும் சுறுசுறுப்பில்லாம லும் உணரலாம். தன் குழந்தையிடம் மனச்சோர்வுக்கான இந்த அறிகுறிகள் காணப்படுவதாக ஒருவர் நினைத்தால், அவர் தன்னுடைய குடும்ப மருத்துவரைத் தொடர்பு கொள்ளவேண்டும், ஒரு மனநல நிபுணரின் உதவியை நாடவேண்டும்.

தீவிர மனச்சோர்வு ஒரு குழந்தையை மதிப்பற்றதாக உணரச்செய்யலாம். அந்தக் குழந்தைக்குத் தொடர்ச்சியாக எதிர்மறை எண்ணங்கள், சோக உணர்வுகள் ஏற்பட லாம், அதனை அந்தக் குழந்தையால் சமாளிக்க இயலாமல் இருக்கலாம். தன் குழந்தையிடம் தீவிர மனச் சோர்வுக்கான அடையாளங்கள் தென்படுகின்றன என்று ஒருவர் நினைத்தால், எவ்வளவு சீக்கிரம் இயலுமோ அவ்வளவு சீக்கிரம் குழந்தையை ஒரு மருத்துவரிடம் அழைத்துச் சென்று சிகிச்சையைத் தொடங்குவது நல்லது.

## மனச்சோர்வுக்குச் சிகிச்சை பெறுதல்

மனச்சோர்வு ஒரு குழந்தையுடைய உடல் நலம், மன நலம், கல்விச் செயல் திறன் மற்றும் தினசரி வாழ்க்கையைப் பாதிக்கி றது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள அறிகுறி களில் இரண்டு அல்லது அதற்கு மேல் ஒரு குழந்தையிடம் இருப்பதை நீங்கள் பார்த்தீர்களானால் முதலில் நீங்கள் ஒரு குழந்தைநல மருத்துவர் (pediatrician) அல்லது மனநல நிபுணரைச் (mental care expert) சந்தித்து ஆலோசனை பெற வேண்டும். பிரச்சினை எவ்வளவு தீவிரமாக இருக்கிறது என்பதைப் பொறுத்து மருந்து கள் மற்றும் சிகிச்சை வழங்கப்படலாம். அறிவாற்றல் நடத்தைச் சிகிச்சை (Cognitive behavioral therapy - CBT) மனச்சோர்வை நன்கு குணப்படுத்துவதாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

**குறிப்பு:** குழந்தைகளிடையே இருக்கக் கூடிய மனநலப் பிரச்சினைகளைக் கை யாள்வதற்காக ஆசிரியர்களுக்கு மனநலம் பற்றிய பயிற்சி வழங்கப்பட வேண்டும்.
மனச்சோர்வு உள்ள குழந்தையைக் கவனித்துக் கொள்ளுதல், குழந்தையின் மனச்சோர்வைச் சமாளிக்கப் பெற்றோர் உதவலாம். அதற்கான சில வழிகள் இவை:

மனச்சோர்வைப் பற்றித் தெரிந்து கொள்ள லாம். இந்த நிலையைப் பற்றிப் புரிந்து கொள்வதன் மூலம் பெற்றோர் அவர்களை இன்னும் நன்றாகக் கவனித்துக் கொள்ள லாம். தங்கள் குழந்தைக்கு மிகவும் தேவையான ஆதரவை அளிக்கலாம். சிபாரிசு செய்யப்படும் சிகிச்சையின்படி குழந்தை சிகிச்சை பெறுவதற்கு உதவ லாம். மருத்துவர் ஏதேனும் மருந்துகளைச் சிபாரிசு செய்திருக்கிறார் என்றால் அந்த மருந்துகளைக் குழந்தை சரியான நேரத் தில் தொடர்ந்து எடுத்துக் கொள்வதை உறுதிசெய்யலாம். தங்கள் குழந்தையுடன் அனுதாப உணர் வோடு பேசி அவர்கள் சொல்வதைக் கேட்கலாம். அவர்கள் தங்கள் மனத்தில் உள்ளதை வெளிப் படுத்த அனுமதிக்கலாம். அவர்கள் இப்படித்தான் என்று எந்தத் தீர்ப்பையும் வழங்கவேண்டாம். மனச்சோர்வைத் தூண்டக்கூடிய எச்சரிக் கைச் சின்னங்கள் மற்றும் சூழ்நிலை களைக் கவனிக்கலாம், அத்தகைய சூழ்நிலைகளைத் தவிர்க்க முயற்சி செய்யலாம்.

தங்களுடைய குழந்தை இந்தப் பிரச் சினையிலிருந்து குணமாவதற்குத் தாங்கள் எப்படி ஆதரவளிக்கலாம் என்பதைக் கண்டறிய, மருத்துவர்கள், ஆசிரியர்கள், மற்ற நிபுணர்களுடன் இணைந்து பணியாற்றலாம்.

தங்கள் குழந்தையின் உடல்நலத்தைக் கவனித்துக் கொள்ளலாம். உடற்பயிற்சி அல்லது உடல்சார்ந்த சுறுசுறுப்பான வேலைகள் குழந்தையின் மனநிலையை மேம்படுத்த உதவும். தங்களுடைய குழந்தை ஊட்டச்சத்தான உணவுகளை உண்ணுவதை இவர்கள் உறுதி செய்ய லாம். அவர்களுடைய உடல் மற்றும் மன நலத்திற்கு அது முக்கியம்.

நன்றி: White Swan Foundation



ஒரு எலுமிச்சம் பழம் எடுத்து இரண்டாக வெட்டி அதன் சாற்றை பிழிந்து கொட்டி விடுங்கள் அதன் தோலை பொடிப்பொடியாக நறுக்கி அதனுடன் ஒரு மிக மிக சிறிய அளவு இஞ்சியை துருவி சேர்த்து ஒரு பெரிய டம்ளர் நீரில் போடுங்கள் அதை அடுப்பில் சிம்மில் வைத்து கொதிக்க வைக்கவும் ஒரு கொதி வந்தவுடன் இறக்கி வைத்து குடிக்கும் அளவு சூடு வந்ததும் வடிகட்டி அந்த நீரை வெறும் வயிற்றில் குடியுங்கள் 30 நாள். இதயத்தில் அடைப்பு இருந்தாலும் காணாமல் போய்விடும். கிட்னி, லிவர் 10 வயது குழந்தையை போல் ஆகிவிடும். இது ஒரு அனுபவ உண்மை.

# MORTGAGE SOLUTIONS

SAVE UPTO 75% REFINANCE

## MONTHLY SAVING

$2,409

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credit Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.9% | | $1,605.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,524.55 |



**KIRUBA THANABALASINGHAM**

Mortgage Agent Lic# M12002440

info@mortgagesolutions.ca

www.MortgageSolutions.ca

Ultimate Mortgage and Finance Solutions Inc. Lic#11995

## Prime + 1% Lower Rate

$50,000 EQUITY LOAN

GET APPROVED WITHIN 24 HOURS


416.298.2777

$375 Mo.

## MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5


BUYING OR SELLING
Indra Michael Xavier
Sales Representative
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
905-201-9977


we always care at . . .
Bridletowne Dental
Dr. Jeyapalan. BDS., DDS.
(University of Toronto)
Dentist
416 492 3775
Bridletowne Dental
2555 Warden Avenue. Scarborough M1W 2H5
( close to Warden and Finch , in the TD BANK PLAZA)


வீடு வாங்க,விற்க,வாடகைக்கு பெற்றிட...
வைத்திய பரிசோதனையற்ற காப்புறுதிக்கும்...
Vany Jeganmohan
Realtor/Financial Advisor
416.670.7436
www.vanyhomes.ca
www.vjsfinancial.ca
✓ Buy/Sell/ Lease
✓ Life Insurance
✓ Super Visa
✓ Non Medical
✓ RESP
VJS Financial Services
We ease your cost of living
5215 Finch Ave East, Unit 222 Toronto ON M1S 0C2



PLUS YOU
DRIVING SCHOOL
CERTIFIED ROAD SAFETY INSTRUCTOR
NOW HIRING
DRIVING INSTRUCTORS
Training will be provided
For more Info:
Balan 416.999.7727


வீடு வாடகைக்கு...
வாங்க...
விற்க...
Vasanta Raviendren
Realtor/Financial Advisor
Cell: 416-716-1540
Life Insurance
Non Medical
Super Visa
RESP
Mega Financial Group
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave East. Unit 203 Toronto ON M1S 0C2


IT'S YOUR MOVE...
Let me help you make the right one.
Century 21
Titans Realty Inc.,
Brokerage.
Sudharshan
Muthucumaraswamy
Broker
Direct: 416.567.6209
Office: 416-289-2155
TEAM TITANS
Residential / Commercial / Purchase / Sale / Investment / Leasing


வீடு வாங்க, விற்க நட்பான சேவை
Ponnambalam Mahalingam
Sales Representative
Dir: 416.729.0955
arunponmahal@gmail.com
HomeLife/ Future Realty Inc. Brokerage*
7 Eastvale Dr., Suite 205 Markham ON L3S 4N8 Bus: 905.201.9977
வருமான வரி சேவை Income Tax e-File
416.288.1548 / 416.729.0955


Coaching • Yoga • Meditation • Healing • Astro Guidance
S&S
Varany Sivathasan
Life Coach • Healer
Yoga & Meditation Instructor
416.875.0553
info@ssevolve.com
Unit 8, 151 Nashdene Court, Scarborough,ON M1V 2T3


ATSEY
FINANCIAL GROUP LTD
MORTGAGE STRESS?
WORK WITH ALL MAJOR LENDERS
2nd and private financing available.
Call 416.333.9393
MORTGAGE ALLIANCE
PURCHASE • REFINANCE • INVESTMENT PROPERTIES


ROYAL MEDICAL AND
PROFESSIONAL CENTRE
2225 Markham Road, Scarborough
UNITS AVAILABLE FOR SALE
Amalraj Joseph
Sales Representative
416.300.8294
amalraj.joseph@gmail.com
HomeLife/GTA Realty Inc. Brokerage*


B.J ரெய்லரிங் அன் ஜுவலரி
TAILORING & JEWELLERY CLASSES
We provide training in
Jewellery making and Tailoring
தையல் பயிற்சி மற்றும் ஜுவலரி செய்யும் முறைகள்
கற்றுக் கொடுக்கப்படும்
தொடர்புகளுக்கு: 416-720-4472
email: jegathees2007@gmail.com


HOMES & CONDOS FOR SALE
Brock/Rossland - Whitby
For sale
Gas Station
York St/Bremner St - Toronto
$699,900
Condo Apt - 2BR/1WR
Cambray Rd/North St - Kawartha
$369,900
Bungalow -2BR/1WR
1st & 2nd mortgage availabe upto 1Million
Specialized in New Condos & Cottages
A.ANTON JEEVA, FRI
Broker
Dir: 416.575.5055
anton.jeeva@gmail.com
www.getanton.com
RE/MAX
ROYAL PROPERTIES INC
Phone: (416) 321-0110


www.tamilvanakkam.com
Tamil
VANAKKAM
தமிழ் வணக்கம்
உலகத் தமிழர்களின் இணைப்புப் பாலம்